
www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்


சரிநிகா சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 140 பெப். 12 - பெப். 25, 1998 விலை ரூபா 10.00



## அஷ்ரஃப் V பௌஸி





## தம்பலகாமம் : சுதந்திர சவ ஊர்தி ?

## தமிழ்தேசியம்: பிற்போக்கானதா ?



## கிளிநொச்சி : இப்போது யார் கையில் ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இன்னொரு வரலாற்றுப் பெருமை!

வாக்குரிமை தொடர்பாக இலங்கைக்கு ஏற்கெனவே ஒரு பெருமை உண்டு அதாவது பிரிட்டனில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைக்க முன்னரே இலங்கைப்பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்திருக்கிறது.

இப்போது இன்னொரு பெருமை நெடுந்தீவுச் சிறார்களுக்கு. நடந்து முடிந்த யாழ். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அங்கிருந்த இயக்கம் ஒன்றின் வேண்டுதலின் பேரில் 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர், சிறுமியர் எல்லாம் வாக்களிக்க வந்திருக்கிறார்கள். அதுவும் ஒரு முறையல்ல, பலமுறை. தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த சில பொலிசார் அச்சிறுவர்களைக் கண்டித்து திரும்பவும் வாக்களிக்க வந்தால் பிடித்து அடைத்து விடுவோம் என்று வெருட்டியதன் பேரில் சிலர் திரும்பிச் சென்றனர். ஆனால், நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் கடமையிலிருந்த பொலிசாரோ 'எப்படியாவது வாக்களிக்கட்டும், பெருமளவான மக்கள் வாக்களித்ததாக வெளியில் தெரிய வேண்டும். எனவே வயது குறைவாக இருந்தாலும் பரவாயில்லை விடு' என சக பொலிசாரிடம் கூறி இருக்கிறார்.

இனியென்ன, தேர்தல் கண்காணிப்பு இயக்கமும் நீதியாகவும், நியாயமாகவும் தேர்தல் நடைபெற்றது என அறிக்கை விடுத்து விட்டது. கடந்த தேர்தலில் எட்டு வாக்குகளால் வெற்றி பெற்றோம். இந்தத் தேர்தலில் நூற்றுக் கணக்கான வாக்குகளால் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று இந்த 'ஜனநாயக' இயக்கங்கள் அறிக்கை விடலாம். வாக்களிக்கும் வயதெல்லை 12 ஆகக் குறைத்ததை எண்ணித் தமிழ் மக்கள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்! ஜனநாயகத்தைக் காப்பாற்றியதாக அரசாங்கம் அறிக்கை விடலாம்!

## ஏன் பாரபட்சம்?

இலங்கையின் தேசிய சுதந்திர பொன்விழாவை முன்னிட்டுக் கல்முனைப் பிரதேச சபை செயற்படுத்திய அபிவிருத்தி நடவடிக்கைகளில் தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாகத் தேசிய தமிழ்த் தினசரியொன்றும் அண்மையில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது. பல லட்ச ரூபா செலவில் செய்யாத அத்தனை அபிவிருத்தித் திட்டங்களும் ஏன் ஒரு இனப்பிரதேசத்தில் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தன என்பது தமிழ் மக்களின் மனங்களை புண்படுத்துகின்றன.

மேலும் எல்லையிலுள்ள வீதிகளின் புராதன பெயர்களை மாற்றவும் நடவடிக்கை எடுப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. ஒரேயொரு தமிழ் உறுப்பினர் என்ற கோதாவில் அவர் காட்டிய எதிர்ப்புதான் என்ன? இன ஐக்கியம் பேசிக்கொண்டு இச் சபை செய்யும் வேலைகள் நீதியானவை தானா?

## ஜனாதிபதியின் அழைப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகப்போரிடவும், நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணவும் படையில் திரும்ப வந்து சேருமாறு, இராணுவத்தை விட்டு தப்பியோடிய அனைவரிடமும் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க 'தனிப்பட்ட' ரீதியாக அழைப்புவிடுத்துள்ளார்.

இராணுவத்தை விட்டு தப்பியோடியபடையில் திரும்ப வந்து சேரும் எவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கையோ அல்லது விசாரணைகளோ மேற்கொள்ள வேண்டாம் என இராணுவச் சேவைகளின் பிரதான தளபதியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரணதுங்க இராணுவ அதிகாரிகளைப் பணித்துள்ளார். இதுவரை காலமும் இவ்வுத்தரவு பாதுகாப்பு அமைச்சினாலே விடுக்கப்பட்டு வந்தபோதும், ஜனாதிபதி ஒருவர் 'தனிப்பட்ட' ரீதியாக இவ்வாறான உத்தரவு ஒன்றை விடுத்திருப்பது இதுவே முதல் தடவையாகும் எனவும் கூறப்படுகிறது.

## கைகொடுத்த தெய்வம்!

யாழ் தேர்தலில் இன்னொரு சுவாரசியமான விடயம். இந்த இயக்கங்களுக்கு இம்முறை தேர்தல் பிரச்சாரத்துக்கு கை கொடுத்தது எம்.ஜி.ஆர் தான். போட்டியிட்ட எல்லா இயக்கங்களும் ஒட்டோவிலும், வானிலும் ஒலிபெருக்கிகளைக் கட்டி ஏட்டிக்குப் போட்டியாக எம்.ஜி.ஆர். படப்பாடல்களை ஒலிபரப்பின. ரெலோ; 'நாளை நமதே...', ஈ.பி.டி.பி; நேருக்கு நேராய் வரட்டும்... புளொட்; வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்... கூட்டணி; அச்சம் என்பது மடமையடா...; ஈ.பி.ஆர்.எல்.எப்; ஒற்றுமையாய் வாழ்வதாலே உண்டு நன்மையே... என காது செவிடுபடும்படி பாடல்கள் மாறி மாறி ஒலிபரப்பின. இந்தக் கட்சிகளால் எதுக்குத்தான் பங்கமில்லை. இறுதியாக சுற்றுச் சூழலுக்கும் என்கிறீர்களா?

## நடைபெறா அணிவகுப்பு!

வீரமுனையில் திருவெம்பாவைக் காலத்தில் இரு தமிழ் இளைஞர்கள் வீட்டில் நித்திரையில் இருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு, அடையாள அணிவகுப்பொன்று கல்முனை மாவட்ட நீதிமன்றில் ஊர்காவற் படையினருக்கு நடாத்தப்பட்டது தெரிந்ததே.

வீட்டுக்கு வந்து சுட்ட ஊர்காவற் படையினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படாவிடில் சாட்சிகள் என்ன செய்வார்கள் என்பதும் ஒரு வினா?

ஏதோ, அவ்விவகாரம் புஸ்வாணமாகிபோய்விட்டது. கொலைகாரர்கள் தப்பித்தார்கள், நீதி செத்து விட்டது. தம்பலகாமம் சம்பவமும் இப்படிப் போகாதிருக்கக் கடவுள் உதவட்டும்.

இதேபோன்று சென்ரல் காம்ப் 4ம் கொலனித் தாக்குதல் தொடர்பான அடையாள அணிவகுப்பும் பல மாதகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அணிவகுப்பு நடைபெற்ற காலத்தை விட ஒத்திபோடப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகமாகும். கோணேஸ்வரி கொலை வழக்கும் இழுபட்டுப் போகிறது.

இவைகளும் புஸ்வாணமாகி விடுமா?

**நேசன்**

## தமிழ் ஐயாமாருக்கும் பதவி!

வடக்கு தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கும் வகையில் அமைச்சரவைமாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இவ்வமைச்சரவை மாற்றங்களின் போது, இளம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் ஆகியோருக்கும் டளஸ் அழகப்பெரும, டிலான் பெரேரா ஆகியோருக்கும் பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் வடக்கில் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொழும்புக்கு அழைத்து அரசாங்கத்தின் ஆதரவுடன் உள்ளூராட்சி சபைகளை நடாத்திச் செல்லும் வகையிலான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## லேக் ஹவுசுமா?

மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையில் பத்திரிகையையும், நிறுவனத்தையும் நடாத்திச் செல்ல லேக்ஹவுஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவர் தடையாக இருப்பதாக லேக்ஹவுஸ் தொழிற்சங்கங்களை மேற்கோள் காட்டி லக்பிம என்ற சிங்கள வாரப் பத்திரிகைசெய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியும், தொடர்புசாதனத் துறை அமைச்சரும் பல தடவை எச்சரித்தபோதும், இத்தலைவர் அவற்றைப் பொருட்படுத்தவில்லையெனவும், அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளை வெற்றி கொள்ளச் செய்ய தொடர்பு சாதனங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை லேக்ஹவுஸ் மேற்கொள்ளவில்லையெனவும் , அத்தலைவர் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு எதிரானவர் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

## சுடப்பட்டார்கள்!

பெப். 6ந்திகதி வெள்ளிக்கிழமையன்று கொழும்பு கொம்பனித் தெருவில் அமைந்துள்ள இலங்கை விமானப்படை வீதித் தடை சோதனைச் சாவடியில் வைத்து தற்கொலைப் பெண் போராளி ஒருவர் குண்டொன்று வெடிக்க வைத்தது தெரிந்ததே. அதே சமயம் அங்கு ஏற்கெனவே சோதனையிடப்பட்டுக் கொண்டிருந்த வெள்ளைநிற வேனில் வந்த மூவரும் அக்குண்டுவெடிப்பினால் கொல்லப்படவில்லையெனவும், குண்டு வெடிப்புச் சத்தத்தை அடுத்து வேனில் இருந்தே குண்டு வெடிக்க வைக்கப்பட்டதென நினைத்து வீதித்தடையின் எதிர்ப்புறமாக காவலுக்கு நின்றிருந்த விமானப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவேஇவர்கள் கொல்லப்பட்டதாகவும் இராணுவத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## காலி பண்ண உத்தரவு!

களனிதிஸ்ஸ மின்நிலையத்திற்கு எதிர்ப்புறமாக உள்ள நவகம்புர வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் மக்களை வெளியேற்றிவிட்டு, இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. இதற்கென அப்பிரதேசம் சீரமைக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. கொழும்புகளனிதிஸ்ஸ மின்நிலையத்தில் அண்மையில் குண்டு வெடித்ததன் பின் கொழும்பின் பாதுகாப்புக்கு அது சவாலாக அமைந்ததனாலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. இதற்கமைய களனிதிஸ்ஸ மின்நிலையத்திற்கு எதிரே இருக்கும் வீடமைப்புத் திட்டமான நவகம்புர-2 இல் வசிக்கும் மக்களுக்கு இடத்தைக் காலிபண்ணுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## யாழ். செய்திகள்

நடந்து முடிந்த யாழ் மாவட்ட உள்ளூராட்சிச் சபைத்தேர்தலின் முன் தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் பிரச்சாரக்கூட்டமொன்றை நடாத்தியது. இக்கூட்டத்தில் உரையாற்றிய தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களுள் ஒருவரான ஆனந்தசங்கரி தமிழ்க் காங்கிரஸ் என்று ஒரு கட்சி இப்போது இல்லை என்றார். முன்பு இருகட்சிகள் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கின. அவை தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக்கட்சி, மற்றையது ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸ் கட்சி. இவையிரண்டும் இணைந்தே தமிழர் விடுதலைக்கூட்டணி உருவானது. தற்போது குமார் பொன்னம்பலம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார். ஆனால் உண்மையில் தமிழ்க் காங்கிரஸ் என்று ஒரு கட்சி இல்லையென்றார்.

அண்மையில் உள்ளூர்ப்பத்திரிகையாளர்கள் சிலர் யாழ்ப்பாணத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் புலிகளைச் சந்தித்தனர். அப்போது புலிகள், இராணுவம் இப்போதும் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு யூரியா எடுத்துச் செல்வதற்குத் தடை விதித்துள்ளது. நாம் யூரியா பாவித்தது எண்பதுகளின் ஆரம்பத்தில். இப்போது நாம் யூரியா பாவிப்பதில்லை. இப்போது நாம் ஆர்.டி.எக்ஸ் தான் பாவிக்கிறோம் என்றனர்.

அண்மையில் நடைபெற்று முடிந்த யாழ். மாவட்ட உள்ளூராட்சித்தேர்தல் பிரச்சாரத்தின் போது புளொட்டினரால் ஒலிபரப்பப்பட்ட பாடல் ஒன்றிலிருந்து சில வரிகள்.

ஆதிக்க வெறியர்களே அகலுங்கள்
இது எமையீன்ற தமிழீழ தாய் நாடு
இது உரிமை கேட்கும் மக்களது போராட்டம்
இனி உடைத்தெறியும் உன் அரசை எம் கூட்டம்.

ரெலோ இயக்கத்தினர் தமது பிரச்சார உரைகளில், புலிகள் தீர்வுப்பொதியை நிராகரிக்க முன்னர் தாங்கள் நிராகரித்து விட்டோம் என்றனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களுள் ஒருவரான ஆனந்தசங்கரி, கைலாசபிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றுகையில் நாம் இன்னும் தமிழீழக்கோரிக்கையைக் கைவிடவில்லை என்றார்.

தீர்வுப்பொதியைத் தயாரித்தவர்களும், சந்திரிகாவால் மட்டும்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கூறுபவர்களும் பொதிக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்பவர்களும் தமிழீழம் கேட்கிறார்களாம். அப்படியானால் பிரபாகரன் தான் திம்புக் கோரிக்கைகளுக்கு இறங்கி வந்து விட்டாரா?

இலங்கையின் சுதந்திர தினப் பொன்விழாவை முன்னிட்டு இணுவில் ஊடாகச் செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் சகல பஸ் வண்டிகளிலும் தேசியக் கொடி பறக்கவிடப்படவேண்டும் என இணுவிலில் உள்ள இராணுவத்தினர் உத்தரவிட்டிருந்தனர். அத்துடன் பூபாலசிங்கம் புத்தகசாலையில் தேசியக்கொடி விற்பனையாகிறது வாங்கிக்கட்டுங்கள் எனவும் இராணுவத்தினர் கூறியிருந்தனர்

**எழுவான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அங்கே சுதந்திர ஊர்தி...
# இங்கே சவ ஊர்தி...

எந்தவிதமான சிராய்ப்புக் காயங்கள் கூடத் தமக்கு ஏற்படாமல், விடிய விடிய மூவாயிரம் சுற்றுரவைகளைத் தீர்த்த பொலிஸ் வீரர்கள் விடிந்த பின் நடந்து சென்று எட்டு விடுதலைப்புலிகளைப் பிடித்து வந்து நிதானமாகத் தெருவில் நிறுத்திச் சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். இந்தச் சாதனை தம்பலகாமத்தில் நடந்துள்ளது.

அரச ஊடகங்களோ மிகவும் அடக்கமாகத் தம்பலகாமத்தில் ஐந்து புலிகளை, பொலிசார் சுட்டுக்கொன்றனர் என்று அறிவித்துக்கொண்டன. மூன்று புலிகளை ஏன் குறைத்தார்கள் என்பதுதான் தெரியவில்லை.



தம்பலகாமம், திருகோணமலை நகரிலிருந்து 13வது மைலில் கண்டி வீதியை அண்டியுள்ள பூர்வீகத் தமிழ்க் கிராமம். வரலாற்றுப்புகழ் வாய்ந்த தம்பலகாமம் கோணேசர் ஆலயம் இக்கிராமத்துக்குச் சிறப்புச் சேர்க்கிறது. உழவுத்தொழிலே இங்கு பிரதானம்.

இந்தப்பூமி தொண்ணூறில் பயங்கரமான பாதிப்புக்குள்ளாகியது. கிராமத்தை பாதிப்புறச் செய்தவர்களின் திட்டம் தமிழர்களை விரட்ட வேண்டும் என்பதைவிட அவர்களது செல்வத்தைக் கொள்ளையடிக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தது. அவ்வாறே நடந்தது.

அகதிகளானோர் பலர். மீள்குடியேறியோரே சிலர். அந்தச் சிலரையும் இல்லாதொழிப்பதற்காக அடிக்கடி முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அந்த முயற்சியில் ஒன்றுதான் இந்தப் புலிபிடிப்பு.

தொண்ணூறுக்குப் பிறகு வேண்டுமென்றே அப்பாவிகள் மீது மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது அடாவடித்தனமான கொலைகள் இவை. 91ஏப்ரல் 12ல் முதலாவது சம்பவம் நடந்தது. நாயன்மார்திடல் என்ற இடத்தில் ஒரு வீட்டுக்குள் புகுந்த இராணுவம் தியாகராசா என்பவரையும் அவரது மனைவி, மகள், பேத்தி ஆகியோரையும் எவ்வித காரணமுமின்றிச் சுட்டுக் கொன்றது.

இரண்டாவது சம்பவம் அடையாளங் காணப்படாத ஆயுதபாணிகளால் நடத்தப்பட்டது. 97 ஒகஸ்டில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தால் ஒளிபரப்பட்ட சிந்து பைரவி படத்தைப்பார்த்து விட்டு நித்திரைக்குச் சென்றவர்களிடம் கதவைத்திறக்குமாறு ஆயுதக்கும்பல் ஒன்று பயமுறுத்தியது. அவர்கள் கொள்ளையிடும் நோக்கத்தைக் கொண்டவர்கள் என்பதையறிந்து வீட்டார் கதவைத் திறக்க மறுக்கவே ஆத்திரம் கொண்ட கும்பல் கிரனைட்டை ஜன்னலூடாக வீசிவிட்டுச் சென்றது. இதில் அதிபர் தம்பிராசா கடுங்காயங்களுக்குள்ளாகி கண்டிவரை கொண்டு செல்லப்பட்டு உயிரிழந்தார். அவரது மனைவியும் படம்பார்க்க வந்திருந்த அயலவர்கள் சிலரும் காயங்களுக்குள்ளாகிப் பலநாட்கள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியதாயிற்று.

ஆனால் இந்த மூன்றாவது சம்பவமோ மிகக் கொடூரமானது. எட்டு அப்பாவிகள் எந்தக்காரணமுமில்லாமல் வெறித்தனமாகச் சுட்டுக் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

ஜனவரி 31ல் கணேசலிங்கம் உதயகுமார் என்பவரது புதுமனைப் புகு விழாவுக்கு வந்திருந்த உறவினர்களுக்கு மாலையானதும் தொலைக் காட்சியில் வசந்தமாளிகை படம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இரவு பதினொரு மணியளவில் அருகிலுள்ள பொலிஸ் காவலரண்களிலிருந்து சரமாரியாக வெடிசத்தங்கள் கேட்க வாரம்பித்தன. பதற்றமடைந்த உதயகுமார் படத்தை நிறுத்தி விட்டார். படம் பார்த்தவர்களும் அந்த வீட்டிலேயே தங்கி விட்டனர்.

விடியும் வரை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. மக்கள்பயத்தால் உறைந்து போயிருந்தார்கள். காலையில் 6.45 மணியிருக்கும்; காக்கி உடைகளுடனும் கறுத்த ரீசேட் அரைக் காற்சட்டைகளுடனும் சுமார் இருபத்தைந்து பேரளவில் பொலிசரும், ஊர்காவற்படையினருமாக உதயகுமார் வீட்டுக்கதவைத் தட்டினார்கள். கதவு திறக்கப்பட்டது. கண்ணில் பட்ட ஆறு ஆண்கள் இழுத்தெடுக்கப்பட்டார்கள். வைத்தியர் பேச்சிமுத்து என்பவர் இவர்கள் எங்கள் உறவினர்கள், அயலவர்கள், புது வீடுகுடிபுகு விழாவுக்கு வந்தவர்கள் என்று எடுத்துச் சொல்லியும் வந்தவர்கள் கேட்கவில்லை. தடுத்த பெண்கள் தாக்கப்பட்டார்கள். ஆறு பேரும் கொண்டு செல்லப்பட்டனர் வீட்டில் இன்னோர் அறையில் படுத்திருந்த ஆண்கள் வெளியே வராததால் அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள்.

சற்றுத்தள்ளியமைந்திருந்த பிறிதொரு வீட்டுக்குச்சென்றார்கள். அங்கிருந்த இரண்டு ஆண்கள் இழுத்தெடுக்கப்பட்டார்கள். பொன்னம்பலம் கனகசபை ஒருவர். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை. இவருடன் சேகர் என்பவரும் கொண்டு செல்லப்பட்டார். இவ்வாறு இவர்கள்பல வீடுகளுக்குச் சென்று அங்கிருந்தோரைத் தாக்கியிருக்கிறார்கள். ஆட்கள் இல்லாத வீட்டுக்கதவுகள் கோடரியால் கொத்திப் பிளக்கப் பட்டிருக்கின்றன.

இந்த வெறியாட்டத்தின் உச்சநிலையில் எட்டுப்பேரும் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டார்கள். அமிர்தலிங்கம் கஜேந்திரன் (க.பொ.த மாணவன் -வயது 17), அமிர்தலிங்கம் சுரேந்திரன் (9ம்ஆண்டு மாணவன் -வயது13, இவர்கள் இருவரும் சகோதரர்கள்) முருகேசு ஜனகன் 10ம் ஆண்டு மாணவன் -16வயது), சுப்பிரமணியம் திவாகரன் (23 வயது விவசாயி) குணரத்தினம் சிவலிங்கம் (24 வயது; இரண்டு, பிள்ளைகளின் தந்தை),நாகரத்தினம் பவளநாதன் (29), பொன்னபலம் கனகசபை (47 வயது; ஐந்து பிள்ளைகளின் தந்தை), ஆறுமுகம் சேகர் (32) ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள்.

காலை எட்டு மணிக்கெல்லாம் இவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். இவர்களது உடைகள் சடலத்திலிருந்து அகற்றப்பட்டு விடுதலைப்புலிகள் போலத்தோற்றந்தரும் உடைகள் கொலைகாரர்களால் அணிவிக்கப் பட்டு, உறவினர்கள் புலியென ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டால் சடலங்களைத் தருவோம் எனவும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் எவரும் அவ்வாறு ஒத்துக்கொள்ள முன்வரவில்லை.

ஆத்திரம் தீராத கொலைகாரர்கள் சடலங்களை எடுத்துக்கொண்டு சென்று விட்டனர். சடலங்கள் எங்கே கொண்டு செல்லப்பட்டன என்பது எவருக்கும் தெரியாத நிலையில் மக்கள் அல்லோல கல்லோலப்பட வேண்டியதாயிற்று.

சடலங்கள் திருப்பித் தராததால் வெகுண்டெழுந்த மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். சடலங்களை அங்கு இங்கு எனப் பல இடங்களில் போடப்பட்டு கடைசியாகக் கந்தளாய் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அங்கு வந்து மரண விசாரணை நடத்துமாறு திருகோணமலை மாஜிஸ்திரேட் பி.சொர்ணராஜா அவர்களைக் கேட்ட போது அவர் மறுத்ததுடன் சடலங்களைத் திருகோணமலைக்கே கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

ஆர்ப்பாட்டம் 2ம்திகதி நடத்தப் பட்டது. தம்பலகாமம் மக்கள் அனைவரும் திரண்டு விட்டனர். வேறு வழியின்றி கந்தளாய் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிகால் கனகரட்ன, பிரிகேடியர் சரத் கருணாரட்ன உட்பட பாதுகாப்பு அதிகாரிகள் தம்பலகாமம் வந்து நேரில் பார்வையிட வேண்டியதாயிற்று.

சம்பவம் நடந்த இடங்களை நேரில் பார்வையிட்ட நிகால் கனகரட்ன பொலிசாரின் பிழைகளுக்காக திரண்டிருந்த மக்களிடம் மன்னிப்புக் கோரினார். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவிகள் என்று ஏற்றுக்கொண்டதோடு அவர்களது உறவினர்களுக்கு நஷ்டஈடு பெற்றுத் தர உதவுவதாகவும் குற்றமிழைத்தவர்கள் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதிமொழி அளித்தார்.

ஆவேசமான கேள்விகளுக்கும் நிகால் கனகரட்ன அமைதியாகவே பதில் கூறினார். ஒரு கட்டத்தில் மாணவர்கள் சிலர் ''நீங்கள் இப்படிக் கொலைகள் செய்து எங்களை வருத்துவதால் நாங்கள் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து கொள்ள வேண்டி ஏற்படும்'' எனக்கூறியபோது அந்த அதிகாரி ''அப்படிச் செய்ய நினைக்காதீர்கள். நீங்கள் சந்தோசமாக வாழவேண்டியவர்கள். உங்களுக்கு உதவ நான் காத்திருக்கிறேன்'' என்று பதிலளித்தார்.

இந்த பொலிஸ் கோஷ்டி தம்பலகாமத்து மக்களை பெரிதும் இம்சைப் படுத்தியே வந்திருக்கிறது. குறிப்பாக பெண்களைக்கண்டால் ஆடைகளை அவிழ்த்துக்காட்டுவதில் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள். பாடசாலை விடும் நேரம்பார்த்து வாய்க்கால் நீரில் தெருவோரமாகக் குளித்துக் கொண்டிருக்கும் இந்தக் காடையார்கள் மாணவிகள் வரும் வேளையில் முழு நிர்வாணமாக எழுந்து நிற்பார்கள். இந்த விடயங்களும் நிகால் கனகரட்வின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

மாஜிஸ்திரேட் உத்தரவுப்படி பிரேதங்கள் இரண்டாந்திகதி மாலை திருகோணலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு விசாரணைகளின் பின்னர் 3ந்திகதி பிற்பகலில் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டன. பவளநாதனின் சடலம் திருகோணமலை இந்து மயானத்தில் அன்று மாலையே அடக்கம் செய்யப் பட்டது.

ஏனைய சடலங்கள் தம்பலகாமம் கொண்டு செல்லப்பட்டு சுதந்திரப் பொன்விழாத் தினமான பெப்ரவரி 4ல் 11மணிக்கு ஆறு வாகனங்களில் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு (சகோதரர்கள் இருவரின் உடல்களும் ஒரே வாகனத்தில் ஏற்றப்பட்டன) பாடசாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கஞ் செய்யப்பட்டன.



அஞ்சலியின் போது பொலிஸ் அதிகாரி நிகால் கனகரட்னவும் கலந்து கொண்டு இரங்கலுரை ஆற்றினார்.

ஸ்ரீஜயவர்தனபுரவில் சுதந்திரப் பொன்விழா ஊர்திகள் ஊர்ந்து கொண்டிருந்த அதே நேரத்தில் இங்கே திருகோணமலை தம்பலகாமத்தில் ஏழு அப்பாவிகளின் பிரேதங்களைத் தாங்கிய ஊர்திகள் சோகத்துடன் ஊர்ந்து கொண்டிருந்தன.

சுதந்திரப்பொன்.விழாவை யார் மறந்தாலும் இனித் தம்பலகாமம் வாழ் மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

**விவேகி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையில் காலனித்துவத்தின் இறுதிக் காலப்பகுதியில் அரசியல் சீர்திருத்தக் கோரிக்கையை தூண்டிய பின்புலக் காரணியாக இருந்தது இரண்டாம் உலக மகா யுத்தமே. இதன் போது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் வெளிக்கிளர்ந்த சுதந்திரப் போராட்டங்களும் உக்கிரம் பெற்றுக் கொண்டிருந்தது. இலங்கையின் அண்மைய நாடான இந்தியாவிலும் சுயராஜ்யப் போராட்டம் வேக முற்றுக் கொண்டிருந்த போது இலங்கையர்களும் இலங்கைக்கான சீர்திருத்தக் கோரிக்கைகளை உயர்த்திப் பிடித்தனர்.

அன்று அரசாங்க சபையில் அங்கம் வகித்து வந்த உயர் மத்திய தர வர்க்கத் தலைவர்கள் டொனமூர் திட்டம் தொடர்பாகவும் அதிருப்தியுற்றிருந்தனர். அது போதுமானதல்ல என்றும், அதற்கு மாற்றாக மேலதிகமாக சீர்திருத்தக் கோரிக்கைகளையும் வேண்டி நின்ற போது அதனை கருத்திற் கொள்ளாமலிருக்க பிரித்தா னியருக்கு இயலவில்லை.

வெறும் சீர்திருத்தவாத கோரிக்கைகளை மாத்திரமே முன் வைத்து வந்த இலங்கையை தமது காலனித்துவ நாடுகளிலேயே "மாதிரிக் காலனி" (Model Colony) என்றே பிரித்தானியா அழைத்து வந்தது. எனவே சீர்திருத்தக் கோரிக்கைகளில் ஓரளவானதை வழங்கி இலங்கையரை திருப்திப்படுத்திவிட பிரித்தானியாவும் தயாராக இருந்தது. என்ற போதும் 1939 செப்டம்பரில் ஆரம்பித்த இரண்டாம் உலக மகா யுத்தத்தைக் காரணம் காட்டி அச் சீர்திருத்தக் கோரிக்கைகளைக் கூட பின்போட்டு வந்தது. 1940ம் ஆண்டு பிரித்தானிய அரசு தமது அறிக்கையொன்றின் மூலம் போர் நிலை காரணமாக அரசாங்க சபையின் காலத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதாக அறிவித்தது. அதன் காரணமாக 1941ம் ஆண்டு நடத்தப்படவிருந்த பொதுத்தேர்தலும் பின்போடப்பட்டது. இப்படிப் பின் போட்டமைக்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுவதுண்டு. அன்றைய நேரம் மிக வேகமாக வளர்ச்சியுற்று வந்த இடதுசாரிகளின் செல்வாக்கானது தமது இருப்புக்கு அச்சுறுத்தலானதென்றும் தமக்கு சாதகமாக என்றும் இருக்கக் கூடிய சீர்திருத்தவாத தேசிய சக்திகளை தமக்கு சாதகமாகத் தயார் படுத்துவதற்கான அவகாசத்தை ஏற்படுத்துவதற்காகவுமே இத்தேர்தல் பின்போடப்பட்டது என்பதே.

1941ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இன்னொரு அறிவித்தலையும் விடுத்தது. யுத்தம் முடிவடைந்தவுடனேயே அரசியல் சீர்திருத்தம் இடம் பெறும் என்பதே அது. சீர்திருத்தவாதத் தலைவர்கள் இம்முறை சீர்திருத்தக் கோரிக்கைகளுடன் மாத்திரம் நின்று விடாது "டொமினியன்"" அந்தஸ்தைக் கோரிநின்றனர்.

உலக மகா யுத்தம் பல நாடுகளுக்குப் பரவி தீவிரமடைந்து கொண்டிருந்த போது பிரித்தானியா தமது நற்குணத்தைக் காட்ட வேண்டியதன் அவசியம் இருந்தது. இந்நிலையில் 1943இல் இன்னொரு அறிக்கையைப் பிரித்தானியா வெளியிட நேரிட்டது.


அதன்படி யுத்தம் முடிந்ததன் பின் பொறுப்புடன் கூடிய அரசியலமைப்பொன்று வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அவ் ஆட்சி முறையானது பிரித்தானிய முடிக்குட்பட்ட சுயாட்சி முறையாக இருக்குமென்றும், இதனை உருவாக்குவதற்கான ஒரு நகலொன்றை அமைச்சரவையை உருவாக்கும்படி பிரித்தானிய அரசு வேண்டியது. இதனை 1943க்குள் தயாரிக்கும்படியும் நான்கில் மூன்று பெரும்பான்மை பகுதியினரின் ஒப்புதலைப் பெற்ற பின் இதனை நடைமுறைக்கு கொண்டு வரலாமென்றும் அதிலிருந்தது.

"அமைச்சர்களின் நகல்" (Ministers Draft) எனும் பெயரில் அறிமுகப் படுத்தப்பட்ட இந்த நகல் உண்மையிலேயே அமைச்சர்களால் உருவாக்கப் பட்டது அல்ல. இதனை உருவாக்கியவர் அன்றைய இலங்கைப் பல்கலைக்கழக (பேராதனைப் பல்கலைக் கழக) உபவேந்தராகவிருந்த சேர். ஐவர் ஜெனிங்ஸ் என்பவரே. இது தன்னாலேயே உருவாக்கப்பட்டது என பிற்காலத்தில் சேர்.ஐவர் ஜெனிங்ஸ் எழுதிய "இலங்கையின் அரசியலமைப்பு"(Constitution of Ceylon) எனும் நூலில் குறிப்பிட்டிருந்தது குறிப்பிட்டிருந்தது.

இந்த நகலுக்கு சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை. குறிப்பாக தமிழ்த் தலைவர்கள் இதனை எதிர்த்தனர். தம்மிடமிருந்து எந்தவித யோசனைகளையும் கேட்டறியாமல் தயாரிக்கப்பட்ட இந் நகல் சிறுபான்மையினங்களுக்கு எதிரானவை என அவர்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் இந்நகலை மீளப் பரிசீலிக்கும்படி அமைச்சர்களால் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியிடம் கோரப்பட்டது. இந்நகலைப் பரிசீலிப்பதற்குப் பதிலாக பிரித்தானிய அரசு இன்னொரு அறிவித்தலை விடுத்தது. "1944 அறிக்கை" எனும் பெயரில் அழைக்கப்படும் இவ்வறிக்கையில் "அமைச்சர்களின் நகலை" நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்வதற்காக ஒரு ஆணைக்குழு இலங்கைக்கு அனுப்பப்படுமென்றும், யுத்தம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதால் அரசாங்க சபையின் காலத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"1944 அறிக்கை"யை அமைச்சர்கள் எதிர்த்தார்கள். அதனை அரசாங்க சபைக்கு முன்வைக்கு முன்பே அதனை நிராகரித்தார்கள். ஆனாலும் அமைச்சர்களின் எதிர்ப்பின் மத்தியிலும் அது




# காலனித்துவத்திலிருந்து நவகாலனித்துவத்திற்கு மாறிய கேலிக்கூத்து!

நடைமுறைப் படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் 1944 செப்டம்பர் மாதம் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை பரிசீலிப்பதற்கென சோல்பரி ஆணைக்குழு 1944 யூலை 5இல் அமைக்கப்பட்டது. இக்குழு டிசம்பர் 22 இலங்கை வந்தது.

சோல்பரி ஆணைக்குழுவினருக்கு செய்வதற்கு ஒன்றுமில்லை. "அமைச்சர்களின் நகல்" எனும் பெயரில் சொல்லப்பட்ட ஐவர் ஜெனிங்ஸ் தயாரித்திருந்த அதே திட்டத்தையே தமது ஆணைக்குழுவின் சிபாரிசாக முன்வைத்தது. செனட் சபை எனும் பேரில் மேற்சபையொன்றும் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவ்வாணைக்குழு கூறியிருந்தது. சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அம்மேற்சபை அனுகூலமாக இருக்குமென சோல்பரி குழு நம்பியது. வேறும் சில சிறு சிறு திருத்தங்கள் செய்த போதும் ஜெனிங்ஸின் அடிப்படையான திட்டத்தில் பாரிய மாற்றமெதனையும் இது செய்யவில்லை. இறுதியில் ஜெனிங்ஸ் திட்டமானது சோல்பரித் திட்டமாக 1945 ஒக்டோபர் 09இல் முன்வைக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பு டொமினியன் அந்தஸ்தை விட சற்றுக் குறைந்திருந்தது. யுத்தத்துக்குப் பின் நடந்த தேர்தலில் பிரித்தானியாவில் தொழிற்கட்சி பதவியிலமர்ந்தது. இலங்கைக்கான சீர்திருத்தமும் இந்த தொழிற் கட்சி அரசாங்கத்தாலேயே பரிசீலிக்கப்பட்டது.

"சோல்பரித் திட்டம்" பற்றி அன்றைய சபைத் தலைவர் டி:எஸ். சேனநாயக்கவுடன் பிரித்தானிய அரசு பேச்சுவார்த்தை நடாத்தியது. அதன் பின் இது ஒரு மசோதாவாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த மசோதா 1945ம் ஆண்டு நவம்பர் 8இல் அரசாங்க சபையில் வாக்குக்கு விடப்பட்ட போது 51 வாக்குகள் ஆதரவாகவும் 3 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (எஸ்.நடேசன், பீ.தியாகராஜா, ஏ.மகாதேவா ஆகியோர் இதற்கு ஆதரவளித்திருந்தனர்).

1947ம் ஆண்டு அது இலங்கைக்கு அனுப்பப்பட்டது. "1947 அரசியல் திட்டம்" என அழைக்கப்படுவது இது தான்.

யூன் 18ஆம் திகதி அரசாங்க சபை கூடிய போது பிரித்தானியா இலங்கைக்கு சுயாட்சி (டொமினியன்) வழங்கும் தனது திட்டத்தை அறிவித்தது. அடுத்த மாதமே 4ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஓகஸ்ட் 15-20 வரை பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் (ஐ.தே.க.வானது இலங்கை தேசிய காங்கிரசும், பண்டாரநாயக்காவின் சிங்கள மகா சபை உட்பட சில அமைப்புக்களையும் இணைத்தே அமைக்கப்பட்டிருந்தது) இருந்த சிங்கள மகா சபையைச் சேர்ந்தவர்கள் கூடிய ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த போதும் இறுதி நேரத்தில் பண்டாரநாயக்காவால் டி.எஸ். சேனநாயக்கா பிரதமராக ஆவதற்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இத் தேர்தலில் சோல்பரி அரசியல் திட்டத்துக்கு ஆதரவு வழங்கிய எஸ்.நடேசன் யாழ்ப்பாணத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினால் தோற்கடிப்பட்டார். ஏ.மகாதேவா (சேர்.பொன் அருணாசலத்தின் மகன்) ஜி.ஜி.பொன்னம்பலத்தினால் தோற்கடிக்கப்பட்டார்.

செப்டம்பர் மாதம் 24 அன்று டி.எஸ். பிரதமராகப் பதவியேற்றார். ஒக்டோபர் மாதம் முதலாவது பாராளுமன்றம் கூடியது. அதே மாதம் பிரதமர் யாழ்ப்பாணம் விஜயம் செய்த போது அங்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

இதே வேளை 1947 டிசம்பர் ஆளுனர் சேர். ஹென்றி மொங்க் மேசன் மூர் மற்றும் டி.எஸ். சேனநாய்க்க ஆகியோருக்கிடையில் மூன்று ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டது. இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அல்லது அமைச்சரவையுடன் எவ்வித கலந்துரையாடலையும் செய்யாமல் இந்த ஒப்பந்தம் தன்னிஷ்டப்படி -பிரித்தானிய விசுவாசியாக தன்னைக் காட்டிக்கொள்வதற்காகசெய்து கொண்டார் சேனநாயக்கா. பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள், அரசாங்க நிர்வாகம் ஆகியன தொடர்பாக 3 ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அவ்வொப்பந்தங்கள் 1948 பெப்ரவரி 4லிருந்து நடைமுறைக்கு வரும்படி செய்து கொள்ளப்பட்டது. இதன் பிறகே 1947 நவம்பர் 26 அன்று பிரித்தானியப் பாராளுமன்றத்தில் "சுதந்திரச் சட்டம்" நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இலங்கையில் 1947 டிசம்பர் 1ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு 3ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்துக்கு 59 வாக்குகள் ஆதரவாகவும், 11 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. 29 பேர் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (பார்க்க அட்டவணை)

இச்சட்டத்தின் பின் தான் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி "சுதந்திரம்" என்ற கேலி நாடகம் அரங்கேற்றப்பட்டது. காலனித்துவத்திலிருந்து நவ காலனித்துவத்திற்கு பரிமாறப்பட்டது. ஒட்டுமொத்தத்தில் சிங்கள-பௌத்த-கொவிகம-ஆணாதிக்க-சுரண்டும் வர்க்கத்துக்கு கைமாறப்பட்டது. உலக ஏகாதிபத்திய முதலாளிய நவகாலனித்துவத்திற்கும் படிப்படியே இலங்கை பலியாக்கப்பட்டது இந்த சக்திகளினாலேயே.

-கோமதி

## 1947 டிசம்பர் 3ஆம் திகதியன்று "இலங்கை சுதந்திரச் சட்டம்" மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பு

ஆதரவாக வாக்களித்தவர்கள்

| பெயர் | தொகுதி | குறிப்பு |
|---|---|---|
| 1. டி.எஸ்.சேனநாயக்க | மினுவாங்கொட | பிரதமர், வெளிவிவகார, பாதுகாப்பு அமைச்சர் |
| 2. S.W.R.D.பண்டாரநாயக்க | வேயங்கொட | சுகாதார,உள்ளூராட்சி அமைச்சர்,சபைத்தலைவர் |
| 3. R.S.S.குணவர்தன | கம்பஹ | இலாக்கா இல்லா அமைச்சர் |
| 4. டி.பி.ஜாயா | மத்திய கொழும்பு | தொழில், சமூக சேவைகள் அமைச்சர் |
| 5. ஜே.ஆர்.ஜெயவர்தன | களனி | நிதி அமைச்சர் |
| 6. ஜே.எல்.கொத்தலாவல | தொடங்கொஸ்லந்த | போக்குவரத்து அமைச்சர் |
| 7. ஈ.ஏ.நுகவெல | கடுகன்னாவ | கல்வி அமைச்சர் |
| 8. ஏ.ரத்நாயக்க | வத்தேகம | உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் |
| 9. டட்லி சேனநாயக்க | தெடிகம | கைத்தொழில், காணி அமைச்சர் |
| 10. சீ.சித்தம்பலம் | மன்னார். | தபால், மின்சார அமைச்சர் |
| 11. சீ.சுந்தரலிங்கம் | வவுனியா | வர்த்தகத்துறை அமைச்சர் |
| 12. ஜீ.ஆர்.டிசில்வா | கொழும்பு வடக்கு | நீதித்துறை பாராளுமன்ற செயலாளர் |
| 13. ஏ.ஈ.குணசிங்க | மத்திய கொழும்பு | இலாக்கா இல்லா அமைச்சர், |
| 14. எச்.எஸ்.இஸ்மயில் | புத்தளம் | உணவு, கூட்டுறவு பாராளுமன் செயலாளர் |
| 15. பீ.பி.புலன்குலம் | அனுராதபுரம் | கைத்தொழில், காணி பாராளுமன்ற செயலாளர் |
| 16. ஏ.பி.ஜயசூரிய | ஹொரண | தபால் மின்சார பாராளுமன்ற செயலாளர் |
| 17. எம்.எஸ்.காரியப்பர் | கல்முனை | உள்நாட்டு, கிராம அபிவிருத்தி பாரா.செயலாளர் |
| 18. வீ.நல்லையா | கல்குடா | சுகாதார, உள்ளூராட்சி பாராளுமன்ற செயலாளர் |
| 19. H.D.Z.சிறிவர்தன | நீர்கொழும்பு | மீன்பிடி, தொழிற்துறை பாராளுமன்ற செயலாளர் |
| 20. A.R.A.M.அபுபக்கர் | மூதூர் | |
| 21. சீ.ஈ.ஆட்டிகல | ரத்னபுர | |
| 22. எம்.டி.பண்டா | மத்துரட்ட | தொழிலாளர், சமூக சேவை பாராளு. செயலாளர் |
| 23. பீ.எல்.பௌத்தசார | பொலன்னறுவை | |
| 24. ஐ.டி.தசநாயக்க | வாரியபொல | |
| 25. ஆர்.ஏ.டிமெல் | கொழும்பு தெற்கு | |
| 26. ஜீ.ஏ.டிசொய்ஸா | அம்பலங்கொட | |
| 27. எம்.எம்.இப்பிராகிம் | பொத்துவில் | |
| 28. S.U.எதிர் மன்னசிங்கம் | பதிரிப்பு | |
| 29. ஜே.ஜே.பெர்ணாண்டோ | சிலாபம் | |
| 30. வியோர் பெர்ணாண்டோ | புத்தல | |
| 31. ஈ.பீ.என்.கிரேஷன் | நியமனம் | |
| 32. எப்.எச்.கிரிபின் | நியமனம் | |
| 33. டி.எஸ்குணசேகர | உடுகம | |
| 34. டி.பி.ஜயசூரிய | ஜாஎல | |
| 35. மொன்டேகு ஜயவிக்கர | நியமனம் | |
| 36. டி.டி.கருணாரத்ன | கம்பஹ | |
| 37. என்.எச்.கீர்த்திரத்ன | கேகாலை | |
| 38. S.H.மஹாதிவுல்வெவ | கலாவெவ | |
| 39. ஜே.ஒப்ரெ மார்டின் | நியமனம் | |
| 40. ஈ.டபிள்யு.மெதிவ் | பலங்கொட | |
| 41. வீ.டி.நாணயக்கார | மாத்தளை | |
| 42. J.W.ஒல்பீல்ட் | நியமனம் | |
| 43. எஸ்.எஸ்.பேக்மன் | நியமனம் | |
| 44. டி.பி.பானபொக்க | கல்ஹா | |
| 45. எல்பட்.எப்.பீரிஸ் | நாத்தாண்டியா | |
| 46. டி.பி.பொஹொலியத்த | ஹொரவ்பதான | |
| 47. எச்.ஆர்.யு.பிரேமசந்திர | கடுகன்னாவ | |
| 48. டி.ஏ.ராஜபக்ஷ | பெலிஅத்த | |
| 49. ஜே.ஏ.ரம்புக்பொத்த | அலுத்நுவர | |
| 50. எச்.பி.ரம்புக்வெல்ல | மினிபே | |
| 51. V.G.W.ரத்நாயக்க | தெனியாய | |
| 52. எச்.எல்.ரத்வத்தே | மாவனெல்ல | |
| 53. எம்.சேனநாயக்க | மதவாச்சி | |
| 54. ஆர்.ஜீ.சேனநாயக்க | தம்பதெனிய | |
| 55. ஏ.சின்லெப்பை | மட்டக்களப்பு | |
| 56. கே.வீ.டி.சுகததாச | வெலிமட | |
| 57. எச்.பிங்தென்னே | தம்புல்ல | |
| 58. ஜீ.ஆர்.விக்கி | நியமனம் | |
| 59. சைமன் அபேவிக்கிரம | பத்தேகம | |

எதிராக வாக்களித்தவர்கள்.

| | |
|---|---|
| 1. எச்.டி.அபேகுணவர்தன | மாத்தறை |
| 2. டபிள்யு தஹநாயக்க | காலி |
| 3. கலாநிதி கொல்வின் | வெல்லவத்தை-கல்கிஸ்ஸை |
| 4. பீ.ச்.டபிள்யுடி.சில்வா | அம்பலங்கொட-பலபிட்டிய |
| 5. சமலிகுணவர்தன | களுத்துறை |
| 6. பீட்டர் கெனமன் | மத்திய கொழும்பு |
| 7. ஜே.சீ.டி.கொத்தலாவல | பதுளை |
| 8. பீகுமாரசிறி | ஹக்மன |
| 9. எம்.ச்.பீரிஸ் | பானந்துறை |
| 10. எல்.ராஜபக்ஷ | ஹம்பாந்தொட்டை |
| 11. W.P.A.விக்கிரமசிங்க- | அக்குரெஸ்ஸ |

வாக்களிப்பத்திலிருந்து தவிர்த்துக் கொண்டவர்கள்.

| | |
|---|---|
| 1. சோமவீர சந்திரசிறி | மொரட்டுவ |
| 2. S.J.V.செல்வநாயகம் | காங்கேசன்துறை |
| 3. டி.பி.ஆர்குணவர்தன | கோட்டே |
| 4. டி.பி.ஆர்குணவர்தன | அவிஸ்ஸாவெல்ல |
| 5. கே.ஹேரத் | நிக்கவரெட்டி |
| 6. டி.எல்.ஹெட்டிஆராச்சி | நிவிட்டிகல |
| 7. I.M.R.A.ஈரியகொல்ல | தண்டகமுவ |
| 8. கே.கனகரத்னம் | வட்டுக்கோட்டை |
| 9. வீகுமாரஸ்வாமி | சாவகச்சேரி |
| 10. கேகுமாரசுவாமி | கொட்டகல |
| 11. ஜீ.ஆர்.மொ | மஸ்கெலியா |
| 12. கே.வி.நடராஜா | பண்டாரவெல |
| 13. என்.எம்.பெரேரா | ருவன்வெல்ல |
| 14. ரெஜினோல்ட் பெரேரா | தெஹிவிட்ட |
| 15. வில்மட் ஏ.பெரேரா | மத்துகம |
| 16. ஜீ.ஜீ.பொன்னம்பலம் | யாழ்ப்பாணம் |
| 17. கே.ராஜலிங்கம் | நாவலபிட்டிய |
| 18. டி.ராமலிங்கம் | பருத்தித்துறை |
| 19. டி.ராமானுஜம் | அலுத்நுவர |
| 20. புளோரன்ஸ் | கிரிஎல்ல |
| 21. எஸ்.ஏ.சில்வா | அகலவத்த |
| 22. எஸ்.சிவபாலன் | திருகோணமலை |
| 23. எச்.ஸ்ரீ நிஷ்ஷங்க | குருணாகலை |
| 24. டி.பி.சுபசிங்க | பீ.கிரிய |
| 25. எஸ்.எம்.சுப்பையா | பதுளை |
| 26. ஏ.எல்.தம்பையா | ஊர்காவற்துறை |
| 27. எஸ்.தொண்டமான் | நுவரெலியா |
| 28. சீ.வன்னியசிங்கம் | கோப்பாய் |
| 29. சீ.வி.வேலுப்பிள்ளை | தலவாக்கலை |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிளிநொச்சி : புலிகளின் புதிய கெரிலாத் தளம்!

கிளிநொச்சி நகரமும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் புலிகளின் வசப் பட்டுள்ளமையானது அதிக விலை கொடுத்து புலிகளால் அடையப்பெற்ற வெற்றியாகவே தெரிகின்றது. இருப்பினும், ஜயசிக்குறு நடவடிக்கையின் முன்னணி முனை மீது விழுந்துள்ள மிக மோசமான இடியாகவே இதனை ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்கு வழி சமைத்த கடந்த பொதுத்தேர்தலுக்கு சற்று முன்னர் வடக்கில் மிகப்பரந்த இராணுவத் தளமாகத் திகழ்ந்த பூனகரி - நாகதேவன்துறை படைத் தளத்தின் மீது புலிகள் நடத்தி நுணுக்கம் மிகுந்த பாரிய அதிரடித் தாக்குதலையும் விட, பாரிய மின்னலடியாகவே கிளிநொச்சி - பரந்தன் - ஆனையிறவு இராணுவ வலயத்தளங்கள் மீது இம்முறை புலிகள் தாக்குதலை நடத்தியுள் ளார்கள்.

சுமார் 12மைல் நீளமும், 3,4 மைல் அகலமும் கொண்ட கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு இராணுவ வலயத்தளம் மீது புலிகள் ஏககால பலமுனைத்தாக்குதலை கடந்த முதலாம் திகதி அதிகாலை 1.50மணிக்கு ஆரம்பித்தார்கள்.

நாட்டின் 50வது சுதந்திர தின பொன் விழாக் கொண்டாட்டங்களில் இலங்கை அரசும், அரச படைகளும் மிகவும் உன்னிப்பாக ஈடுபட்டிருந்த வேளை அது. இவ்விழாவுக்காக மிகவும் கோலாகலமாக களைகட்டி யிருந்த கண்டி மாநகரில் பொன்விழா வின் களமாகிய தலதாமாளிகையின் முன்வாயிலில் வெடித்துச் சிதறி விழா ஏற்பாடுகளை சுக்கு நூறாக்கிய வாகனக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது. அரசும் அரச படைகளும் தீவிர பௌத்தர்களும் பொறி கலங்கிப்போயிருந்த தருணம் அது. அத்துடன் ஜயசிக்குறு படைத்தளத்தில் இருந்தும் ஆனையிறவு படைத்தளங் களில் இருந்தும் நூற்றுக்கணக்கான இராணுவ சிப்பாய்களை கொழும்புக் கும், கண்டிக்குமாக நகர்த்தி இருந்தநேரம் அது.

கண்டியில் இருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டிருந்த சுதந்திர தின பொன்விழாவுக்கான தலைநகர தளத்தின் பாதுகாப்பு குறித்து அரசும், படைகளும் மனக்கிலேசம் கொண்டி ருந்த அந்த வேளையில் வடக்கிற்கான உத்தேச தரைவழிப்பாதைக்கான இறுதி முனை மீது தாக்குதல் தொடுக்கப்பட்டிருந்தது. புலிகளைப் பொறுத்தமட்டில் இராணுவ ரீதியான மிகச்சரியான ஓர் இலக்கையே இத்தாக்குதலுக்காகத் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள்.

கிளிநொச்சியின் தென்கிழக்கு, பரந்தனின் வடமேற்கு - கிழக்கு ஆகிய முனைகளில் இருந்தும், ஆனையிறவு தளத்தின் மேற்கு - தென்கிழக்கு ஆகிய முனைகளில் இருந்தும், புலிகளின் ஏககால பலமுனைத்தாக்குதல்கள் தொடுக்கப் பட்டன. புலிகளின் பல்வேறுபட்ட தாக்குதல்கள் அணிகளும் கச்சிதமாக வரையறுக்கப்பட்டு இந்த இராணுவ வியூகத்தில் இறக்கப்பட்டிருந்தன.

தாக்குதல் ஆரம்பமாகிய சில மணித்தி யாலங்களிலேயே 26 புலிகளை இழந்த நிலையில் கிளிநொச்சி நகரில் அமைந்திருந்த இராணுவ பிரிகேட் தலைமையகம் புலிகளின் கைகளில் வீழ்ச்சி பெற்றிருந்தது. அங்கிருந்த இர்ாணுவ ஆயுதக்கிடங்கும், ஆர்ட்டி லறித் தளமும் எதுவித பாதிப்புமின்றி புலிகள் வசமாகின. கிளிநொச்சி இராணுவத் தளத்தின் ஆர்ட்டிலறி பீரங்கிகள், பரந்தன், ஆனையிறவு தளங்களின் மிகக்கவனமாகத் தேர்வு செய்யப்பட்டிருந்த இலக்குகளை நோக்கி ஆவேசத்தோடு குண்டு களைக் கக்கத் தொடங்கின.

பரந்தன் இராணுவ தளம் மீதான தாக்குதலின் போது குண்டுகள் ஏற்றப்பட்ட இரண்டு ட்ரக் வண்டிகள் உரிய நேரத்தில் வெடிக்கத் தவறி விட்டன. அத்துடன் ஒரு குண்டு வண்டி தனது இலக்கை அடைவதற்கு மூன்பே சேற்று நிலத்தில் புதைந்து போய்விட்டது. இவ்வாறான ஒரு பின்னணியில் முரசுமோட்டை முனை யில் பரந்தன் படைத்தள இராணுவத் தினருக்கும், புலிகளின் மகளிர் படை அணிகளுக்கும் இடையே பலத்த மோதல்கள் இடம்பெற்றன.

போர் முனைகளில் காயமடைந்த புலிகள் மின்னல் வேகத்தில் வைத்திய மையங்களுக்கு அகற்றப்பட்டார்கள். உயிரிழந்தவர்களது சடலங்களையும் புலிகளின் மீட்பு அணியினர் துரிதமாக மீட்டுக்கொண்டு வந்து சேர்த்தார்கள்.



கிளிநொச்சி இராணுவ தளத்தின் இழப்பும் ஆயுதக்கிடங்கு ஆர்ட்டில றித் தளம் ஆகியவற்றின் இழப்புகளும் படைத்தலைமையகத்தின் உடனடிக் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. சமர்க்களத்தின் இராணுவ தளபதிக ளிடமிருந்து உதவிப்படைகளை உடனடியாக போர்முனைகளுக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கைகள் அவசர அவசரமாகப் பறந்தன.

வன்னிப்பகுதி மக்களால் வண்டு என்றழைக்கப்படும் ஆளில்லாத வேவு விமானம் போர்க்களப்பகுதிக ளுக்கு விரைந்து புலிகளின் நடமாட் டங்களையும், அவர்களது மீட்புப் படையணிகளின் நடமாட்டங்க ளையும் மிகச்சரியாக நோட்டமிட்டு விமானப் படையினருக்குத் தகவல்களை அனுப்பியது. நாண் ஏறிக் கிளம்பிய கூரிய அம்புகளாக கபீர் குண்டு வீச்சு விமானங்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு போர் முனைகளைத்தேடிச் சென்று குண்டுக ளைச் சரமாரியாகப் பொழிந்தன.

போர் முனைப்பகுதிகளிலிருந்து காயப்பட்ட நிலையில் கொண்டு வரப்பட்ட முதலுதவிச் சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த 80க்கும் மேற்பட்ட புலிகள் இந்த குண்டுத் தாக்குதலில் அகப்பட்டுச் சிதைந்து போனார்கள். புலிகளின் உத்தியோக ரீதியான அறிவித்தலின்படி எல்லா மாக 150 புலிகள் இத்தாக்குதலின் போது உயிரிழந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அவர்களில் 14பேர் கரும் புலிகள் என அவர்களால் உரிமை கோரப்பட்டுள்ளது.

ஆயினும் புலிகள் தரப்பில் 300க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட தாகவும், அவற்றில் 218 சடலங்க ளைத் தாங்கள் கைப்பற்றியதாகவும் இராணுவம் அறிவித்திருந்தது. தம்மால் கைப்பற்றப்பட்ட புலிச்சட லங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக புலிகளிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும், சடலங் களின் கையளிப்பு கடைசிவரை நடைபெறவே இல்லை. இதற்கான காரணம் என்னவென்று இதுவரை யிலும் தெரிவிக்கப்படவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தி டமிருந்து இந்த முயற்சிக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்ற தெளிவற்ற ஒரு விளக்கம் மட்டுமே இராணுவத்தால் கொடுக்க முடிந்தது.

இதேவேளையில் தாங்கள் 54 இராணுவ சடலங்களைக் கைப்பற்றி யிருந்ததாகத் தெரிவித்து, அவற்றை இராணுவ அதிகாரிகளிடம் கைய ளிக்கப்போவதாகக் கூறியிருந்தபடி கடந்த 3ம்திகதி காலை 10 மணியள வில், 41 சடலங்களை சர்வதேச செஞ் சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளிடம் மல்லாவியில் வைத்து புலிகள் ஒப்படைத்தார்கள். முதலாம் திகதி காலை இடம்பெற்ற சண்டைகளின் போது கொல்லப்பட்ட இராணுவத்தி னரில் பலரது சடலங்கள் உருக்கு லைந்து விட்ட காரணத்தினால் அவற்றை தாங்களே அழித்து விட்ட தாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மிக மோசமான சண்டைகள் பரந்தன் பகுதியிலேயே நடை பெற்றுள்ளது. இருப்பினும், நேரடி மோதல்களில் கொல்லப்பட்டவர் களிலும் பார்க்க கபீர் குண்டு வீச்சு விமானத் தாக்குதல்களினாலும், பறக்கும் யுத்த டாங்கி என வருணிக் கப்படுகின்ற தாக்குதல் ஹெலி கொப்டரின் ஷெல் குண்டுத்தாக்கு தல்களினாலுமே பாரிய உயிரிழப் புக்களை புலிகளுக்கு இராணுவத்தி னரால் இந்தச் சண்டையின் போது ஏற்படுத்த முடிந்ததாக வன்னிப்போர் முனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கிளிநொச்சி - பரந்தன் - ஆனையிறவு தளங்கள் மீதான தமது தாக்குதலில் ஒரு பட்டாலியன் இராணுவத்தினர் போர்க்களத்திலிருந்து செயலாற்ற முடியாத நிலையில் அகற்றப்பட்டுள் ளதாக புலிகள் தமது அறிவிப்பில் தெரிவித்திருந்தார்கள். 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன், சுமார் 400பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இந்தச்சண்டையில் ஏற்பட்ட இரா ணுவ இழப்புக்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் எதுவிதமான உத்தியோக பூர்வ விபரங்களையும் தெரிவிப்ப தற்குத் தவறிவிட்டது. ஆயினும், பலாலியில் உள்ள இராணுவப் படைத் தலைமை அலுவலகம் கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் நடைபெற்ற பாரிய சண்டைகளின் போது ஏற்பட்ட இழப்புகள் குறித்து கடந்த 6ம்திகதி உத்தியோகபூர்வமான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி புலிகளின் தாக்குதலை இராணுவத்தினர் முறியடித்துள்ளனர். 350புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையானோர் காயம டைந்தார்கள். தாக்குதல் முடிவுற்ற நிலையில் ஓர் அதிகாரி உட்பட 52 இராணுவத்தினர் நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். ஓர் அதிகாரி உட்பட 52 இராணுவத்தினர் சண்டைகள் நடைபெற்ற வேளையில் காணாமல் போயுள்ளார்கள். 6 அதிகாரிகளும் 355 இராணுவத் தினரும் சிறு காயங்களுக்கு உள்ளா னார்கள்.

எப்படி இருப்பினும் இரு தரப்பிலும் மிக மோசமான உயிரிழப்புக்கள் நேர்ந்துள்ளதாகவே பக்கச் சார்பற்ற வன்னித் தகவல்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆனையிறவு தளத்தின் உயிர் நாடி யான தொலைத் தொடர்பு கோபு ரத்தை புலிகள் தாக்கி நிர்மூல மாக்கியதன் விளைவாக தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகளுக்கும், இராணுவ தலைமையகத்திற்கும் இடையேயான சகல தொடர்புகளும் முதலில் அற்றுப்போயின. இரண்டாம் திகதி நண்பகல் அளவிலேயே மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்த முடிந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இருந்தபோதிலும் இதனால் சீர்குலைந்து போன யாழ் குடாநாட்டுக்கான பொது தொலைபேசி தொடர்பு சேவைகள் ஒரு வாரகாலத்தின் பின்பே சீராகியது.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக் கையின் மூலம் நாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கு ஒரு முடிவைக்கொண்டு வந்து இனப்பிரச் சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று அரசாங்கம் சர்வதேச ரீதியாக உத்தரவாதம் தெரிவித்து, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் உளப்பூர்வமாக ஈடுபட்டுள்ளதாக உலக நாடுகளுக்குக் காட்டிக் கொண் டாலும் உண்மையான நிலைமைகள் ஏறுக்கு மாறாக இருப்பதையே போர்க்கள நிலைமைகள் காட்டு கின்றன.

அது மட்டுமல்லாமல் கிளிநொச்சி தொடக்கம் ஆனையிறவு வரையி லான இராணுவ தளங்கள் மீது புலிகள் மேற்கொண்டுள்ள பாரிய இராணுவ தாக்குதலானது மூன்றாம் கட்ட ஈழப்போரில் தீவிரம் மிகுந்து புதிய பரிமாணம் ஒன்றை ஏற்படுத்தி யுள்ளதை அவதானிக்க முடிகின்றது. திடீர் திடீரெனத் தோன்றி அரச படைகள் மீது கெரில்லாத் தாக்குதல் களை நடத்திவிட்டு ஓடி ஒளிந்து கொள்ளுகின்ற அரச எதிர்ப்பு நடவடிக்கைகளிலேயே புலிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்ற அரச பிரசாரங்களை போர்க்கள நிலைமைகள் தலைகீழாக்குகின்றன.

அத்துடன் சகல விதமான யுத்த வளங்களையும் கொண்டுள்ள அரச படைகளைத் திட்டமிட்ட ரீதியிலான எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளின் மூலம் நிலை தடுமாறச் செய்கின்ற போர் வல்லமையை புலிகள் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இவை தீர்க்கமாக எடுத்துக் காட்டுவதாகவே உள்ளன.

மேலும் நாட்டையே கதிகலங் கடித்துக்கொண்டிருக்கின்ற யுத்த நிலைமைகள் அரச படைகளின் கட் டுப்பாட்டில் ஒரு போதும் இல்லை யென்பதையும் யுத்தத்தை வேண்டிய நேரத்தில் வேண்டிய இடத்திற்குத் திசை திருப்பக்கூடிய வல்லமை புலிகளிடம் இருக்கின்றது என்பதை யும் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுப்படுத்துவதாகவுமே இது உள்ளது.

நம்பி ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையகத் தமிழாராய்ச்சி மகாநாடு அல்லது நக்குண்டார் நன்றிப் பெருவிழா !

பொன் வேந்தன்




பத்து இலட்சம் மலையக மக்களையும், அவர்களின் உணர்வுகளையும் விற்றுப் பிழைக்கின்ற மலையக அரசியல்வாதிகள்!

எட்டி உதைப்பவன் கால்களை நக்கிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்ட ஒரு பிழைப்புவாதக் கூட்டம்!

படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள் என்ற பெயரால் ஆக்க இலக்கியத் துறையை அவலட்சணப்படுத்தும் கலை விபச்சாரிகள்!

எச்சில் நாய்களாக, எல்லா வாய்ப்பையும் தம் அரசியல் நலனுக்காகப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு முதுகு சொறியும் கல்வியாளர்களும், புத்திஜீவிகளும்.

உடலை விற்றுப்பிழைத்தேன். தமிழே உன்னைத் தாலாட்ட வருகிறேன் என்று வெக்கம் கெட்ட கோசமிடும் ஒரு கூட்டம் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு என்ற பெயரில் டிசம்பர் 13,14இல் நுவரெலியாவில் நடத்திய கூத்தை, கேவலத்தை என்னவென்பது?

மாநாட்டிலே கலையரங்குகள், இசையரங்குகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளதாக ஒத்தூதி மலையக மக்களையே கேலி செய்த தேசிய தமிழ் நாளிதழ்கள். அதற்காக கையூட்டாக நீண்ட காலமாக பத்திரிகைத்துறையில் தொழிலாற்றியமைக்கான பரிசுகள். இதைவிட வெட்கக்கேடு இரண்டு நாட்களுமே மொத்தம் 66 மணித்தியாலம் நடைபெற்ற விழாவில் இரண்டு நாட்களிலும் மொத்தமே ஐந்தே ஐந்து கலை நிகழ்ச்சிகள். அவற்றில் மிகச் சிறப்பாக குறிப்பிடப்படவேண்டிய இரண்டு நிகழ்வுகளும் இருந்தன.

1. வெலிங்டன் தோட்டப் பாடசாலையின் சின்னஞ்சிறு மாணவர்கள் நடத்திய குசேலர் நாடகம்.
2. நிவேதா நர்த்தனாலயா மாணவிகளின் கோலாட்டம்.

இவற்றைத்தவிர குறிப்பிடக்கூடிய நிகழ்வாக நூல் வெளியீடு அமைந்திருந்த போதும் அந்த நூல்கள் அச்சகத்தில் இருந்து . நட்சத்திர கனவான்களுக்காக மட்டுமே கொண்டு வரப்பட்டிருந்தது. மாநாட்டு மதியுரைக் குழுவோ, அமைச்சரோ, அவை எங்கு எப்படிக் கிடைக்குமெனக்கூறவேயில்லை. பணம் கொடுத்துக் கூடப் பெறக்கூடிய நிலையில் இல்லை.

மலையக தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு முன்பு இரண்டரை மைல் நீள ஊர்வலத்தில் நுவரெலியா வீதிகளில் மலையகத்தின் பாரம்பரிய கலை, நிகழ்ச்சியுடன் மக்கள் அணிதிரண்டு வர அது 1983ம் ஆண்டுக்குப்பின் நுவரெலியாவில், மலையகத் தமிழரின் எழுச்சி ஊர்வலம் என விவரிக்கப்பட்டபோதும், திருமலை நகரசபை தலைவர் சூரியமூர்த்தி புளகாங்கிதம் அடைந்த போதும் அது மலையக மக்களுக்கு ஒரு அவமானகரமான தலைகுனிவான நிகழ்வு எனவே வரலாறு பதிவு செய்யும்!

13ம்திகதி ஐ.தே.கட்சி மாநாட்டில் (அப்படிக் குறிப்பிடுவதுதான் பொருத்தம்) நூல் வெள்ளியீட்டுரை நிகழ்த்தவிருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி வருகை தராததன் மூலம் தனது பெயரைப் பாதுகாத்துக் கொண்டார் என்பது பொருந்தும். அன்று புத்திரசிகாமணி, சூரியமூர்த்தி, அ. கதிரேசன், ஊவா - வேலாயுதம், டபிள்யூ. பி. திசாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உரையாற்றினர்.

புத்திரசிகாமணி பல தடவை மேடையில் இருந்து குறிப்பிட்டது போல் ''தன்னை அரசியலில் வளர்த்து விட்ட தலைவருக்கான நன்றிப் பெருவிழா'', அமைச்சராக்கியவர்களுக்கான நன்றிப்பெருவிழாவாகவே இது அமைந்திருந்தது.

மலையக மக்களை எட்டி உதைத்த தோடல்லாமல் எள்ளி நகையாடும் வகையில் மத்திய மாகாண முதலமைச்சர் பி.பி.திசாநாயக்க தான் பாராளுமன்றத்தில் இருந்து மாகாண சபைக்கு போன போது ''மலையகத்தின் பாரம்பரிய சிங்கள மக்களின் காணிகளை மீண்டும் அவர்களுக்கு பங்கிடவே இங்கு வந்தேன்'' எனப் பிரகடனப்படுத்தியவர்.

தனது ஆட்சிக்காலத்தில் மத்திய மாகாணத்தில் மட்டும் 74 ஆயிரம் ஹெக்டர் (58+18) தோட்டகாணிகளை பங்கிட்டு சிங்களக்குடியேற்றங்களை அமைத்தவர்.

- தோட்ட பாடசாலைகளை அரசுடமையாக்கி மலையக கல்விக்கு உயிரூட்டிய மகான் என்றும்,

-சீடா திட்டத்தை கொண்டு வந்த தலைவன் எனவும்,

- லயத்தில் இருந்து வானத்தை பார்த்த தோட்டத்தில் வேலைசெய்யும் கூலியான உனக்கு வீட்டுரிமை சான்று வழங்கிய தலைவர் ரணில்'' எனவும்,

அவரை அடுத்த ஜனாதிபதியாக்கு வதே தமிழா உன் கடமை எனவும், பேசியபோது மண்டபம் அதிர கைத்தட்டவும் ஒரு வெட்கம் கெட்ட கூட்டம்; கல்வியாளர் வரிசையிலும் கலைஞர் வரிசையிலும் கூட குந்திக்கொண்டிருந்தது.

ரணில் தனது பேச்சில் மிகக் கவனமாக ''தோர்ட்டப்புறத்தில் வேலை செய்யும் தமிழ் பேசுபவர்களெல்லாம்'' என அடிக்கடி குறிப்பிட்டமை மிகக் கொடிய அரசியல் உள்ளீட்டுடன் கூடியதாகும்.

மலையக மக்களைப் பகிரங்கமாக அழைத்து வெற்றுக்கடதாசிஸ்ய நீட்டி வீட்டுரிமை சான்றிதழ் என உலகறிய கொடுத்து ஏமாற்றிய ரணிலும்,

→8




# இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளில் பெண்கள்

ரத்னா

ஒரு சமூகத்தில் பத்திரிகைகள் ஆற்றும் பங்கு அளப்பரியது எனலாம். அன்றாடச் செய்திகளை சுடச்சுட வழங்குவதுடன் அதன் கடமைகள் நிறைவடைவதில்லை. மாறாக, பலதரப்பட்ட துறைகளின் உண்மை பொய்மைகள், விமர்சனங்கள். நன்மை தீமைகள், வியாக்கியானங்கள் என்பன பத்திரிகைகளில் வெளிவருவதன் மூலம் சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதரும் மிக்க பயனை அடைகின்றனர். இந்த வகையில் இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள் அரசியல், பொருளாதார, கலாசார துறைகளில் பெருமளவு விடயங்களை வெளியிட்டு வருகின்றன. எனினும், இப்பத்திரிகைகள் பெண்களுக்கென தனிப் பக்கத்தை ஒதுக்கிவிட்டு, பெண்கள் தொடர்பாக ஆற்றும் சேவைகள் கேலிக்கிடமானவையாக உள்ளன.

பெரும்பாலும் வீரகேசரி வார வெளியீடு, ஞாயிறு தினக்குரல், தினமுரசு வாரப்பத்திரிகை, மித்திரன் வாரமலர் , தினகரன் வாரமஞ்சரி, நவமணி போன்ற பத்திரிகைகள் பெண்களுக்கென தனிப் பகுதிகளை ஒதுக்கியுள்ளன. *வீரகேசரி வெளியீடு - மங்கையர் சங்கமம், தினக்குரல் - இவள், தினமுரசு - லேடீஸ் ஸ்பெஷல், தினகரன்* - குடும்ப குவலயம் என்றவாறு பெண்களுக்கென பக்கங்களை ஒதுக்கி விசுவாசமான சம்பிரதாய பூர்வமான தகவல்கள், ஆக்கங்கள் என்பவற்றை வழங்கி வருகின்றன.

(இதில் **சரிநிகர்** ஒரு மாற்றுப் பத்திரிகையாக இருப்பதால் பெண்கள் தொடர்பாக சமூகத்தில் நிலவும் பிற்போக்கத்தனத்திற்கு எதிரானதாகவும் ஆணுக்கு நிகரான மனித ஜீவியாகப் பெண்ணை அடையாளப் படுத்தவும் ஆன விடயங்களைத் தொடர்ச்சியாகவும் செய்து வருகின்றது. எனவே அதனைப் புறநடையாகக் கொள்வோம்.)

பொதுவாக, பத்திரிகைகளில் இவ்வாறு பெண்களுக்கென பக்கங்களை ஒதுக்குவதன் தாற்பரியம் தான் என்ன? இரண்டாம் தரப்பிரஜைகளாக பெண்கள் கருதப்படுவதனை உறுதிப் படுத்தும் ஓர் நடவடிக்கையாகவே இது அமைகின்றது. குறிப்பாக பெண்கள் பகுதி பெண்களுக்கானவை, பிற பகுதிகள் ஆண்களுக்கானவை என்பதைச் சுட்டுவதாகவும் இதனைக் கருத இடமுண்டு. பெண்கள் பக்கங்களைக் கூடுதலாக பெண்கள் அவதானிக்கும் தன்மையும் காணப்படுகின்றது.

பெண்களும், சிறுவர்களும் பாதுகாக்கப்படவேண்டியோராகவும், பாதுகாப்பை வேண்டி நிற்போராகவும் உள்ளதன் காரணமாகவே அரசியல் திட்டங்களிலும், பிற தனியார் பொதுயாப்புகளிலும் பெண்களுக்கென தனியே சரத்துகள் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. இது பெண்களுக்கென தனித்துவ உரிமைகள், சுதந்திரங்கள் தேவையென வலியுறுத்துகின்றபோதிலும் ஆண், பெண் சமத்துவத்தை கேள்விக்குட்படுத்துகின்றன.

இந்த வகையில், அச்சுதொடர்பூடகங்களில் பெண்களுக்கென ஒதுக்கப்படும் பகுதி எவ்வாறு விளங்குகின்றது என்பது ஆராயப்பட வேண்டியது.

**வீரகேசரி**:- மங்கையர் சங்கமம் எனப்பெயரிடப்பட்டு மகிஷா என்பவரால் பெண்கள் பக்கம் தொகுக்கப்படுகின்றது. அழகுக்குறிப்புகள், வீட்டைப் பராமரிப்பது எப்படி? சமயலறை டிப்ஸ், தையல் அலங்காரம், குழந்தைகள் வளர்ப்பு என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சமீபத்தைய இதழில் பெண்கள் நித்திரைக்குச் செல்ல முன் செய்ய வேண்டிய வேலைகள் அப்பட்டமான அடிமைத்தனத்தைப் பிரதிபலித்தது.

**தினக்குரல்**:- இவள் என்ற தலைப்பில் சக்தி என்பவரினால் தொகுக்கப்படுகின்றது. பெண்களுக்கான சிந்தனைக் குறிப்புகள், பெண்கள் தொடர்பான முக்கியஸ்தர்களின் பொன்மொழிகள், வயதானோர், குழந்தைகள் பராமரிப்பு, உணவு தயாரிப்புக் குறிப்புகள், தையல் அலங்காரம், வீட்டு அலங்காரம் அழகுக்குறிப்புகள்.

**தினகரன்** :- குடும்ப குவலயம் என்ற தலைப்பில் ஆனந்தி என்பவரால் தொகுக்கப்படுகின்றது. பெரும்பாலும் சமூகத்தில் முன்னணி இடம் வகிக்கும் பெண்களது சம்பிரதாயபூர்வமான பேட்டிகள், ஆங்காங்கே பெண்கள் அமைப்புகளின் பிரசுரங்களிலிருந்து கட்டுரைகள் மீள் பிரசுரம், உணவு தயாரிப்பு முறைகள், அழகுக்குறிப்புகள் கணவன், பிள்ளைகள் பராமரிப்பு.

**தினமுரசு** வாரமலர்:- லேடீஸ் ஸ்பெஷல் என்ற தலைப்பின் கீழ் அழகுக்குறிப்புகள், கூந்தல் பராமரிப்பு போன்ற சம்பிரதாய பூர்வமான விடயங்கள். தற்போது டயனாவின் வாழ்க்கை வரலாறு பிரசுரமாவதால் வேறு விடயங்களுக்கு இடமளிக்கப்படுவதில்லை. மேலும் தமிழ்நாட்டை அடியொற்றி பட்டுச்சேலை பரிசுத் திட்டமும் தவறாமல் பிரசுரமாகின்றது.

இப்பத்திரிகைகளைத் தவிர நவமணி பத்திரிகையும், மித்திரன் வாரமலர், ஜனனி போன்ற பிற பத்திரிகைகளும் மேற்கண்ட விடயங்களை உள்ளடக்கும் வகையில் பெண்களுக்கென பகுதிகளை ஒதுக்கியுள்ளன.

இந்த வகையில் இவ்வாறு பத்திரிகைகளில் பெண்களுக்கென பக்கங்கள் ஒதுக்கப்படக் காரணம் பெண் வாசகிகள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுவது தான் என இப்பத்திரிகைகள் நியாயம் கற்பிக்க

→13

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அஷ்ரப் பௌஸி மோதல்.. ஒரு வரலாற்றுத்தொடர்ச்சி..

"ஒரு மரம் வளைந்திருக்கிறது
என்று
நாம் ஏன் முணுமுணுக்கவேண்டும்
நமது தெருக்களில் வளைந்திருக்கும்
மனிதர்களே
சிலர் காணப்படும் போது?
பிறைச்சந்திரன் ஏன் சாய்ந்திருக்கிறது
என்று
நாம் ஏன் குறை கூற வேண்டும்?
யாராவது வானத்தை எட்டிப்பிடித்து
அதை
நிமிர்த்த முடியுமா?"

- நைஜீரிய பழங்குடிமக்களது பாடல்.

அமைச்சர் பௌசிக்கும் அஷ்ரஃபுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் இப்போது வெகு சாதாரணமான விடயமாக மாறிவிட்டது. பத்திரிகைகளை விரித்தால் மறுப்பறிக்கைகளும், எதிர்க்கருத்துகளுமாய் இந்த அறிக்கைப்போர் நமக்கு சலிப்பையும், வேடிக்கையையுமே உண்டு பண்ணுகின்றன.

இரு வேறுபட்ட கட்சிகளைச் சேர்ந்த இவர்கள் தாம் சார்ந்த கட்சிகளின் கொள்கைகளுக்கு விசுவாசமாகவா மோதிக்கொள்கிறார்கள்? இங்குள்ள நிலைமைகளைக் கூர்ந்து அவதானிக்கும் எவரும் இதற்கு எதிர்மறையான பதிலையே சரியானதெனக் காண்பார்.

இது இன்று நேற்றுத் தொடங்கிய பிரச்சினையல்ல. இதற்கு ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணியுள்ளது. பௌசி- அஷ்ரஃப் ஆகிய இரு தனிமனிதர்களிடையேயான ஒரு விவகாரமாக இதைக்கருதுவது, பிரச்சினையின் ஆழத்தைப்பார்க்க மறுக்கும் ஒரு போக்காகும். உண்மையில் இது நன்கு புரையோடிப்போயுள்ள மனப் பதிவுகளுக்கிடையிலான போராட்டமாகும்.

தெற்கு முஸ்லிம் அரசியல் தலைமைத்துவமே மிக நீண்டகாலமாக இலங்கை முஸ்லிம்களது அரசியலில் ஆதிக்கமுள்ள ஒரு சக்தியாக இருந்து வந்துள்ளது. இது உடைக்கப்பட முடியாத மரபாகவே மிக நீண்ட காலமாக செல்வாக்கும் செலுத்தியது. அஷ்ரஃப்பினுடைய வருகையும், முஸ்லிம் காங்கிரசின் தோற்றமும் இந்தப்பாரம்பரியத்தின் குறிப்பிடத்தக்க மீறலாக வெளிவந்தமை தெற்கு முஸ்லிம்களின் தலைமையை விசனத்திற்குள்ளாக்கியது.

யாழ்ப்பாணத் தமிழர்கள் எப்படி மட்டக்களப்பு தமிழர்களை புறக்கணித்தார்களோ, அதையொத்த வடகிழக்கு முஸ்லிம்களை ஒதுக்கும் பிரதேசவாதப்புற்றுநோய் தெற்கு முஸ்லிம்களிடம் நீண்டகால மனப் பதிவாக இருந்து வருகிறது. 'மட்டக்களப்பு முஸ்லிம்கள்', 'மன்னார் முஸ்லிம்கள்' போன்ற வார்த்தைப்பிரயோகங்கள் இம்மக்களை அடையாளப்படுத்துவதற்குப் பதிலாக, இம்மோசமான மனப்பதிவின் வெளிப்பாடாகவே தெற்கு முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒடுக்கப்பட்ட தலித்மக்கள் அவர்களது தொழில் சார்ந்த பெயர்களால் அழைக்கப்படுவது, அவர்களிடம் எவ்வாறான உளப்பாதிப்பை ஏற்படுத்தியதோ அதேபோன்று பாதிப்பையே இதுவும் வடகிழக்கு முஸ்லிம்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு முஸ்லிம்களது சமூகக் கட்டுக்கோப்பு, தெற்கு முஸ்லிம்களிடம் இருந்து வேறுபட்ட அம்சங்களைக் கொண்டிருந்தமையும் இப்போக்கிற்கு ஏதுவாகியது எனலாம். ஏறத்தாழ சமூக, அரசியல், பொருளாதார சூழல்களில் ஒருமித்த தன்மையும், புவியியல் ரீதியான ஓரளவு தொடர்ச்சியும் வடகிழக்கு முஸ்லிம்களது சமூகக்கட்டமைப்பை தெற்கு முஸ்லிம்களது கட்டமைப்பில் இருந்து வேறுபடுத்திக்காட்டின. தலைநகரை விடவும், மிகத் தொலைவில் இப்பிரதேசங்கள் இருந்தமையால் மாற்றங்களும், புதியவரவுகளும் கிழக்கு முஸ்லிம்களது சமூகக்கட்டமைப்புக்குள் உடனடியாக உள்வாங்கப்படவில்லை. இதனால் ஒரு வகை எளிமைத்தன்மை அங்கு காணப்பட்டது. எனினும், அண்மைக்காலமாக இப்போக்கில் சில மாற்றங்களை அவதானிக்க முடிகிறது.


வடகிழக்கு முஸ்லிம்களிடம் பொதுவாகக் காணப்படும் இப்பண்புகளை தெற்கு முஸ்லிம்கள் தவறான அர்த்தத்தில் விளங்கிக்கொண்டனர். ஆரம்பத்தில் ஒருசிலரிடையே மட்டும் நிலவிய இக்கருத்து பின்னர் படிப்படியாக வளர்ச்சிபெற்று ஒரு சமூகமனப்பதிவாக நிலைபெற்று விட்டது.

70களுக்குப் பின் கிழக்கு முஸ்லிம்களிடம் ஏற்பட்ட கல்விசார் மாற்றம் முற்போக்காகச் சிந்திக்கும் ஒரு புதிய தலைமுறையை உருவாக்கியது. இவர்கள் தெற்கு தலைமைத்துவத்திற்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்களில் வடகிழக்கு முஸ்லிம்கள் மிக நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்டே வந்தார்கள். தெற்குத் தலைவர்கள் தலைவர்கள் இருந்தனர்.

கிழக்கு முஸ்லிம்கள் தெற்கு நோக்கி நகரவேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலை அதிகமாக உள்ள அதேவேளை தெற்கு முஸ்லிம்களது கிழக்கை நோக்கிய வருகை ஏறத்தாழ அற்றுப்போன நிலையிலேயே காணப்படுகிறது. இந்த ஒரு வழி அசைவு ஆழமான சமூகப் புரிந்துணர்வுக்கு மிகப்பெரிய தடையாக அமைந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களது ஐக்கியப்பட்ட போராட்டம் பற்றிய முற்போக்கான எண்ணம் கொண்டவர்கள் தெற்கு தம்மை பிரதிநிதித்துவப்படுத்துவது தனது எதிர்கால நலன்களுக்கு ஆபத்தாக அமையும் என இவர்கள் கருதினர். தமது தலைவர்கள் தம்மிலிருந்தே எழுச்சிபெற வேண்டும் என்பதில் மிகுந்த வேட்கை கொண்டவர்களாக இவர்கள் இருந்தனர். 80களில் தோன்றிய அரசியல் சூழ்நிலை இவ்வெண்ணம் செயலுறுப்பெற உடனடிக் காரணியாய் அமைந்தது. இச்சூழ்நிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. இன்று இலங்கை அரசியலில் பேசப்படும் ஒரு கட்சியாக அது வளர்ந்துள்ளது. வடகிழக்கு முஸ்லிம்கள் தமது தலைவர்களை தாமே உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் இதனால் நிறைவு செய்யப்படுகிறது என்று பலரும் நம்பினர்.





வடகிழக்கு முஸ்லிம்களது மரபு வழி அரசியல் சிந்தனைப்போக்கில் ஏற்பட்ட இம்மாற்றத்தை, படிப்படியான வளர்ச்சியை தெற்கு முஸ்லிம் தலைமைத்துவம் மிகச்சரியாக உணரத்தவறிவிட்டது. தமிழர்களது ஆயுதப்போராட்டம் தமது சகோதர முஸ்லிம்களுக்கு எதிராக நிலைப்பாட்டை எடுத்தபோதும் கூட, அதை ஒட்டு மொத்தமான ஒரு சமூகப் பிரச்சினையாக எதிர்கொள்வதற்கு அது தவறியது. அப்போது நிலவிய பயங்கரமான சூழலுக்கு நேரடியாக முகம்கொடுக்காமையினால், இது பற்றிய தெளிவான புரிதல் இல்லாத 'அப்பாவிகளாகவே' தெற்கு முஸ்லிம் முஸ்லிம்களது தலைமைகளது தவறான அரசியல் போக்கால் விசனத்துக்குள்ளாயினர். உண்மையில் தெற்கு முஸ்லிம்கள் இங்கு குற்றவாளிகள் அல்லர். அவர்களது தலைமையே தவறான அரசியல் நிலைப்பாடுகளையும், புனைவுகளையும் அவர்கள் மீது திணிக்கின்றது. தமது கருத்தை வலுப்படுத்துவதற்காக போலி நியாயங்களை இத்தலைவர்கள் சிருஷ்டிக்கின்றனர்.

தாம் முழு இலங்கை முஸ்லிம்களுக்காகவும் குரல் எழுப்புவதாகக்கூறிக்கொண்டு தெற்கு முஸ்லிம்களது நலன்கள் மீது மட்டும் குறியாக இருப்பதே பௌசி போன்றோரது நிலைப்பாடாக உள்ளது. கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான ஓர் அதிகார அலகு தோன்றினால் தெற்குமுஸ்லிம்களுக்கு எப்போதுமே அது ஓர் அச்சுறுத்தலாக இருக்கும் என இவர்கள் வாதிக்க முனைகின்றனர்.

தம் சமூக இருப்புக்கும், உயிர் உடைமைக்கும் எதிரான அச்சுறுத்தலுக்கும் நேரடியாக முகம்கொடுப்பவர்கள் வடகிழக்கு முஸ்லிம்களே. தம்மை ஸ்திரப்படுத்திக்கொள்ள முஸ்லிம் சுயாட்சி அலகொன்று தவிர்ந்த மாற்று வழிகள் எதுவும் இல்லையென அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். சிங்களப்பேரினவாதிகளோ, பத்திரிகைகளோ இதற்கெதிராக கருத்துத் தெரிவித்தால் அது தம்மையும் சேர்த்து பாதிப்பதாக இவர்கள் கூறுகின்றனர். இந்த அரைகுறைக் கருத்துக்களுக்கு ஆதரவாகவோ, தாம் சார்ந்த பேரினவாதக் கட்சிகளுக்கு வக்காலத்து வாங்கவோ, தமது சமூகத்தின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமான வடகிழக்கு முஸ்லிம்களது எதிர்காலத்துடன் விளையாடுவது குறித்து தெற்கு முஸ்லிம் தலைமை மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

மறுபுறம் அஷ்ரஃப் தன்னை ஒரு தேசிய தலைவராகக் காட்ட முனைந்து கிழக்கு முஸ்லிம்களது நலன்களை மட்டுமே குறியாகக்கொண்டு செயற்படுகிறார். இது அவருக்கு அரசியல் லாபத்தை தேடித்தரலாம். ஆனால், இது தெற்கு வடகிழக்கு முஸ்லிம்களது சமூகப்பிளவை மேலும் அதிகரிக்கவும், ஆழப்படுத்தவுமே உதவும். அதிலும் அண்மைக் காலமாக தென்கிழக்குப் பிராந்திய சபைபற்றி முஸ்லிம் காங்கிரஸ் பேசத்தொடங்கியுள்ளது. இதனால் தென்கிழக்கிற்கு அப்பாலுள்ள முஸ்லிம்களை பிரச்சினையின் மையத்தில் இருந்து புறம் ஒதுக்கவே அது முனைகிறது. சாத்தியமான தீர்வுக்கு வருவது பற்றியும் விட்டுக்கொடுத்து செயற்படுவது பற்றியும், மு.கா. அதிகமாக கதைத்து வருவது இக்கருத்தை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. ஏனைய பிரதேச முஸ்லிம்களின் சம்மதம் இன்றேல், தென்கிழக்குக் கோரிக்கையைக் கைவிடவும், தயார் என அஷ்ரஃப் கூறிவருகிறார். இந்தப்பூச்சாண்டிகளையெல்லாம் கடந்த ஒரு தசாப்தமாக முஸ்லிம்கள் கண்டும் அனுபவித்தும் வருகின்றனர். இனியும் அவர்களை ஏமாற்ற முடியாது என்பதை அஷ்ரஃப்பும், மு.காவும் உணர வேண்டும்.

அஷ்ரஃப் - பௌசி மோதல் சமூக அக்கறையினால் எழுந்ததல்ல. ஒளிவட்டங்களைத் தேடி ஓடும் இவர்கள், சமூகப் பொறுப்புணர்ச்சியோடு தம்மால் குரல் எழுப்ப முடியாது என்பதை மீண்டும் மீண்டும் தமது நடவடிக்கைகளால் உறுதிப்படுத்தி வருகின்றனர். இதில் மிகச்சரியான தீர்வுக்கு வருவதாயின் குறுகிய பிரதேசவாத சிந்தனைகளுக்கு அப்பால் நின்று பிரச்சினையின் ஆழத்தை ஊடுருவிப்பார்ப்பது மிக அவசியமாகும்.

ஸிராஜ் மஷ்ஹூர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# கடமை வீரர்கள்!

கொழும்புக்கு வருகின்றனர் அவர்கள். யுத்தத்தில் யாதேனும் அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வேறு வழியின்றி கொழும்பு வருகின்றார்கள் அவர்கள். காலைக்கூட சரியாக நீட்டிப் படுக்க முடியாத குறுகிய லொட்ஜ்களில் தங்குகின்றனர். சற்றும் காற்றேனும் உட்புகா அறைகள் அவை. ஆயினும் தான் என்ன? கணவனுடன்/ தகப்பனுடன் தொலைபேசியில் கதைக்கலாம். மகனோ/ மகளோ அல்லது சகோதரமோ தம்மை அவர்கள் இருக்கும் நாட்டிற்குக் கூப்பிட்டு விடுவார்கள். பாஸ்போட் எடுக்க வேண்டும். கனவில் அவர்கள்! காலை புலரும் முன் பொலிஸ் வருகிறது. நாயிலும் கேவலமாக வீதியில் விரட்டுகிறது. உடுப்புப் பைகள், பொதிகள், தூக்கி வீசப்படுகின்றன. சமாதான யுத்ததின் காவலர்களால் தாக்கி வெளியே தள்ளப்படுகின்றனர். ஏன்? தனது நாட்டினுள் தனக்கு பிடித்த இடத்தில் வசிக்க அவர்களுக்கு உரிமையில்லையா? இது அவர்தம் நாடு இல்லையா? சுதந்திரப் பொன்விழாவிற்காக ஜோடிக்கப்பட்டிருந்த வீதியில் திகைப்புற்று கைவிடப்பட்ட நிலையில் நிற்கின்றார்கள் அவர்கள். கௌரவமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். புழுவிலும் கேவலமாகப் பலர் பார்க்கும் காட்சிப் பொருளாய் வீதியில் நின்று கதறுகின்றனர்.

எந்தச் சட்டம் தம்மைத் தெருவில் தள்ளியது என அறியாதவர்கள் அவர்கள். இனியென்ன செய்வது? பொன்னம்பலவாணேசர் கோவிலிலாவது தங்கிக் கொள்ளலாம். தற்காலிகமாயினும் வயதிற்கு வந்த மகளுடனும், வெயில் தாளாமல் அழும் குழந்தையுடனும் நடுத் தெருவில் நிற்பதை விட அது மேல். கோயிலுக்குப் போகின்றனர். அது தமிழருடைய கோயில். நிச்சயம் அவர்களைஆறியிருக்க விடும் என்பது அவர்களது நம்பிக்கை. ஆனால் கதவு திறக்கவில்லை. மீண்டும் கதறுகின்றனர். அவர்களின் கதறல் கேட்டும் பொன்னம்பலவாணேசரும் கதவு திறக்கவில்லை. அதன் தர்மகர்த்தாக்களும் கதவு திறக்கவில்லை. மக்களின் கண்ணீரை விட கோயிலின் புனிதம் முக்கியம். அது மாசுற்று விடும் அல்லவா? கோயில் பூட்டியபடியே கிடக்க மேலும் என்ன செய்வது? மக்கள் அநாதையாய் தவிக்கின்றனர். மாலைநேரம் வருகின்றனர் ஈ.பி.டி.பியினர். பஸ் வண்டிகளில் ஏற்றிக் கொண்டு செல்கின்றனர். யாருமற்ற அநாதையாய் நின்றோர் ஆபத் பாந்தராய் வந்த ஈ.பி.டி.பியினரை நன்றியுடன் நோக்குகின்றனர். அவர்களால் என்ன செய்ய முடியும்? நாதியற்றவர்களுக்குத் தெய்வமே துணையில்லாத போது?

தம்மை நடுத் தெரிவில் நிற்க வைத்த அவரசரகாலச் சட்டவிதிக்கு கையுயர்த்தும் கனவான்கள் இவர்கள் தான் என்பது பற்றி அவர்களுக்குத் தெரியும்.நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி கொடூரம் புரியும் இரவ்கள் தான் தலையாட்டுகின்றார்கள் என்பதும் தெரியும். பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும் இவர் தம் செயல் பற்றியும் தெரியும். நாளைக்கும் அரசின் காலை நக்கி நக்கி தம் விசுவாசத்தைக் காட்டி மேலும் தம்மை விரட்டும் சட்டங்களுக்குக் கை உயர்த்துவர் என்பதும் தெரியும். நாளை இதைக் கண்டித்து காரசரமாக அறிக்கை விடுவர் என்பதும் தெரியும்.பாராளுமன்றத்தில் கூக்குரல் இடுவர் என்றும் தெரியும். தம்பத்திரிகையில் எழுதிக் கிழிப்பர் என்றும் தெரியும். அப்படியே அடுத்த முறையும் அவசர கால சட்ட விதிக்கு கை உயர்த்தி நிற்பர் என்றும் தெரியும். ஆனாலும் மக்கள் என்ன செய்துவிட முடியும்? தேவதேவா..... 'அவர்கள் தங்கள் கடமையைத் தானே... செய்கிறார்கள்!'.

# ரோசக்காரர்கள்!

மேளதாளங்கள் ஒலிக்க, புரோகிதர்கள் மந்திரம் கூற யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்ட பொது நூலகத்திற்குப் பதிலாக தற்காலிகமான ஒரு நூலகம் கட்டி முடித்து அமைச்சர்களால் திறக்கப் பட்டாயிற்று. இனி என்ன? எல்லாம் கிடைத்து விட்டது தமிழ் மக்கள் மிதவாத அரசியலைத் தூக்கியெறிந்து விட்டு, ஆயுதப்போராட்டத்திற்குப் போனது நூலகம், எரித்ததற்குப் பழி வாங்கத்தானே. ஆயிரக்கணக்கான மக்களை, போராளிகளை இழந்தது இன்னொன்றை திருப்பிக் கட்டத் தானே. இனி ஆயுதத்தைத் தூக்கியெறிந்துவிட்டு வந்து சரணாகதி அடையத்தான் வேண்டும். நூலகம் எரியக் காரணமாக இருந்த பேரினவாத அரசியலும், அரசியலமைப்பும், பாராளுமன்றமும், வன்முறை அரசியலும் கொஞ்சம் கூட மாறாது. பதிலாக சகல தளங்களிலும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்து வருகின்ற இன்றைய சூழ்நிலையில் இந்நூலகம் திறந்தது எந்த மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காம் என்றெல்லாம் நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது. திருப்பி நூலகம் இன்னொரு முறை எரிக்கப்பட மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதற்கான அரசியல் சூழ்நிலைகள் அப்படியே இருக்கிறதே என்றெல்லாம் கூட நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது.

இந்தத் திறப்பு விழாவில் கூட டக்ளஸ் எவ்வளவு தூரத்திற்கு தமிழ் மக்களின் மானத்தை காப்பாற்றப் போராடினார் தெரியுமோ அவரைச் சோதனையிட - இராணுவத்தினர் முயல அவர் மறுத்து விட்டுத் திரும்பிப் போய்விட்டார். தான் அரசியல் நடாத்துவதே இராணுவத்தினர் போடும் பிச்சை என்ற போதிலும் கூட இப்படிச் செய்ய யாருக்குத் துணிவு வரும்? ரோசக்கார டக்ளஸ்! (பிறகு மங்களவின் விசேட அழைப்பின் பேரில் திரும்பி வந்தது ஹி...ஹி...ஹி...அது ராஜதந்திரம்.

இவரையும்விட இன்னொரு ரோசக்காரர் இருக்கிறார். புளொட் மாணிக்கதாசன். அவர் சோதனைக்கு மறுத்துத் திரும்பி வந்தவர் தான். ஆனால் திரும்பவும் விழாவுக்குப் போகவில்லை. டக்ளஸைவிட இவரை ரோசக்காரரென்றும் நீங்கள் நினைக்கலாம். இல்லாவிட்டால் இவரைத் திரும்ப மங்கள கூப்பிடவில்லை என்றும் நீங்கள் நினைக்கலாம். தமிழ்க் கட்சிகள் மக்களுடைய உரிமைகளுக்காகப் தாங்கள் போராடுவதாக நினைக்கும் போது உங்களுக்கு உதைக் கூட நினைக்கச் சுதந்திரமில்லையா என்ன?

இன்னொரு விடயம்; அவசரகாலச் சட்டத்துக்கு மாதாமாதம் பாராளுமன்றத்தில் கை உயர்த்தி படைக்கும் பொலிசுக்கும் தமிழர்களைச் சோதிப்பதற்கும் சந்தேகத்தின் பேரில் கைது செய்வதற்கும் கை உயர்த்துபவர்கள் அல்லது கை உயர்த்துகிற நேரம் பார்த்து பாராளுமன்றக் கக்கூசுக்குள் ஒளிபவர்கள் தானே இந்தத் தமிழ்க் கட்சிகள் இரண்டும் பிறகு ஏன் ரோசம் வருகிறது. அவர்கள் 'கடமையைத் தானே செய்யினம்.'

கா.சூ.த்ரன்

## மலையக...

தொண்டமானும் மலையக மக்களுக்கு இழைத்த துரோகங்களோ எண்ணற்றவை.

இந்த அவலட்சணங்களை எல்லாம் வெளிவராமல் மூடி மறைக்க பத்திரிகையாளர்களுக்கும், அதன் ஆசிரியர்களுக்கும் கேடயம் கொடுத்தார் புத்திரசிகாமணி.

''மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு'' என்ற உன்னதமான கருதுகோள் இப்படி மலையக வீதிகளில் விலை போவதைத் தடுக்க அக்கருதுகோள் அரசியல்வாதிகளையும், பிழைப்புவாத கூட்டத்தையும் விட்டு மலையக மக்களிடமும் புத்திஜீவிகளிடமும், கல்வியாளரிடமும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

நுவரெலியாவில் உள்ள பிரபல மலையக சட்டத்தரணியொருவர் ''மலையக ஆராய்ச்சிவள நிலையம்'' ஒன்றை நிறுவவும், சுதந்திரமாக மலையக ஆய்வுத்துறையையும் அறிவுத்துறையையும் ஊக்குவிக்கவும் வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இம்முயற்சி வெற்றிபெற அரசியல்வாதிகள் தேவையில்லை. அறிவுத்துறையினரின் ஆக்கபூர்வமான பங்களிப்பும், வழிகாட்டலுமே தேவை!

மாநாட்டில் கௌரவிக்கப்பட்டவர்களில் 33பேரில் பலர் பல தடவை ஒரே படைப்புக்காக பல மேடைகளில் பரிசுபெற்றவர்கள். மூன்று பேர் மதியுரை குழுவின் உறுப்பினர்கள். இருவர் பேராசிரியர்கள். இவர்களில் மா.செ. மூக்கையா நாவல் எழுதியதாக தின்கரன் குறிப்பிட்டிருந்தது. பேராசிரியர் தில்லைநாதன் கௌரவிக்கப்பட வேண்டியவராயினும் வருகை தரவில்லை. அது அவரது மனசாட்சிக்கே முரணாக தோன்றியிருப்பின் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நானகு பேர் தொண்டர் தாபன முதலாளிகள். இருவர் நீண்ட நாள் பத்திரிகையாளர்கள். இவர்கள் மதியுரைக் குழுவோடு தொடர்புடையவர்கள். மற்றும் அமைச்சரின் ஏவலாட்கள் என்ற வகையில் விருதும் பரிசும் வழங்கப்பட்டிருக்கலாம்!

தில்லைநாதன், துரைவிஸ்வநாதன், தி.ஞானசேகரன், வெலிங்டன், த.பெ.முத்துலிங்கம், மாத்தளை கார்த்திகேசு, மு. சிவலிங்கம், கே. கோவிந்தராஜ், மல்லிகை சி. குமார் தவிர்ந்த ஏனையவர்கள் ஏன் யாருக்காக எந்த அரசியலுக்காகப் பாராட்டப்பட்டார்கள் என்பது கேள்விக்குரியது.

மலையகத்தின் ஆதிக்க சக்திகளை உலுக்கிய வெளிச்சம் வெளியே இல்லை நாடகம் தந்த நிசாம், மேட்டு நிலக் கண்ணீர் தந்த க. கனகராஜா, மலையக வரலாற்று நூலை எழுதிய பி.ஏ.காதர், எஸ். நடேசன் போன்றவர்கள் அவர்களது அரசியல் பின்னணிக்காக புறக்கணிக்கப்பட்டு வருகின்றனரா? வேற்று மதத்தவர்கள் என்பதற்காக புறக்கணிக்கப்படுகின்றனரா? தோட்டங்களில் அந்நிய நிதியுதவியோ, அல்லது எந்த ஊக்குவிப்போ இல்லாமல் காமன் கூத்தையும், அருச்சுனன் தபசையும், கோலாட்டத்தையும், உடுக்கையும், உருமியையும், தப்பிசையையும் பேணிவரும் எத்தனையோ பேர் கேடயம் பெற்றவர்களை விட சிகரங்களாக இருக்கிறார்கள். பல கல்லூரி அதிபர்கள் சிறந்த அறுவடைகளைத் தந்திருக்கிறார்கள். தோட்ட ஆலயங்களைப் பேணிப் பராமரிக்கும் தர்மகர்த்தாக்கள் இருக்கிறார்கள். இவர்கள் அமைச்சரைத் தெரியாதவர்கள், மதியுரைக் குழுவைத் தெரியாதவர்கள், செல்வாக்கும் பணபலமும் இல்லாதவர்கள்.

ஆனால் மத்திய மாகாண தமிழாராய்ச்சி மாநாட்டு மதியுரைக் குழு இன்றைய இலட்சணத்தில் இயங்கினால், தோட்டக் கமிட்டி தலைவர்களுக்கும், பூசாரிகளுக்கும் விருது கொடுக்க வேண்டி வரும்!

சரி, ஒரு படைப்பாளனுக்கு ஒரு படைப்புக்காக எத்தனை பரிசு வழங்கப்பட வேண்டும்?

அந்தப்படைப்பு கொண்டிருக்க வேண்டிய தராதரம் என்ன?

ஒரு படைப்பாளி அவன் தொழில் நிமித்தம் செய்யும் பணிக்கு பாராட்டு வழங்கப்பட வேண்டுமா?

அந்நிய நிதியில் செய்யப்படும் கேலித்தனங்களுக்கு பரிசு வழங்கப்பட வேண்டுமா?

தொழில்ரீதியான பத்திரிகையாளர்கள் மலையகத்தின் எந்த அவலத்தை எத்தனை தூரம் அறிவுரீதியாக வெளிக்கொணர்ந்தார்கள்?

அமைச்சரின் கையாட்களுக்கும், ஏவலாட்களுக்கும் பரிசு கொடுப்பதென்றால் மதியுரைக்குழு, தனக்குத் தானே பரிசு கொடுத்து கொள்வதென்றால் அதற்கு வேறொரு பாராட்டு விழாவே போதுமாயிருந்திருக்குமே.

ரணில் விக்கிரமசிங்கவும், பி.பி.திசாநாயக்கவும், வி.புத்திரசிகமணியும், ஸ்டான்லி திலகரட்னவும் மலையக தமிழுக்கும், இலக்கியத்துக்கும் ஆராய்ச்சிக்கும் என்ன செய்தார்கள்?

இறுதியாக புத்திரசிகாமணியே குறிப்பிட்டுள்ளதுபோல மாநாடு 'ஆராய்ச்சி' இன்னும் தொடங்கவில்லை. அது அர்சியல்வாதிகளிடமும், முதுகுசொறியும் நபர்களிடமும் இருக்கும் வரை ஆராய்ச்சியாக மாற முடியாது.

மலையக தமிழராய்ச்சி மாநாடு என்ற உன்னதமான கருதுகோளை முன்னெடுக்க அதற்கு தகுதிவாய்ந்த மலையக முற்போக்கு சக்திகளிடம் அது ஒப்படைக்கப்பட வேண்டும்.

இம்மாநாடுகளும், தமிழ் சாகித்திய விழாக்களும், அதன் பின்னணியில் அமைந்துள்ள அரசியலும், அவ்வரசியலின் மேலெழுதலும் மலையக மக்களை எங்கு கொண்டு போய் நிறுத்துமோ தெரியவில்லை. இதற்கு தேர்கட்டி இழுக்க ஒரு கூட்டம் புறப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் மலையக மக்களின் தனித்துவமும், தன்மானமும் காக்கப்பட வேண்டுமானால், அறிவுத்துறையினர், ஆராய்ச்சித்துறையினர் முன்வந்து அந்த முயற்சியை முன்னெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அது அரசியல் திருவிழாவாக, தேர்த்திருவிழாவாக புத்திரசிகாமணி நடத்திய ஐ.தே.கட்சிப்பேரணியாக (அவர் பச்சை நிற உடையிலேயே காட்சியளித்தார்) மலையக தமிழருக்கும் தலைகுனிவாகப்போவது தடுக்கவே முடியாததாகிவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது ஒரு அலசல்

# தமிழ் தேசியம் முற்போக்கானதா ?

''தேசியவாதம் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?'' - திடீரென விழித்தெழுந்தவன் போல், வழமைக்கு மாறாக இக்கேள்வியை என்னை நோக்கி எறிந்தான் என் உள் விமர்சகன்.

''தேசியவாதமா?'' என்று சிறிது இழுத்த நான், ''அது பிற்போக்கானது என்று தான் எனக்குப் படுகிறது'' என்றேன்.

''எப்படி?'' - அவன் விளக்கங் கோரினான்.

''தேசியவாதம் இனத்துவரீதியான பிரிவுகளை ஆதரிப்பது. இதன் பின்னணியில், 'உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள்' என்ற மார்க்சீயத்தின் இனத்துவ பிரிவுகளைக் கடந்த, முழு மனித குலத்தின் விடுதலைக்குமான கருத்தியல் ரீதியான அறைகூவல் மிக முற்போக்கானது. இதன் முன் தேசியவாதம் பிற்போக்கானது தான்'' - நான்.

''மார்க்சீயம் உலகத்தொழிலாளரை ஒன்றுபடவும், அவர்கள் விடுதலைக்காகவும் கூவியழைக்கிறதேயொழிய முழு மனித குலத்திற்கும் அல்லவே?'' -அவன் ஒரு வர்க்கம். இது இல்லாமல் புரட்சியே ஏற்படாது. இதற்கிடையில் இரண்டு வர்க்கத்தின் பக்கமும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சாய்ந்துகொள்ளும் 'லும்பன்' வர்க்கம் வேறு! இது மட்டுமல்லாமல் கிராம்ஸி கூறுவதுபோல் முதலாளி வர்க்கத்திற்குள் உள்ள தொழிலாளி வர்க்கமும், தொழிலாளி வர்க்கத்திற்குள் உள்ள முதலாளி வர்க்கமும் என்று தத்தமக்குள்ளேயே முரண்டு நிற்கும் பல உப வர்க்கங்கள். இன்னும் தொழிலாளி - முதலாளி வர்க்கப் பிரிவுகளையே புதிய பரிமாணத்திற்கு இட்டுச் செல்லும் - போராட்ட முனைப்பை மழுங்கடிக்கும், இன்றைய விஞ்ஞான கொம்பியூட்டர் யுகம், பல வித தத்துவ வியாக்கியானங்கள். இவற்றின் மத்தியில் மனித குல விடுதலை என்பது மக்களை ஏமாற்றிச் செல்லும் மாயமானதான். இந்நிலையில்தான் தேசியவாதம் முக்கியமானதாக உள்ளது'' - அவன் கூறிமுடித்தான்.

''எப்படி முக்கியமானது?'' - நான்.

''சோஷலிஸப்புரட்சியை வென்றெடுத்த விடுதலை முகமுடையது என்றான்'' அவன்.

''ஆனால் இந்த விடுதலைப் போராட்டம் முற்போக்கு முகமுடையதாகக் கொள்ள முடியாது என்பது என் வாதம்'' - நான் அழுத்தமாகக் கூறினேன்.

'ஏன்?'' - அவன் என் மறுப்பின் அர்த்தத்தைப் புரிந்தவன் போல் சிரித்துக்கொண்டு கேட்டான்.

''ஓர் இனம் தன்னை ஆக்கிரமித்த சக்திகளுக்கு எதிராக விடுதலை பெற்றாலும், தன் இனத்திற்குள்ளே இருக்கும் ஏற்றத்தாழ்வுகள், சாதிப்பாகு பாடுகள், வர்க்கச் சுரண்டல்கள், தன்னோடு உடனிருக்கும் இன்னோர் சிற்றினத்தை ஒடுக்கும் பாஸிசப்போக்குகளில் இருந்து விடுதலை பெறாது, இல்லையா?'' - நான்.

''சரியாகச் சொன்னாய்'' என்று ஆமோதித்த அவன், 'இங்கு தான் எமக்கு மீண்டும் மார்க்சீயம் கைகொடுக்கிறது' என்று ஆர்ப்பரித்தான். 'அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப்போராடும் ஒவ்வொரு இனமும் தன் உள் முரண்பாடுகளுக்கு எதிராகப் போராடும் ஆயுதமாக மார்க்சீயப் பார்வையைத் தம் அடுத்த பக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். வேண்டுமென்றே கேட்டான்.

''உலகத்தொழிலாளரின் ஒன்றிணைந்த போராட்டமும் புரட்சியும் எதிர்கால முழு மனித குலத்திற்கும் விடுதலைதரக்கூடியதுதானே?'' - நான்.

''நான் அக்கறை கொள்வது எதிர்கால மனிதகுலத்தைப்பற்றியல்ல, தற்போதுள்ள மனித குலத்தை!'' என்று ஒரு வித சினத்தோடு கூறியவன், 'எதிர்கால மக்களுக்காக, மக்களுக்காக' என்று கோஷம் எழுப்பிக்கொண்டு ஹிட்லரால் அழிக்கப் பட்ட யூதர்களை விட ஸ்ராலின் அழித்த ரஷ்ஷிய மக்கள் அதிகம்! இப்போ எதிர்கால மனிதகுல விடுதலைக்காகக் கட்டியெழுப்பப்பட்ட சோவியத் யூனியனே இல்லை. ஆகவே நான் அக்கறைப் படுவது தற்போதுள்ள மனித குலத்தைப்பற்றி! இதற்கு மார்க்சீயப்புரட்சி எப்படி உதவப்போகிறது என்பதுதான் கேள்வி'' என்று கேட்டான்.

''ஏன்?'' - நான் அவன் கருத்தின் மையத்துக்கு வரமுயன்றேன்.

''மார்க்சீயத்தின் விஞ்ஞான இயங்கியல் வரலாற்று வியாக்கினப்படி ஆதிப்பொதுவுடமை, அதன் பின் மானியகாலம், அதன் பின் முதலாளித்துவம், அதன் பின் தொழிலாள வர்க்கப்புரட்சியும் சமவுடமையும் வந்தே ஆக வேண்டும். இத்தத்துவ நோக்கின்படி முதலாளித்துவ வர்க்கத்தில் இருப்பவன் அந்த வர்க்கத்திற்குரிய சிந்தனையூடாகத்தான் பார்ப்பான். அதேபோலவே தொழிலாளி வர்க்கத்தவனும்! இவர்கள் தத்தம் வர்க்கச் சிந்தனை ஓட்டத்தின் கைதிகள். இவர்கள் தம் வர்க்கச் சிந்தனையை விட்டு, முற்போக்காக இணைந்து போராடுவதற்கான ஒழுக்கக்கோட்பாடு மார்க்சீயத்தில் இல்லை. ஆகவே தொழிலாள வர்க்கப் புரட்சியின்போது, தன் வர்க்கத்தின் சிந்தனைக்குமேலால் பார்க்க 'விதி'யற்ற முதலாளி வர்க்கம் அழிக்கப்படுகிறது! இதற்கிடையில் வரலாற்று ஓட்டத்தை உணர்ந்து, ஏங்கல்ஸ் போல் தொழிலாளர் புரட்சிக்காக அவர்கள் பக்கம் வந்து சேரும் உயர் குழாம் (Elite Group) ஒரு புறநடை! இது சோவியத் யூனியனையே காப்பாற்றியது இந்த தேசியவாத கோஷந்தான்'' -அவன்.

''தேசியவாதக்கோஷம் சோவியத்யூனியனையே காப்பாற்றியதா?'' - நான்.

''ஹிட்லரின் நாஸிப்படைகள் ஸ்ராலின் கிராட்டுக்குள் நுழைந்தபோது, 'வீர ரஷ்ஷிய மக்களே, வீர ஸ்லாவின மக்களே' என்ற தேசியவாதக்கோஷந்தான். முன்வைக்கப்பட்டது. இந்தத்தேசியவாதக் கோஷந்தான் ரஷ்ஷிய மக்களின் விடுதலை உணர்வைத்தட்டி எழுப்பி, நாஸிகளுக்கெதிராகப்போராட வைத்தது - ''உலகத்தொழிலாளரே ஒன்றுபடுங்கள்.'' என்ற சோஷலிஸ கோஷமல்ல! இதன் பின்னணியில்தான் தேசியவாதத்தின் விடுதலை முகமும் முக்கியத்துவமும் தெரியவரும்'' - அவன்.

''எப்படி?'' - நான்.

''ஒரு மனிதன் தன் இருப்பை - தன் விடுதலையை உணர்வது தன் இருப்புக்கு ஆபத்து ஏற்படும்போது தான் என்னும் இருப்பியல்வாதிகளின் பார்வை இன்று எவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவது. சிறையும், சித்திரவதையும் அவன் இருப்பையும் சுதந்திரத்தையும் அதிகரிக்கிறது. இவ்வாறே ஒவ்வொரு இனமும் தனக்கு ஆபத்து ஏற்படும் போதுதான் தன் இருப்பை, தன் விடுதலையை உணர்கிறது. இதன் விடுதலை உணர்வென்பது அதன் மொழி, கலாசாரம், நிலம், இனம் என்னும் ஊடகங்கள் மூலமாகவே சுவாசிக்கப்படுகிறது. இது பற்றிய சிறந்த விளக்கத்தை செவ்விந்தியத் தலைவன் சியேற்றல் ஆப்பிரகாம் லிங்கனுக்கு கூறியதில் இருந்து அறியலாம். 'ஒரு செவ்விந்தியனது விடுதலையை அவனது மண், நிறம், மரம், ஆறு என்னும் இயற்கையிலிருந்து வேறாகப் பிரித்துப் பார்க்க முடியாது' என்றான் சியேற்றல். இதனால்தான் ஒரு இனக்கூட்டம் தன் இருப்புக்கு ஆபத்து ஏற்படும் போது தன் விடுதலைக்காக ஒன்றிணைந்து போராடுகிறது. அதனால் தான் தேசியவாதம் தம் இனம், மொழி, கலாசாரம் ஆகியவற்றில் உள்ள முற்போக்கு அம்சங்களையே மார்க்சீய ஆயுதங்களாக்கும் புதிய சூழல் ஒவ்வொரு நாட்டிலும் எழுந்து கொண்டிருக்கிறது. இதன் மூலம் முழு மனித குலமும் தம் விடுதலையைப் பேணிக் கொண்டே சர்வதேசமாக விரியும் புதிய எழுச்சி ஏற்படுகிறது. இல்லையா?'' என்று முடித்தான் அவன்.

''அப்படியானால் தமிழ்த் தேசியம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றா?'' - நான்.

''நிச்சயமாக. ஆனால் இந்தப் பார்வையின் விரிவில் தமிழ்த்தேசியத்தை வரவேற்கும் புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் (சரிநிகர் உட்பட) திரிபுவாதிகளாகவும், புலிகளுக்கு வால் பிடிப்பவர்களாகவும் தூற்றப்படுவது தான் வேடிக்கை. இப்படிச் செய்பவர்கள் ஏதோ நோய்க்கூறு கொண்ட மனமுடையவர்களாகவே கொள்ள வேண்டும்''- அவன்.

''எப்படி?''


''தமக்கு கடந்தகாலத்தில் புலிகளோடு ஏற்பட்ட கசப்புகளை வைத்துக்கொண்டு, இப்போது தேவைப்படும் முற்போக்கான ஓர் பொதுக்கோட்பாட்டை நிராகரிப்பவர்கள் நோய்கூறு கொண்டவர்கள் தானே? இவர்கள் முதலில் தம்மைச் சுயவிசாரணை செய்து ஆரோக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும்''-அவன்.

''அப்போ புலிகள்?''

''தமிழ்த்தேசியம் பற்றி இப்போ சிந்திக்க வைப்பவர்கள் அவர்கள்தான். ஆனால் அதற்காக அவர்கள் செய்வது அனைத்தும் சரியானதென்றும், முற்போக்கானவையென்றும் கூறமுடியாது. இயங்கியல் வரலாற்று ஓட்டத்தில் தேவையானவற்றைத் தக்க வைக்கவும் 'தேவையற்றவற்றைத் துடைத்தெறியவும் நமது பங்களிப்பும் முக்கியமானது'' -அவன்

சங்கமன்

புதிய கவிஞர்களுக்கான பகுதி




நான் அழுது போனேன்.
என் அழுகையில் ராவுகள் பல நனைந்தன
நீ போன பின்
கருகிப் போன நம் தேசமின்னும் தளிர்க்கவில்லை.
எப்படித் தளிர்க்கும் ?
தேசத்து மக்களங்கு இல்லை.
யார் யாரோ
ஏதேதோ மொழி பேசித் திரிகின்றனர்.
அது எனக்கு கொஞ்சமும் புரிவதில்லை.
உள்ள சிலரின் உயிரையும் எடுத்து விடுகின்றனர்.
நான் அழுது போனேன்.

நீ இருந்த ராவுகளில்
வேற்று மொழி பேசுபவர்கள் இருக்கவில்லை
அது - நாம் நல்லாயிருந்த காலம் :
இனி அது வருவதாகத் தெரியவில்லை.
இப்போது நான் காணும் பகலிலேயே
என் சகோதரிகள் கற்பமுறுகின்றனர்:
கொலையுண்டு போகின்றனர்.
விடிந்தாலும்
தலை குனிந்து வாழ்கிறோம் :
யாரும் எதனையும் யாரிடமும் கேட்க முடிவதில்லை.
ஏனெனில், இப்போதுள்ள எவரையும்
எனக்குத் தெரியாது.

எனக்குத் தெரிந்தவர்கள்
கல்லறைவாசிகளாயினர்
அவர்கள் பட்ட காயங்கள் ஆறா நிலையிலும்
அவர்கள் புண்கள் காயா நிலையிலும்
சமாதியாகிப்போயினர்.
இந்த மண்ணில்
அவர்களுக்கென்று எழுதப்பட்டது -காயங்களும்
-புண்களும் தாம்:
வாழ்க்கை.
அவர்களைப்பார்த்து இன்னும் அழுகிறது.

நீ எம் பூமியில் வாழ்ந்தபோது
ஒரு போராளியென்று தெரியாது.
செத்தபோது
எல்லோரும் கூறினர்:
"கடைசியாக அவன் சுடப்பட்டான்
இவர்களுக்குச் சுடமட்டும்தான் தெரியும்" என்று.
இன்னும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்--
நீ அவர்களுக்கு ஆயிரமாயிரமாய் உருவாக்கி
-விட்டுப்போன
ஓயாத் தலைவலி பற்றியும்.

98.02.05

www.tamilarangam.net



சுதந்திரத்தின் பின் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கு அரசியலமைப்பு ரீதியாக கையாண்ட வழிமுறைகள் பற்றி செம்பாட்டான் எழுதி வரும் கட்டுரையின் முதற்பகுதி (சோல்பரி அரசியல் திட்டம்-1947) சென்ற இதழில் வெளியானது. இவ் விதழில் 1972ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியலமைப்பு பற்றி எழுதுகிறார். அடுத்த இதழில் 1978ஆம் ஆண்டு இறுதியாக கொண்டுவரப்பட்டதும் தற்போது நடைமுறையில் உள்ளதுமான இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு தமிழ் மக்களையும், அவர்களது உரிமைகளையும் எவ்வாறு சின்னாபின்னப்படுத்தியது என்பது பற்றி எழுதுவார்

-ஆ-ர்

**1972**ஆம் ஆண்டு மே 22ம் திகதி சிறிமா அரசாங்கத்தின் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்த நாள். இலங்கை அரசியலில் தமிழ் மக்களுக்கு மரண சாசனம் எழுதிய நாள் அது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதை ஒட்டி மூன்று தினங்கள் துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி மக்களை வேண்டிக் கொண்டது. இதன் நிமித்தம் தமிழ் பிரதேச வீதிகள், நகரங்கள், பாடசாலைகள், அலுவலகங்கள் எல்லாம் ஆளரவமற்று வெறிச்சோடிக் கிடந்தன. படையினரின் வாகனங்கள் மட்டும் ஆங்காங்கே சென்று கொண்டிருந்தன.

கறுப்புக் கொடிகள் வீதிகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தன. அக் காட்சி தமிழ் மக்களின் வாழ்வும் இருளில் தான் உள்ளது என்பதை வெளிக்காட்டியது.

மக்கள் அனைவர் மத்தியிலும் எதிர்காலம் பற்றிய சோகம் ஆத்திரமாக கொந்தளித்துக் கொண்டிருந்தது. இந்த அரசில் இனி மேல் வாழ முடியாது, தனி நாடு தான் ஒரேயொரு தீர்வு என இளைஞர்கள் தங்களுக்குள் சபதமெடுத்துக் கொண்டனர்.

1977ம் ஆண்டு தேர்தலில் சிறிமா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி-இடது சாரிக் கட்சிகள் கூட்டணி முதன் முதலாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கைப்பற்றியது. இதன் மூலம் சிறுபான்மையினரின் ஆதரவு இல்லாமல் எக்கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாது என்ற சோல்பரியின் எதிர்பார்ப்பு பொய்யாகியது.

இப் பெருவெற்றி பேரினவாதிகளை உஷாராக்கி விட்டது. புதிய அரசியல் திட்டம் மூலம் தமது பேரினவாத அபிலாசைகளை முழுமையாக்க அவர்கள் முனைந்தனர். இடையில் 1971ம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி அவர்களைச் சிறிது தடுத்தாலும் 1972இல் அவர்கள் தமது முயற்சிகளில் வெற்றியடைந்தனர்.

அரசியல் திட்டத்தினை உருவாக்குவத்றகாக பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் அரசியல் நிர்ணய சபையாக கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் கூட்டப்பட்டனர். இக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்குதல், மதசார்பற்ற அரசாக இலங்கை அரசைப் பிரகடனப்படுத்துதல், அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்குதல், தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் அவர்களின் சுயாட்சி உரிமையை அங்கீகரித்தல் என்பவற்றை தமது தரப்புப் பிரேரணைகளாக முன்வைத்தது. இவை ஆலோசனைக்கு கூட எடுத்துக் கொள்ளாமல் நிராகரிக்கப்பட்டன. தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்து வெளியேறியது.

"இரு மொழி ஒரு நாடு" பிரச்சாரகர் கொல்வின் ஆர்.டி. சில்வா அரசியல் திட்ட வரைவுக்குழுவின் தலைவரானார். இவரது தலைமையில் வரையப்பட்ட பேரினவாத அரசியல் திட்டமே 1972மே 22இல் அமுலுக்கு வந்தது.

### நோக்கம்

இவ் அரசியல் திட்டத்தினை உருவாக்கியவர்களின் நோக்கம் மிகவும் தெளிவாக இருந்தது. சோல்பரி அரசியல் திட்டம் பேரினவாத அபிலாசைகளை செயற்படுத்துவதற்கான அடிப்படைகளை வழங்கியிருந்தது அதற்கேற்ற வகையிலேயே சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன உருவாக்கப்பட்டிருந்தன. புதிய அரசியல் திட்டத்தினை உருவாக்கியவர்கள் அதனை முழுமையாக்கவே முனைந்தனர். இந்த வகையில் முழுமையாக்குவதற்கு தடையாக சோல்பரி அரசியல் திட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை நீக்குவதும், பேரினவாத அரசைப்பலப்படுத்தும் வகையில் புதிய விடயங்களைச் சேர்ப்பதுவுமே இவர்களின் நோக்கமாக இருந்தது.

### சோல்பரி அரசியல் திட்ட ஏற்பாடுகளை நீக்குதல்

சோல்பரி அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களின் காப்பீடுகளாக அரசியலமைப்பின் 29வது பிரிவு, செனற் சபை, நியமன உறுப்பினர்கள், கோமறைக் கழகம், அரசாங்க சேவை நீதிச் சேவை ஆணைக் குழுக்கள் என்பன கருதப்பட்டன. இவை நடைமுறையில் காப்பீடுகளாக இல்லாத போதும் பெயரளவிலாவது காப்பீடுகளாக இருந்ததோடு தமிழ் மக்கள் தங்கள் பக்க நியாயங்களை பிரச்சாரப்படுத்துவதற்கு உதவியாகவும் அமைந்தன. இந்த வகையில் அரசியலமைப்பின் 29வது பிரிவு, கோமறைக் கழகம், அரசாங்க சேவை, நீதிச்சேவை ஆணைக் குழுக்கள் என்பன பெரிதும் துணை புரிந்தன. தமிழரசுக் கட்சியின் தொடர்ச்சியான போராட்டங்களுக்கும் இவை வலு சேர்ப்பனவாக அமைந்திருந்தன. சர்வதேச ரீதியில் தமிழ் மக்களின் பிரச்சாரம் எட்டுவதற்கும் வழிவகுத்தன.

இவை அனைத்தும் புதிய அரசியல் திட்டத்தில் நீக்கப்பட்டன. பாராளுமன்ற சட்டங்களை மறுபரிசீலனை செய்யும் வகையில் நீதிமன்றங்களுக்கு இருந்த நீதிப்புனராய்வு அதிகாரமும் அடியோடு நீக்கப்பட்டது. இப்பிரச்சினைகள் நீதிமன்றத்திற்கு வந்தால் கூட தமிழர்கள் அதனை ஒரு பிரச்சாரமாக பயன்படுத்துவார்களென பேரினவாதிகள் பயந்திருந்ததே இந்நீக்கத்திற்குக் காரணமாகும்.

எனினும் இவற்றை நீக்குவதற்கு அவர்கள் வெளிப்படையாகக் கூறிய காரணம் பெரிதும் வேடிக்கையானது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்ட நிறுவனத்துக்கு மேலாக வேறு ஒன்றும் இருக்கக் கூடாது என்பதே அக் காரணமாகும். அவ்வாறு இருப்பது மக்களாட்சி கோட்பாட்டிற்கு எதிரானது என்பது அவர்களின் நியாயமாக இருந்தது. இங்கு அவர்கள் மக்கள் எனக் கருதியது சிங்கள மக்களையே ஒழிய ஏனைய இனத்தவர்களையல்ல.

### பேரினவாத அபிலாசைகளை முழுமையாக்கும் வகையில் புதிய விடயங்களைச்சேர்த்தல்

இந்த நோக்கத்தில் முதன்மையானது சிங்கள மொழி சம்பந்தமான ஏற்பாடுகளாகும். இதன் மூலம் சிங்கள மொழி அரச கரும மொழி என்பதற்கு "அரசியலமைப்பு அந்தஸ்து" கொடுக்கப்பட்டது. 1956ல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்கள சட்டத்தின் மூலம் சிங்கள மொழி அரசகரும மொழியாக மாற்றப்பட்டாலும் அது பாராளுமன்ற சட்டமாக இருந்ததே தவிர அரசியலமைப்பு சட்ட அந்தஸ்த்தினைப் பெற்றிருக்கவில்லை. எப்போதும் பாராளுமன்ற சட்டம் அரசியலமைப்பின் சட்டத்தினைவிட அந்தஸ்து குறைந்தது ஆகும். பாராளுமன்ற சட்டங்களை சாதாரண பெரும்பான்மையுடன் மாற்றலாம் ஆனால் அரசியலமைப்புச் சட்டங்களை அவ்வாறு மாற்ற முடியாது.

அரசியல் திட்டத்தின் 7ம் பிரிவு இது பற்றி கூறும் போது "இலங்கையின் அரச கரும மொழி 1956ம் ஆண்டில் 33ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

அதே வேளை தமிழ் மொழியின் உபயோகம் 1958ம் ஆண்டில் 28ம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு இணங்க இருத்தல் வேண்டுமெனவும் கூறப்பட்டது. எனினும் இவை அரசியலமைப்பின் ஒரு ஏற்பாடாக பொருள் கொள்ளக் கூடாது என்றும் துணை நிலை சட்டமாகவே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் மேலும் கூறப்பட்டிருந்தது. இந் நிலை சிங்கள மொழி அரசகரும மொழி என்பதற்கு அரசியல் திட்ட அந்தஸ்து கொடுக்க விரும்பிய ஆட்சியாளர்கள் தமிழ் மொழியின் உபயோகத்திற்குக் கூட அரசியல் திட்ட அந்தஸ்து கொடுக்க விரும்பாமையையே காட்டியது.

இங்கு தமிழ் மொழியின் உபயோகம் கூட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குள்ளேயே மட்டுப்பட்டிருந்தது. அதற்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள், தமிழ் மொழியில் தமது அரச கருமங்களை ஆற்றக் கூடிய நிலை இருக்கவில்லை. இவ்விடங்களில் சாதாரண கிராம சேவையாளர்களிடம் நடைபெறும் அலுவல்கள் தொடக்கம், பொலிஸ் நிலையம், உதவி அரச அதிபர் அலுவலகம், அரசாங்க அதிபர் அலுவலகம் போன்ற அனைத்திலும் கருமங்கள் தனிச் சிங்களத்திலேயே நடைபெற்றன.

வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு சிங்கள மொழியைப் பேச முடியுமே தவிர எழுத வாசிக்கத் தெரியாது. இந் நிலையில் சிங்கள மொழியில் தமது கருமங்களை நிறைவேற்ற அவர்கள் பெருமளவு அல்லல்பட வேண்டியவர்களாக இருந்தனர்.

அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றின் நிலை பற்றிக் கூறவே தேவையில்லை. அவை முழுமையாகவே சிங்களமயமாக்கப்பட்டிருந்தன.

வடக்கு கிழக்கில் கூட வடக்கில் மட்டுமே தமிழ் மொழியின் உபயோகம் ஓரளவு முன்னேற்றகரமாக இருந்தது. அங்கும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் சிங்களத்திலேயே நடைபெற்றது. கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் தமிழ் மொழியின் உபயோகம் ஓரளவு அமுலிலிருந்தது. அம்பாறை மாவட்டத்தில் முழுமையாக சிங்கள மொழியிலேயே அரச கரும செயற்பாடுகள் நடைபெற்றன. திருமலை மாவட்டத்திலும் பெரும்பாலான இடங்களில் இந்நிலையே தொடர்ந்தது.

மேலும் நடைமுறையிலுள்ள துணை நிலைச் சட்டங்கள் அனைத்தும் சிங்களத்திலும், தமிழ் மொழி பெயர்ப்பிலும் உடனடியாக வெளியிடப்படல் வேண்டும் எனவும் அதனை தேசிய அரசுப் பேரவை ஏற்றுக் கொண்ட பின்னர் சிங்கள மொழியில் உருவாக்கப்பட்டவற்றை மட்டும் சட்டமாகக் கொள்ளுதல் வேண்டும் எனவும் ஏனையவற்றை மொழிபெயர்ப்பாக கொள்ளுதல் வேண்டுமென்றும் கூறப்பட்டது. மூலச் சட்டங்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும் கூட சிங்களத்திலுள்ள சட்டங்களே மேலானதாகக் கருதப்படும் எனவும் கூறப்பட்டது.

இங்கும் தமிழ் மொழிக்கு சட்ட அந்தஸ்து இல்லாமல் மொழிபெயர்ப்பு அந்தஸ்தே கொடுக்கப்பட்டது. இவை நடைமுறையில் பயன் குறைந்தவை. ஏனெனில் சட்டப் பிணக்குகள் தோன்றும் போது மொழிபெயர்ப்பிலுள்ள சட்டங்கள் வலு குறைந்தவையாகவே கருதப்படுகின்றன.

மொழி சம்பந்தமான ஏற்பாடுகளில் மூன்றாவது நீதிமன்ற மொழி சம்பந்தமானது. இதன்படி "நீதியை நிர்வகிப்பதற்கு சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், நியாய சபைகள், ஏனைய நீதி நிறுவனங்கள், 1958ம் ஆண்டின் 10ம் இலக்க இணக்க சபைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இணக்க சபைகள், ஆகிய அனைத்தினதும் மொழியாக இலங்கை முழுவதிலும் சிங்கள மொழி இருத்தல் வேண்டும் எனவும் இதன்படி வழக்குரைகள், நடவடிக்கைகள், தீர்ப்புகள், கட்டளைகள், நீதிமுறைச் செயல்கள், சட்ட நிர்வாகச் செயல்கள் என்பனவற்றின் பதிவேடுகள் அனைத்தும் சிங்கள மொழியாக இருத்தல் வேண்டும் எனவும் வருங்காலத்தில் உருவாக்கப்படும் எந்த நீதிநிறுவனங்களுக்கும் மேற்கூறிய ஏற்பாடுகள் பொருத்தமுடையவையாக இருத்தல் வேண்டும்" எனவும் கூறப்பட்டது.

மேற்கூறிய நிறுவனங்கள் தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் முஸ்லிம்கள் தொடர்பான காதி நீதி மன்றங்களிலும், வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றை தமிழில் சமர்ப்பிக்கலாம் எனவும் நடவடிக்கைகளில் தமிழில் பங்குபற்றலாம் எனவும் கூறப்பட்டது. இத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பதிவேடுகளின் பொருட்டு சிங்கள மொழி பெயர்ப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இங்கு தமிழ் மொழிக்கு நீதிமன்ற மொழி அந்தஸ்து கொடுக்காத அதே வேளை வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்கள் தமது நீதி மன்ற நடவடிக்கைகளை தமிழில் நடாத்த முடியாத நிலையும் ஏற்பட்டது. வடக்கு கிழக்கில் கூட கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் இம்முறை பின்பற்றப்பட்டது. ஏனைய இரு மாவட்டங்களிலும் பெரும்பாலான இடங்களில் சிங்கள மொழியிலேயே நீதிமன்ற கருமங்கள் நடைபெற்றன.

### மதம்

இவ் அரசியல் திட்டத்தின் மூலம் முதன் முதலாக பௌத்த மதம் அரச மதமாக்கப்பட்டது. அரசியல் திட்டத்தின் 6ம் பிரிவு பௌத்த மதம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்குதல் வேண்டும். ஏனைய மதங்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற அதே வேளை பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும், பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்"

இங்கு பல மதங்கள் வாழும் நாட்டில் பௌத்த மதத்திக்கு மட்டுமே முதன்மை இடம் வழங்க வேண்டும் எனக் கூறியதுமல்லாமல் அரசு, பௌத்த மதத்தினை மட்டுமே பேணிப் பாதுகாக்க வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது. அதே வேளை, ஏனைய மதங்களுக்கு அதன் மத உரிமைகளுக்கு மட்டுமே உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் இலங்கையின் பன்மொழித் தன்மை நிராகரிக்கப்பட்டிருந்தது. இவ் ஏற்பாட்டின் மூலம் இலங்கையின் பன் மதத்தன்மையும் நிராகரிக்கப்பட்டிருந்தது. முடிவாக சகல விடயங்களையும் "சிங்கள பௌத்த" என்ற ஒற்றை பரிமாணத்தின் மூலம் நோக்குகின்ற நிலை தோற்றம் பெற்றது.

### அரசாங்க சேவை, நீதிச்சேவை

அரசாங்க சேவை, நீதிச் சேவை என்பனவற்றில் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, பதவி நீக்கம் போன்றவற்றை மேற்கொள்வதற்காக சோல்பரி அரசியல் திட்டத்தில் அரசாங்க சேவை ஆணைக் குழு, நீதிச் சேவை ஆணைக்குழு என்பன உருவாக்கப்பட்டிருந்தன. இச் சேவைகளில் இன,மத,மொழி,அரசியல் ரீதியான பாரபட்சங்கள் காட்டக் கூடாது என்பதற்காகவும் இச்சேவைகளை அரசியல் அழுத்தங்களிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காகவுமே இவ் ஆணைக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருந்தன.


புதிய அரசியல் திட்டம் இப்பொறுப்புக்கள் அனைத்தையும் அமைச்சரவையின் மீது பொறுப்பாக்கியது. இது விடயத்தில் அமைச்சரவைக்கு ஆலோசனை கூறுவதற்காக மாத்திரம் அரச சேவை ஆலோசனைச் சபை, அரச சேவை ஒழுக்காற்றுச் சபை, நீதிச் சேவை ஆலோசனைச் சபை, நீதிச் சேவை ஒழுக்காற்றுச் சபை என்கின்ற சபைகள் உருவாக்கப்பட்டிருந்தன.

பேரினவாத மயப்படுத்தப்பட்ட, அவர்களையே பெரும்பான்மையாகக் கொண்ட அமைச்சரவையிடம் இப்பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டமையானது அவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைக் கூறித் தெரிய வேண்டியதில்லை. இவற்றைப்பற்றி அரசியல் திட்ட பிரயோகத்தின் கீழ் விரிவாகப் பார்ப்போம்.

### அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்.

இலங்கையின் அரசியல் திட்ட வரலாற்றில் "அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்" என்ற பகுதி இவ் அரசியல் திட்டத்தின் மூலமே முதன் முதலாக சேர்க்கப்பட்டிருந்தது. மக்களின் பல்வேறு உரிமைகள் அடங்கிய ஒன்பது ஏற்பாடுகள் இதில் அடங்கியிருந்தன.

இவ் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் இலங்கை பிரஜைகளுக்கு மட்டுமென மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலை அன்று நாடற்றவர்களாக இருந்த இலட்சக்கணக்கான இந்திய வம்சாவழி மக்கள், இவற்றின் பயன்பாட்டினைப் பெறுவதிலிருந்தும் தடுத்திருந்தன.




மேலும் இவ் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்கும் போதும் செயற்படுத்தும் போதும் தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொது மக்கள் பாதுகாப்பு, பொதுமக்கள் சுகாதாரம், பொதுமக்கள் ஒழுங்கு, பொதுமக்கள் ஒழுக்கம், அரச கொள்கை கோட்பாடுகளுக்கு பயன் கொடுத்தல், என்பவற்றின் நன்மை கருதி அவசரகால சட்டம் மூலம் மட்டுப்படுத்தப்படலாம் எனவும் கூறப்பட்டது.

உண்மையில் இப்பகுதியில் கூறப்பட்ட சில விடயங்கள் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பானதாக இருந்த போதும் குறிப்பாகக் கைது செய்தல், அரச வேலை வாய்ப்புகளில் இனரீதியான பாரபட்சம் காட்டக் கூடாது என்பன இருந்த போதும் அடிப்படை உரிமைகள் தொடர்பான மட்டுப்பாடுகள் அவற்றைத் தடை செய்திருந்தன.

இவ் அரசியல் திட்டக் காலம் முழுவதும் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தமையினால் தமிழ் மக்கள் இவ் விடயங்களில் அசையவே முடியாத நிலையில் இருந்தனர். இவற்றைப் பின்னர் பார்ப்போம்.

### அரசியலமைப்பும் பிரயோகமும்

பேரினவாதிகள் தமது அரசியல் அபிலாசைகளை தீர்த்துக் கொள்வதற்காக அரசியலமைப்பின் பிரயோகத்திலேயே எப்போதும் கவனமாக உள்ளனர். இதனைப் பொறுத்தவரை அவர்கள் நான்கு அணுகு முறைகளை மேற்கொண்டனர்

1. அரசியலமைப்பு ஏற்படுத்திக் கொடுத்த வழிமுறைகளினூடாக தமது அபிலாஷைகளைத் தீர்ப்பது.
2. அரசியலமைப்பு வழிகொடுக்காத சந்தர்ப்பங்களில் அதில் உள்ள ஓட்டைகளினூடாக அபிலாஷைகளைத் தீர்ப்பது.
3. அரசியலமைப்பு ஏற்பாடுகளின் ஓட்டைகளும் சரிவராத போது அரசியலமைப்பினை மீறி அபிலாஷைகளைத் தீர்ப்பது.
4. அரசியலமைப்பில் சிறுபான்மையோர் நலன் காக்கும் ஏற்பாடுகள் ஏதாவது இருப்பின் பேரினவாத அரச இயந்திரத்தினைக் கொண்டு அதனை நடைமுறையில் செயற்படவிடாது தடுப்பது என்பவையாகும்.

இவற்றில் முதலாவதைத் தவிர்ந்த ஏனையவை பெருமளவில் நிர்வாகத் துறையிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஏனெனில் சட்ட நீதித்துறைகளில் இவை கேள்விக்குள்ளாக்கப்படுவதற்கான

சந்தர்ப்பங்கள்
ஒப்பீட்டு ரீதியில்
இவை கேள்விக்கு
கான சந்தர்ப்பங்க

### சட்டத்துறையில் ... பிர...

பேரினவாத
நிறுவுவதற்கான
மைப்பிலேயே போ
ளமையினால், அத
களை சட்டத்து
வேண்டிய தேவை
ல்லை. அவர்களுக்
பிரச்சினை அரசிய
உரிமைப் பகுதியி
கள் தான், அ
சூழ்நி... ளும்
கூர்மை...தியி

1970ஆம் ஆ
தரப்படுத்தல், 197
வாத அரசியல்
மக்களை அரசியி
நாட்டுப் போராட்
கும் படி தூண்டின
ஞர்கள், அரசியல்
ளுக்கு அப்பால்,
டிக்கைகளிலும்
அரசியல் போராட்
கப்பட்ட தமிழ் மா
உருவாக்கப்பட்
பேரவை என்பவ
போராட்டங்கள்,
1974இல் உருவ
இயக்கம், 1975இல்
ஈழ விடுதலை இ
டாகவும் நடைபெ

இதனைத் த
அடிப்படை உரி
பாடுகளைக் செ
அதற்கு ஒரே வ
களை உருவாக்
மைப்பிலேயே இ
இருந்தமையினா
லச் சட்டங்களை
யான தேசிய அர
கியது. அடிப்பன
எல்லாம் இவ்வரசி
முழுவதும் கிட
நூற்றுக் கணக்க
வகை தொகை
ப்பட்டு, பல ஆண்
வைக்கப்பட்ட
செய்யப்பட்டனர்.

### நிர்வாக... அரசியலமை...

நிர்வாகத்
தொடர்பான பிர
தது, குடியேற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரசியல் திட்டம்:

## ...வாதத்தை ...ரமயப்படுத்திய

...ங்கை ...மைப்பு





...மானதாகும். ...த் துறையில் ...கப்படுவதற் ...ாகும்.

...லமைப்பின்

...க்கத்தினை ...ள் அரசியல ...வு இருந்துள் ...புதிய சட்டங் ...நிறைவேற்ற ...கு இருக்கவி ...ந்த ஒரே ஒரு ...ின் அடிப்படை ...சில ஏற்பாடு ... காலகட்ட ...களை

...ண்டு வரப்பட்ட ...ஆண்டு பேரின ...ன்பன தமிழ் ...லக்கி தனிக் ...முன்னெடுக் ...தமிழ் இளை ...போராட்டங்க ...ாராட்ட நடவ ...தொடங்கினர். ...இல் உருவாக் ...ரவை, 1973இல் ...ழ் இளைஞர் ...கவும் ஆயுதப் ...ணவர் பேரவை, ...ட்ட புலிகள் ...கப்பட்ட தமிழ் ...ன்பவற்றினூ ...ாண்டிருந்தன.

...வண்டுமாயின் ...கான மட்டுப் ...ர வேண்டும். ...கால சட்டங் ...ன். அரசியல ...வழிமுறைகள் ...டு அவசரகா ...சட்டத் துறை ...வை உருவாக் ...ம ஏற்பாடுகள் ...க் காலப்பகுதி ...ாடப்பட்டது. ...இளைஞர்கள் ...கைது செய்ய ...காக சிறையில் ...திரவதையும்

...யில் ...ரயோகம்

...பிரயோகம் ...யமாக இருந் ...லப்படுத்துதல்

ஆகும். இங்கு பலப்படுத்துதல் என்பதில், அரசியல் ரீதியிலான பலப்படுத்துதல் என்பதே முக்கிய இடத்தினை வகித்திருந்தது. ஏற்கெனவே அம்பாறை மாவட்டத்தில் அம்பாறைத் தொகுதியின் உருவாக்கமும்; மாவட்டத்தின் தலைப்பட்டினமாக அம்பாறை நகரம் உருவாக்கப்பட்டமையும், நிர்வாகச் செயல்பாடுகள் அனைத்தும் சிங்கள மொழியில் மேற்கொள்ளப்பட்டமையும், பேரினவாதிகளுக்கு பெரிய வெற்றியைப் பெற்றுக் கொடுத்தது. இம்முறை திருமலை மாவட்டத்தில் அதற்கான செயல் திட்டங்களை திட்டமிட்டு மேற்கொள்ள ஆரம்பித்தனர். அரசியல் திட்டத்திலுள்ள, ஓட்டைகளும் பேரினமயப்படுத்தப்பட்ட நிர்வாகத்துறையும் இவர்களது பணிகளை இலகுவாக்கியிருந்தது.

திருமலையில் சிங்கள குடியேற்றப் பகுதிகளில்பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. அவ்விடங்களில் எல்லாம், சிங்கள மொழியில் அரச கருமங்கள் நடைபெறுவதற்கு, ஏற்பாடுகள் செய்யப்பட்டன. திருமலை மாவட்ட அரசாங்க அதிபராகவும் ஒரு சிங்களவரை நியமித்து அவரது ஒத்தாசையும் பெறப்பட்டது. முப்படைகளோடு பொலிஸ் படைகளும் பௌத்த மத நிறுவனங்களும் இவர்களின் சிங்கள மயமாக்கத்திற்குத் துணை நின்றன. மலையகத்திலும் கொழும்பிலும், 100 ஆண்டுகளுக்கு மேலாக, தமிழ் மக்கள் வாழ்ந்தும் அவர்களுக்கு ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கூட உருவாக்கப்படவில்லை. ஆனால் கிழக்கிலும் வவுனியாவிலும் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு, ஒரு சில ஆண்டுகளிலேயே இவை உருவாக்கப்பட்டிருந்தன. பின் வந்த காலங்களில் இவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவினை மையமாக வைத்துப் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டமையானது குடியேற்றத் திட்டங்களை மேலும் மேலும் பலப்படுத்தியது.

இவை எல்லாவற்றையும், மேலும் பலப்படுத்தும் வகையில் சிங்களக் குடியேற்றங்களை இணைத்து சேருவில எனும் ஒரு சிங்களத் தொகுதியும் உருவாக்கப்பட்டது. இதற்காக மூதூர், இரட்டை அங்கத்தவர் தொகுதியானது ஒற்றை அங்கத்துவ தொகுதியாக ஆக்கப்பட்டது. இதனூடு மூதூர் தொகுதியின் தமிழ் பிரதிநிதித்துவமும் பறிக்கப்பட்டது. மூதூர் தொகுதியிலுள்ள. 17,339 தமிழ் வாக்காளர்களும் சேருவில தொகுதியிலுள்ள 8,595 தமிழ் வாக்காளர்களும் தமது பிரதிநித்துவத்தை இழந்தனர். அதுவரை திருமலை மாவட்டத்தில், இரண்டு தமிழ் பிரதிநிதிகளும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகும் நிலை மாறி திருமலை தொகுதியிலிருந்து மாத்திரம் ஒரு தமிழ் பிரதிநிதி தெரிவு செய்யப்படும் நிலை தோற்றம் பெற்றது. இதில் மிகவும் கவலைக்குரிய விடயம், இத்தொகுதி மாற்றத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியும், துணை போனது தான். அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் தமக்கு ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் தந்தால் சிங்களப் பிரதிநித்துவத்தினை எதிர்க்கப் போவதில்லை என அரசிடம் கூறியிருந்தனர். அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநித்துவம் கோருவது நியாயம் தான் அதற்காகத் திருமலையில் சிங்களத் தொகுதி உருவாவதை எவ்வகையில் விட்டுக் கொடுக்க முடியும்?

குடியேற்றத் திட்டம் தொடர்பாக அரசியல் அமைப்புச் சட்ட ஏற்பாடுகளோ துணை நிர்வாக சட்ட ஏற்பாடுகளோ இல்லாமையே இது தொடர்பான விடயங்களில் இவர்களது நடவடிக்கைகளை சுலபமாக்கியிருந்தது. இல்லாவிட்டால் அது தொடர்பான எதிர்ப்புகளும் பிரச்சினைகளும் இவர்களது நடவடிக்கைகளை கொஞ்சமாவது கடினப்படுத்தியிருக்கும். இது விடயத்தில் இருந்தது அமைச்சரவைக்கு இருந்த மேலான நிர்வாக அதிகாரமே. இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி விவசாய அமைச்சும் பொது நிர்வாக அமைச்சும் பாரிய எதிர்புக்கள் எதுவும் இல்லாமலேயே இவற்றைச் சீராகச் செய்து முடித்தன.

மேலும் தேர்தற் தொகுதி சீர்திருத்தத்தின் போது தேசிய அரசுப் பேரவையின் பிரதிநிதித்துவம் 151இலிருந்து 168ஆக அதிகரிக்கப்பட்டது. இதன்போது சிங்கள பிரதிநித்துவம் அதிகரிக்கப்பட்ட அளவுக்கு தமிழ் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவில்லை. தமிழ் பிரதிநிதித்துவம் என்ற வகையில் வட பகுதியில் முல்லைத்தீவு தொகுதி புதிதாக உருவாக்கப்பட்டதோடு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள், தமது பிரதிநிதியை தெரிவு செய்யும் வகையில் பொத்துவில் தொகுதி இரட்டை அங்கத்துவ தொகுதியாக மாற்றப்பட்டது. மூதூரில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தை இழந்ததையும் பார்க்கும்போது, ஒரு பிரதிநிதித்துவத்தால் மட்டுமே வடக்கு கிழக்கு தமிழ் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது. விகிதாசாரப்படி பார்த்தால் கூட வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு 21 பிரதிநிதித்துவம் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 19 பிரதிநிதித்துவமே கிடைத்தது.

### கல்வி

கல்வியில் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன்படி பல்கலைக்கழக விஞ்ஞான பீடங்களுக்கு தமிழ் மொழிமூல மாணவர்கள் கூடுதலான புள்ளியும், சிங்கள மொழி மூலமான மாணவர்கள் குறைந்த புள்ளியையும் எடுக்க வேண்டுமெனக் கூறப்பட்டது. அரசியல் யாப்பு அமைச்சரவையினூடாக கல்வி அமைச்சருக்குக் கொடுத்த அதிகாரங்களைக் கொண்டே இவை மேற்கொள்ளப்பட்டன.

### வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பினைப் பொறுத்தவரை இன ரீதியான பாரபட்சத்தினை தடுப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவோ நீதிச்சேவை ஆணைக்குழுவோ இருக்கவில்லை. இவ்வதிகாரங்கள் அனைத்தும் அமைச்சரவையின் மீது பொறுப்பாக்கியதனால் பேரினவாத அமைச்சரவை தான்தோன்றித்தனமாக செயற்பட்டது. தமிழ் மொழிமூலமட்டும் செயற்படக்கூடிய ஆசிரியர் தொழில் தவிர்ந்த ஏனைய தொழில்களில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டனர். ஆசிரியர் தொழில்களில் கூட தமிழ் பகுதியில் இருந்தும் அரசாங்கக் கட்சி அமைப்பாளர்களுக்கு லஞ்சமாகப் பணம் கொடுத்தே எடுக்க வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் பத்தாயிரமாக இருந்த இப்பணத்தொகை பின்னர் முப்பதாயிரம் நாற்பதினாயிரம் என வளர்ந்திருந்தது. இக்காலப்பகுதியில் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களில் ஒருவராவது பணம் கொடுக்காமல் பெற்றது கிடையாது.

செல்லையா குமாரசூரியர் தபால் அமைச்சராக இருந்தமையினால், தபால் திணைக்களங்களில் சில நடுமட்ட-கீழ் மட்ட வேலைகளும் தமிழர்களுக்குக் கிடைத்தன. ஆனால் இவற்றையும் லஞ்சமாகப் பணம் கொடுத்தே பெற வேண்டியிருந்தது.

வேலை வாய்ப்பு விடயத்தில், அரசியல்யாப்போ துணை நிலைச் சட்டங்களோ எவ்வெவ்முறைகளில் ஆட்கள் சேர்க்கப்பட வேண்டுமென எவற்றையும் குறிப்பிடவில்லை. அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகள் பகுதியில் மட்டும் வேலை வாய்ப்பின் போது இன ரீதியான பாரபட்சம் காட்டக்கூடாது எனக் கூறப்பட்டது. ஆனால் தொடர்ச்சியான அவசர நிலைச் சட்டங்களினால் அடிப்படை உரிமைகள் வலுவிழந்த நிலையில் இருந்தமையினாலும், அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி அரசியலமைப்பு எதுவும் கூறாமையினாலும், இதனையிட்டு பரிகார நடவடிக்கைகள் எவற்றையும், தமிழர்களால் மேற்கொள்ள முடியவில்லை.

வேலை வாய்ப்புக்குப் புறம்பாக தமிழ் பிரதேச அபிவிருத்தி என்பதும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. இக்காலத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் தமிழ்ப் பிரதேசத்தில் ஏதாவது நடந்ததென்றால் தபால் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் திறந்து வைத்த ஒரு சில உப தபாலகங்கள் மட்டும் தான்.

தமிழ் மொழியின் உபயோகம் பற்றி துணை நிலைச் சட்டங்கள் கூறிய போதும், நடைமுறையில் அவற்றை செயல்படுத்துவதில் நிர்வாகத்துறை ஆர்வமெதனையும் காட்டவில்லை. இவற்றுக்கு மாறாக தமிழ் பகுதிகளில் சிங்களத் திணிப்பிலேயே அரசு அதிக ஆர்வம் காட்டியது. அரச திணைக்களங்களிலிருந்து, தமிழர்களுக்கு வரும் கடிதங்கள் கூட தனிச் சிங்களத்திலேயே வந்தன.

### நீதித்துறையில் அரசியல் யாப்பின் பிரயோகம்

சிறுபான்மையோர் விடயத்தில் சோல்பரி யாப்பில், நீதித்துறை சங்கடப்பட வேண்டியிருந்ததைப் போல இவ்வரசியல் யாப்பில் சங்கடப்பட வேண்டிய நிலை இருக்கவில்லை. அரசியலமைப்பின் 29 ஆவது பிரிவும், நீதித்துறையின் நீதிப்புனராய்வு அதிகாரமும் இவ்வரசியலமைப்பில் நீக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும். இதனால் குறிப்பிட்ட சட்டமோ அல்லது அரசின் நடவடிக்கைகளோ 29ஆவது பிரிவுக்கு எதிரானதோ அல்லது ஆதரவானதோ எனக் கூறுகின்ற அவசியம் நீதித்துறைக்கு இருக்கவில்லை.

அடிப்படை உரிமைகள் பகுதியிலுள்ள விடயங்கள் மட்டும் குறிப்பாக கைது செய்தல், வேலை வாய்ப்பில் இனப்பாரபட்சம் காட்டக்கூடாது என்கின்ற விடயங்கள் மட்டும், சில சங்கடங்களைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. அதனையும் அவசரகால நிலைக்குரிய மட்டுப்பாடுகள் தவிர்க்கச் செய்திருந்தன.

அவசரகால நிலைச் சட்டங்களின் துணையினால், தமிழ் இளைஞர்கள் நூற்றுக் கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்ட போதும், சித்திரவதை செய்யப்பட்டபோதும் நீதித்துறை மௌனமாக இருந்தது.

இறுதியாக சோல்பரி அரசியலமைப்பு இலங்கையில் பேரினமயமாக்கலுக்கான அடிப்படைகளை உருவாக்கியிருந்தது. 1972 அரசியல் திட்டம் அதில் பேரினமயமாக்கலுக்கு இருந்த தடையாக இருந்த காரணிகளை அகற்றியதோடு பேரினமயமாக்களை மேலும் பலப்படுத்தும் வகையில் பல ஏற்பாடுகளைச் சேர்த்து அதனை முழுமையாக்கியிருந்தது. இதனையே புதிய அரசியல் திட்டம் அறிமுகப்படுத்திய போது வீரகேசரி ஆசிரியர் தலையங்கம் "சோல்பரி தொடக்கி வைத்ததை கொல்வின் முடித்து வைத்தார்" எனக் குறிப்பிட்டிருந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அரசியல் திட்ட வழிமுறைகளூடு போராடக்கூடிய சகல வழிகளும் இவ்வரசியல் திட்டத்தின் மூலம் அடைக்கப்பட்டன. அவர்கள் இலங்கையின் மைய அரசியலிலிருந்து முழுமையாகவே அந்நியப்படுத்தப்பட்டனர். இலங்கை அரசில் தம்க்கு எவ்வித உரிமையும் இல்லையென தூக்கி வீசப்பட்ட நிலையில் தமிழ் மக்கள் தனி நாட்டுப் போராட்டத்தை முன்னெடுக்க ஆரம்பித்தனர். ஆயுதப் போராட்டம் மூர்க்கமாக எழுச்சியடைய ஆரம்பித்தது.

இந்நிலையில் இறுதியாக கொண்டு வரப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு மேற்கொண்ட பணி சகல முனைகளிலும் எழுச்சியடைந்து வந்த தமிழர்களது போராட்டத்தையும் அவர்களது இருப்பையும் அழிக்க முற்பட்டது தான்.

சுதந்திரத்துக்குப் பின்னரான அரசியல்யாப்புக்கள் பேரினமயமாக்கலுக்கான அடிப்படைகளை உருவாக்கல், தடைகளை அகற்றுதலும் பலப்படுத்தலும், எதிர்ப்புக்களை அழித்தல், என்ற வகையிலேயே வளர்ந்து சென்றன.

---

**அரசியல் திட்டம் கொண்டு வரப்பட்ட சூழலில் அதனை எதிர்த்து தமிழ் கட்சிகளின் நிலைப்பாடுகள், போராட்டங்கள் என்பவை குறித்து அன்றைய சுதந்திரன் பத்திரிகையில் கோவை மகேசன் எழுதிய பத்தியிலிருந்து சில பகுதிகள்.**

...இந்நாட்டுத் தமிழினத்தின் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளான தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளான சுயாட்சிக் கழகமும், ஈழத் தமிழ் ஒற்றுமை முன்னணி ஆகிய நான்கு கட்சிகளும் ஒருங்கிணைந்து புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்துள்ளதால், புதிய அரசியல் திட்டத்தை இந்நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழினமும் ஏற்றுக் கொண்டு விட்டதாக ஆட்சியாளர்கள் வெளியுலகத்துக்கு இனிமேல் எடுத்துக் கூறி ஏமாற்றிட முடியாது...

...ஈழத் தமிழர்கள் புதிய அரசியல் திட்டத்தை முற்றாக நிராகரித்துவிட்டார்கள், முழு மூச்சுடன் அதை எதிர்க்கிறார்கள் என்ற உண்மையை உலகத்தின் கண்களிலிருந்து இனி மறைத்து விட முடியாது...

...தமிழினத்தை புதைகுழிக்குள் அனுப்பும் இந்தப் புதிய அரசியல் திட்டம் இத்திங்கள் 22ஆம் நாள் நடைமுறைப்படுத்தவிருப்பதாக ஆட்சியாளர்கள் அறிவித்துவிட்டார்கள். தமிழ் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட எதிர்ப்புக்குக் கொஞ்சம் கூடச் செவிசாய்க்க மறுத்துவிட்டார்கள். அவசரகால சட்டத்தின் துணையுடன் புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வரப்போகிறது இன்னும் சில தினங்களில்....

(சுதந்திரன் - 14-05-72)

**குடியரசு நாள் தமிழர் குடியழித்த நாள்**

...தமிழினத்தின் தனிப்பெரும் விடுதலைப்பாசறையான தமிழரசுக் கட்சியும், தமிழ்க் காங்கிரசும், மலையகத் தமிழ் தொழிலாளர்களின் பேரியக்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஒரேகுரலில்-ஒரே கூட்டணியில் இணைந்து புதிய அரசியல் திட்டத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்திவருகின்றன...

...புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வரும் நாள் - ஈழத் தமிழ் தேசிய இனத்தின் தூக்குக்கயிறு உருவாக்கப்படும் துயர் தோய்ந்த நாள். அந்நாளில் நமக்கு எதுவித குதூகலமோ, கொண்டாட்டமோ, கேளிக்கைகளோ, எதுவுமே வேண்டாம். ஈழத்தமிழகமெங்கும் சோகமும்-அமைதியும் நிறைந்து இழவு வீடாக காட்சி தரட்டும்...

...மே.22 ஆம் நாள் - தமிழ் ஈழமெங்கணும் உயர்த்தப்படும் கருங்கொடிகள்-இறக்கப்படாமல் தொடர்ந்து பறந்து கொண்டிருக்கட்டும். நமது உணர்ச்சியை அவை பிரதிபலிக்கட்டும். கறுப்புக்கொடியேற்றுவதால் பொலிசாரினதும், இராணுவத்தினரதும் இம்சைக்குள்ளாக வேண்டியேற்படுமானால், நிறைந்த மகிழ்வுடன், அந்த இம்சையைத் தாங்கிக்கொள்வோம்....

....எத்தனை தடை ஏற்படினும்-எத்தனை துன்பம் நேரிட்டாலும் அரசியல் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தை யாழ் நகரில் நடத்தியே தீருவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழு முடிவு செய்திருக்கிறது. அந்தக் கூட்டத்திலே புதிய அரசியல் சட்டத்துக்கு பாடை கட்டப்படவிருக்கிறது...

சிங்கள மக்கள் மீது நமக்கு வெறுப்பில்லை-நம்மை அடிமைகளாக்கி அழித்தொழிக்க கொண்டுவரப்படும் புதிய அரசியல் திட்டத்தையே நாம் எதிர்க்கிறோம் என்பதையும் இந் நேரத்தில் தெளிவுபடுத்துகிறோம்.

(சுதந்திரன் 21-05-72)

**கருமையிலாழ்ந்தது தமிழீழம்**

...இந்நாள் குடியரசு நாளாம். கூறுகின்றனர் கோலேந்திகள். கோலாகலமாக விழாவெடுக்கின்றனர். இன்றைய நாள் சிங்கள நாடு விழாவெடுக்கிறது. குதூகலங் கொள்கின்றனர் நாட்டின் ஓர் பகுதியிலே. ஆனால் மற்றோர் பகுதியிலேகுமிறிடும் இதயங்களை-கொந்தளிக்கும் உள்ளங்களை-கொதித்தெழுந்திடும் நெஞ்சங்களையன்றோ காண்கிறோம்...

...வேலைக்குப் புறப்படும் காளையிடம், வேலை என்ன அத்தான் வேலையின்று. கோலத் தமிழ் மொழிக்கு கொள்ளி சொருகிடும் நாளில், வேலை நமக்கு விடுதலைப் படைக்கு அணி சேர்ப்பதே. இதோ கருங்கொடி, நேற்றே தைத்து வைத்துவிட்டேன், ஏற்றுங்கள் இல்லத்தின் மீது என்று வேல்விழியாள் இடும் ஆணைகேட்டு செயல்படும் இளந் தமிழ்க் காளையரைக் காண்கின்றேன்...

...நாடே ஓர் சிறைச்சாலையாக இருந்திடும் போது-நான்கு சுவர்களுக்குள் இருந்திடும் இந்தச் சிறை எம்மை என்ன செய்திடும், மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை என்று எழுச்சிப் பண்ணிசைத்தபடி சிறைச்சாலைக்குள் சிரித்தபடி இருந்திடும் முத்துக்குமாரசாமி, பிரான்சிஸ், மனோகரன் போன்ற ஏராளமான இளைஞர்களைக் காண்கின்றேன்... குடியரசு எதிர்ப்பு நாளில் சிறை சென்றிடும் வாய்ப்புப் பெற்ற இளைய தலைமுறையினரைப் பாராட்டுகின்றேன். அவர்களின் வீரத்துக்கும் தியாகத்துக்கும் தலைவணங்குகிறேன்...

...குடியரசு நாளில்-தமிழர் குடியின் கரிநாள்-ஈழம் தந்த புரட்சிப்புலவன்-என் இனிய நண்பன், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், தனது அரசாங்க வேலையை உதறித் தள்ளியதன் மூலம் ஈழத் தமிழர்களின் விடுதலை இயக்க வரலாற்றில் ஒரு புதிய சாதனையை, தியாக வரலாற்றை எழுதிவிட்டார்...

(சுதந்திரன் 28-05-72)

மே 22,23,24 ஆகிய மூன்று நாட்களிலும் தமிழ் ஈழத்தில் நடைபெற்ற போராட்டத்தின் போது இதற்கு முன் என்றுமே கண்டிராத அளவில், தமிழ்குலத்து காளையரின் எழுச்சி கண்டேன்...

தமிழ் மக்களின் உணர்வை கொஞ்சமும் மதிக்காது அலட்சியம் செய்துவிட்டு, புதிய அரசியல் திட்டத்துக்கு கையெழுத்திட்ட மாட்டின், அருளம்பலம், தியாகராசா, இராசன், குமாரசூரியர், சுப்பிரமணியம் ஆகிய அறுவரும் ஈழத்தமிழினத்தின் யுதாஸ்காரியோத்துக்கள், கட்டப்பர்கள், இனத்துரோகிகள், என்று இன்றுள்ளோர் மட்டுமல்ல-எதிர்கால பரம்பரை முழுவதுமே காறியுமிழப்போகிறது. கருவிலிருக்கும் தமிழ்க்குழவிகூட இவர்களைப் பார்த்து இன்று சபித்துக் கொண்டேயிருக்கும் என்பதில் தடையில்லை...

..டொனமூர் திட்டத்தை ஆதரிக்க தம்பிமுத்து என்ற ஒரு துரோகி மட்டுமே இருந்தான்.-சோல்பரி அரசியல் திட்டத்தை ஆதரித்திட இராசகுலேந்திரன் என்ற துரோகி மட்டுமே கிடைத்தான்-ஆனால் தமிழருக்கு முழுக்க முழுக்ககுழிபறித்துள்ள புதிய அரசியல் சட்டத்தை ஆதரித்திட ஆறு துரோகிகள் இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது தமிழ் இனம் இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டும்...

(சுதந்திரன் 04-06-72)

-செம்பாட்டான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இறுதிப் பகுதி

குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே..

# விவாகரத்து செய்தவர்களின் குழந்தைகள்!

ஆங்கிலமூலம்:
டொக்டர் ஜெயிம் ஜ ஜினோல்ட்
தமிழில்:
அருண்

### மட்டுமீறிய அக்கறை உடைய பெற்றோர்

**தங்கத்தட்டில் தரப்படும் சந்தோசம்:-** மட்டுமீறிய அக்கறை காட்டும் பெற்றோருக்கு குழந்தை வளர்ப்பில் வழிகாட்டல் அவசியம். பெற்றோர் அன்பானவர்களாகவும், அர்ப்பணிப் புள்ளவர்களாகவும் இருக்கலாம் ஆனால் அவர்கள் பெரிதும் குழந் தையை மையமாக வைத்து சிந்திப்பவர்களாக இருக்கிறார்கள். தமது குழந்தைகளை, அவை தம்மைக் கொலை செய்தாலும் கூட, சந்தோ சமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். தமது குழந்தை விரக்தி அடையக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு அம்சத்தி லும் அவர்கள் கவனமாக இருந்து அத்தகைய சூழல்களை தவிர்த்துக் கொள்வார்கள். இந்த முயற்சியில் அவர்கள் தாம் விரக்திக்கும் வறுமைக்கும் கூட உள்ளாகக் கூடும்.

அதிசிறப்பான சந்தோசம் என்பது ஒரு கற்பிதமான குறிக்கோளே. அது ஒரு முடிவு அல்ல. அது ஒரு பயணத்தின் தன்மை மட்டுமே. சந்தோசம் தன்னுள் முடியும் ஒன்றல்ல. அது வேலை செய்தல், விளையாடல், அன்பு செய்தல், வாழ்தல் என்பவற்றின் ஒரு பக்கவிளைவாகும். வாழ்வு என்பது தவிர்க்க முடியாமல் விருப்பத்திற்கும் அது கிடைப்பதற்கும் திட்டமிடுவ தற்கும் அது நிறைவேறுவதற்கு மிடையிலே ஒரு காலதாமதத்தைக் கொண்டதாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அது விரக்தியையும், விரக்தியால் ஏற்படும் துன்பத்தையும் உள்ளடக்கியதாகும்.

நாம் விரக்திக்காக திட்டமிடத் தேவையில்லை. ஒரு சுகயீனம் ஏற்படும் என்று முன்கூட்டியே நினைப்பதுபோல அது அவசியமற்ற ஒன்றாகும். ஆனால், ஒரு குழந்தை விரக்தியடைந்திருக்கும் போது, பெற்றோர் அதனைக்கண்டு துவண்டுப்போகத் தேவையில்லை. ஒரு பிள்ளை வாழும்போது, அதைச் சிரிக்க வைப்பதற்காக ஒரு தாய் குத்துக்கரணம் அடிக்கத் தேவையில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளைகள் குற்ற உணர் வினை அல்லது தியாகத்தினை அடிப் படையாகக்கொள்ளாத புத்திபூர்வ மான முகாமைத்துவத்திற்கு பழக வேண்டும் என்பது முக்கியமான தாகும்.

பெற்றோரின் சிறிய வற்புறுத்தல்களும் நியாயமான கோரிக்கைகளும் கூட அழுகையாலும், அடம்பிடித்தலாலும் எதிர்கொள்ளப்படக்கூடும். இவ்வா றான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை சரியாக நடப்பதற்கு வலியுறுத் துவதும், அந்தக்கஷ்டங்களுடன் வாழத் தயாராகும்படி கூறுவதுமே சிறப்பானதாகும். பிள்ளைகளை இவ் வாறான சந்தர்ப்பத்தில் தட்டிக் கொடுப்பது நிலைமைகளைச் சரிசெய்யாது; சில முகில்கள் என்ன நடந்தாலும் மழையைக்கொண்டு வரத்தான் செய்யும். ஒருவரால் செய்யக்கூடியதெல்லாம், மழை போய் முடியும் வரை காலை நனைக் காமல் பொறுத்திருப்பது மட்டும்தான். இப்படியான சந்தர்ப்பங்களில் உறுதியாகவும், இரக்கம் காட்டாமலும் இருப்பதில் இருக்கும் எங்கள் ஆற்றலைப் பொறுத்து குழந்தைகள் உறுதியையும், பாதுகாப்புணர்வையும் கற்றுக்கொள்வார்கள்.

### விவாகரத்து செய்த பெற்றோர்

**நல்லிணக்க வெளித்தோற்றம்:-** விவாகரத்து என்ப்து, ஒரு அவயவத்தை துண்டிப்பது போல, ஆத்மாவை உலுக்குகின்ற அனுப வத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு அளிக்கும் ஒன்றாகும். பெற்றோ ருக்கு, பல உடைந்த கனவுகளுக்கும், விருப்பங்களுக்கும் ஒரு முடிவாக இது அமைகிறது. பிள்ளைகட்கோ, இது உலகத்தின் முடிவாகத் தோன்றலாம். குடும்ப உடைவின் கசப்புக்கும், தடுமாற்றத்திற்கும் மத்தியில் பெற்றோர்கள் தமது குழந்தைகளை முடிந்தளவு பாதிப் படைவதைக் குறைக்கக் கூடிய விதத்தில் தமது நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்.

ஒருவர் மீது ஒருவர் பழிவாங்க குழந்தையைப் பயன்படுத்துவதுதான் பெற்றோர் செய்யக்கூடிய மிகவும் மோசமான நடவடிக்கையாகும். இந்தச் செயலுக்கான உணர்வுகளும் வாய்ப்பும், செய்ய வேண்டும் என்ற உத்வேகமும் இங்கே இருக்கிறது. ஒரு பெற்றாரால் மற்றவர் திட்டப்படலாம். அவதூறு செய்யப்படலாம். குழந்தைகள் ஒரு பக்கத்தைச் சார்ந்து நிற்குமாறு கட்டாயப்படுத்தப்படலாம் அல்லது தூண்டப்படலாம். இதற்காக பணிவு, பாதுகாப்பு, பணம், கல்வி, பயணங்கள் என்பன பயன்படுத்தப் படலாம்.

கணவன் மனைவியாக இல்லா விட்டாலும் கூட தாம் பெற்றோராகத் தொடர்ந்து இருப்பதே விவாகரத்து செய்து கொண்ட பெற்றோர் செய்ய வேண்டிய சிறப்பான விடயமாகும். இது ஒன்றும் இலேசான விடயம் அல்ல. ஏனென்றால் இதற்கு ஒருவகை வெளித்தோற்ற அளவிலான நல்லி ணக்கம் அவசியம். அதுவும் தம்மிடையேயான வெறுப்புக்கும் கசப்புணர்வுக்கும் மத்தியில் இது செய்யப்படுவது என்பது கடினமானது தான். நிபுணத்துவ உதவி பெற் றோர்க்கு இதைச் செய்ய உதவக் கூடும். அவர்களுக்கு தமது துயரங் களை புறவயமாகப் பார்க்கவும், தமது பிள்ளைகட்கு எது சிறந்ததோ அதைச் செய்யவும் அது அவர்களுக்கு உதவலாம். டொக்டர் லூயிஸ் டெஸ் பேட் 'விவாகரத்து செய்தவர்களின் குழந்தைகள்' என்ற தமது நூலில் இப்படிக் கூறுகிறார்.

''ஒரு ஆணும் பெண்ணும் தமது திருமணத்தை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களால் ஒரு வெற்றிகரமான விவாகரத்தைச் செய்ய முடியும். முயற்சி, நல்லெண்ணம், வழிகாட்டல் என்பவற்றுடன்.... தமது திருமண வாழ்வில் செய்ய முடியாத முதிரும் அனுபவத்தை விவாகரத்தில் செய்ய முடியும்...''

### பின்னுரை

இந்த நூலில் கூறப்பட்ட புதிய தீர்வுகள் பொருத்தமான விதத்தில், தெரிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் போது மட்டுமே அவை பெற்றோரின் நோக்கங்களுக்கு ஒளியூட்டுவதாய் அமையும். குழந்தைகள் கோரிக் கைகளுக்கான எதர்வினையில் ஆளுக்காள் மாறுபடக்கூடும். சில குழந்தைகள் சொன்னபடி கேட் பார்கள்; வழமையான நடத்தையிலும் உறவுகளிலும் ஏற்படும் மாற்றங்களை இலகுவில் ஏற்றுக்கொள்வார்கள். வேறு சிலரோ மிகவும் கட்டுப் பெட்டித்தனமாக இருப்பார்கள். எதிர்ப்பு அல்லது தண்டனையின் பின்னரே அவர்கள் மாற்றத்திற்கு ஒப்புவார்கள். வேறுசிலரோ மிகவும் எதிர்ப்போக்கைக் காட்டுவார்கள். அவர்கள் தமது வாழ்வில் எந்தப் 'புதிய விடயத்தை'யும் தீவிரமாக எதிர்ப்பார்கள். ஒரு புத்திபூர்வமான புதிய அணுகுமுறையானது குழந்தை யின் உணர்வையும் அதன் ஆளுமை யையும் கணக்கிலெடுத்துச் செய்யப் பட வேண்டும்.

மனித உறவுகளில், முடிவுகள் வழிமுறைகளில் தங்கியுள்ளன. முடிவு செயல்முறையில் தங்கியுள்ளது. ஆளுமையும், நடத்தையும், குழந்தை வளர்ப்பு முறைகள் கௌரவத் துடனும், அனுதாபத்துடனும் கடைப் பிடிக்கப்படும் போது மட்டுமே மலரும். பெற்றோருக்கும் குழந்தை கட்கும் இடையிலான சவால்விடும் உறவின் தேவைகட்கு வேண்டியளவு பாரிய அக்கறையையும், உணர்வுகள் மீதான ஆழமான புரிதலையும் இந்தப் புதிய அணுகுமுறைகள் வழங்கும் என்று நம்பப்படுகிறது.

(முற்றும்)



## கல்

அவள் நடந்தாள்
காடுகளுக்கூடாகவும்
பாலைவனங்களுக்கூடாகவும்
ஆனால் அவள் உணரவில்லை
குளிரையோ
வெப்பத்தையோ
அவளின் உட்காவு நரம்புகள்
பழக்கப்பட்டன இவற்றுக்கெல்லாம்

ஆனால் அவளின் மூளையோ
குழம்பிற்று
எதையோ சிந்தித்தது
கண்கள் மட்டும்
கண்ணீரால் நனைந்து கொண்டது
அவளின் உள்மனம்
எதையோ தேடிற்று
அது எதுவென்று புரியவில்லை
அவளுக்கு

சில சமயம் அவள் உணர்ந்தாள்
தான் ஒரு
சிலையாக்கப்பட்டிருப்பதை.

பெண்ணியா

20.01.98
12.05 மணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# கம்பன் விழா : பட்டிமன்றங்களின் மந்தைக் கலாசாரம் !

தமிழகத்தில் கம்பனைப்போற்றுகின்ற மரபு நீண்டகாலமாக இருந்து வருகிறது. பல்வேறு சிறப்பு நிலைகளிலும் கம்பனை எடுத்தியம்பும் அறிவார்ந்த பணி பல்வேறு மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 1940களில் மேற்கிளம்பியவர்கள் வைஷ்ணவ சம்பிரதாயங்களிலிருந்து மீட்டு பௌராணிக மரபிலிருந்து வேறுபட்ட முறையில் கம்பனை சமயுச்சார்பற்ற முறையில் நோக்கும் போக்கு ஒன்றை வெளிப்படுத்தினர்.

இந்தக் காலகட்டங்களில் தமிழ்ப் புலமையாளர்களுள் சிலரும் இளங் கவிஞர்கள் பலரும் ஒன்று சேரும் மையமாக இது மாறத்தொடங்கியது. தொ.மு.சி. ரகுநாதன், கு. அழகிரிசாமி, திருலோகசீத்தாராம், அ.வே.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், அ.ச.ஞானசம்பந்தன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

அன்று புலவர்கள் கூடும் சபையில் தாம் கற்ற புலமையைச் சமத்காரமாகக் காட்டுவது பிற புலவர்களை விவாதத்தில் சாதுரியமாக மடக்கி வெல்வது கல்வி இலக்காகக் கருதப்பட்டது. இந்த விவாத மரபை 'மணிமேகலை', 'சிலப்பதிகாரம்' போன்ற காவியங்களில் காணலாம். இந்திர விழாக்கால நாட்களில் சமயக்கணக்கர்கள் தத்தம் மத தத்துவ ...க்கங்களை பொதுமேடையில் ...டிமன்றமாக விவாதித்து வெற்றி பெறும் போட்டிகள் நடைபெற்றதாகத் தகவல்கள் உள்ளன.

மணிமேகலையில் 'சமயக்கணக்கர் தம்திறம் கேட்ட காதை'யில் பிறசமய - தத்துவவாதிகளைத் தர்க்கத்திறமையகல் வாதிட்டு வீழ்த்தும் செயல் விளக்கப்பட்டுள்ளது. இதனைப் பரபக்க நிராகரணம் என்பார்கள். சமண, பௌத்த, வைதீக தத்துவ - தரிசனப்போராட்டங்களில் இது இடம்பெற்றது. இதற்கு நீண்ட வரலாறு உண்டு. இடைக் காலத்திற்குப் பிற்பட்ட காலங்களில் அரசவைகளிலும் பிற செல்வந்தர்கள் வீடுகளிலும் இப்படிப்பட்ட விவாதங்கள், வார்த்தை விளையாட்டுக்கள், சமத்...ரம் மிகுந்த குஸ்திகள், சிலேடை...ன குத்தல்கள், வசைகள், வம்புகள், இரட்டை அர்த்தம் தொனிக்கும் பாலியல் பகடிகள் நடைபெற்று வந்துள்ளன. காளமேகம் போன்ற பிற்காலப் புலவர்களின் பாடல்களில் இந்தப் பண்புகளைக் காணலாம்.

கீர்த்தனை மயமான நாடகங்களிலும் நாட்டுப்புறக் கூத்துக்களிலும் இசைவடிவான சம்வாதங்களாக, தர்க்கப் பாடல்களாக இவை பொழுதுபோக்கு அம்சங்களாகத் தொடர்ந்தன. இன்று இவை வண்ண வண்ணமான பட்டிமன்றங்களாக வழக்காடு மன்றங்களாக பாமரர் முதல் படித்தவர் வரை கேட்டுச் சிரித்துப்பொழுது போக்கும் சபாக்களாக மலர்ந்துள்ளன. எல்லாவித நவீன தொடர்புசாதனங்களும் இந்த சமாஜங்களின் ஊடகங்களாகி உள்ளன.

1960களில் ஏலவே சுவாரசியத்துடன் தொடங்கப்பட்ட இராமாயணம் படிப்படியாக பட்டிமன்றமாக மாறத் தொடங்கியது. இதனால் இதுகாறுமாக வளர்த்தெடுக்கப்படும் கருத்துநிலையிலிருந்து இது விலகி வேறு ஒரு பரிமாணத்தில் பயணப்பட்டது. ஆழமான இலக்கிய பண்பாடு எதுவுமற்ற விவாதத்திற்கான விவாதம் என்ற நிலையை இது எடுத்தது. இலக்கியம் குறித்து ஆழமான கருத்து வளர்ச்சி எதனையும் இது கொண்டிருக்கவில்லை.

தமிழகத்தில் இலக்கியத்தை காத்திரமாக ஆய்வுசெய்பவர்களிலிருந்து பட்டிமன்றபேச்சாளர்கள் தனிப்பிரிவினராக நோக்கப்பட்டனர். இவர்களில் பலருக்கு சமூக அங்கீகாரம், சமூக அந்தஸ்து இருந்தது. இதனால் இவர்கள் ஒருவகையில் இலக்கிய அந்தஸ்து உள்ளவர்களாகவும் மாறினார்கள்.

ஈழத்தில் பட்டிமன்றம் தமிழகத்து நிலைமையிலிருந்து சற்று வேறுபட்ட பண்பினைக் கொண்டதாகவே வளர்ந்து செல்கிறது. அதாவது இராமாயணத்தின் இலக்கிய அடிப்படைகள் குறித்தோ, தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுக்கோப்பான அறிவாகவோ இது வளரவில்லை. வெறும் மலினப்பட்ட வாதங்களின் வாதங்களாகவே மாறியுள்ளது. பட்டிமன்றம் செய்வது தான் அல்லது அதில் ஈடுபடுவதுதான் ஓர் அறிவார்ந்த செயற்பாடு என்னுமளவிற்கு புனைவுகள் கட்டமைக்கப் படுகின்றன. பட்டிமன்ற வெற்று விவாதங்களே சீரிய விமரிசனஞ் செயற்பாடாகவும் மாற்றப்படுகின்றன.

இராமனின் தம்பிகளுள் சிறந்தவன் பரதனா? இலக்குவனா? என பட்டிமன்ற விவாதங்கள் நிகழ்கின்றன. உண்மையில் கம்பனின் பாத்திர உருவாக்கங்களில் அனைவருக்கும் உரிய இடங்கள் வழங்கப்பட்டுத்தான் இராமாயணம் படைக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரையும் கொண்ட இராமாயணத்தில் எவன் சிறந்தவன், எவன் தாழ்ந்தவன், எவன் கெட்டவன். யாருடைய அன்பு பெரிது? சிறிது?.. என்றெல்லாம் தனித்தனியாக எடுத்து விவாதம் செய்வதனால் இராமாயணம் எனும் முழுப்பாடத்தையுமே நாம் மறுத்து விடுகின்றோம். அதோடு இந்த விவாதங்கள் கம்பனைக்கூட சரிவர அறிய முடியாத நிலைக்கு எம்மை இட்டுச் சென்று விடுகிறது. கம்பன் எனும் படைப்பாளியை நாம் மறக்க வேண்டிய நிலைக்கும் ஆளாகி விடுகின்றோம்.

பட்டிமன்றங்களில் இராமனாகப் பேசுவது, பரதனாகப் பேசுவது, குகனாகப் பேசுவது போன்ற நிலைகளெல்லாம் இலக்கியம், இலக்கியச் சுவை, இலக்கிய விமரிசனம் பற்றிய தவறான அபிப்பிராயம் எம்மிடையே நிலவவே வழிவகுத்து விடுகின்றது. இன்னொரு விதத்தில் இந்தப் பட்டிமன்றங்கள் தமது கருத்தை நிலைநிறுத்துதல் என்பதற்கு மாறாக சுவைஞர்களை மகிழ்ச்சிப்படுத்துதல் எனும் நிலைக்கே வளர்ந்துள்ளது.

இன்று அனைவரையும் மகிழ்வளித்தல் எனும் நிலைக்கு பட்டிமன்றம் போய்விட்டது. அதாவது சனரஞ்சகப்படுத்துதல் எனும் நிலை. இது கூட சனவிருப்புவாதத்திற்கு பலியாகி விட்டது. பட்டிமன்றம் தொடங்கிய சில நிமிடங்களிலேயே சுவைஞர்கள் சிரிக்க வேண்டுமென்றுதான் பேச்சாளர்கள் விரும்புகின்றனர். இதனால் கருத்துக்களை இலக்கிய வரலாற்றில் இருந்து மட்டுமல்லாமல் அவ்றை சுமப்பதின் ஊடாக மீண்டும் மீண்டும் இராமனாக, குகனாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். தம்மைச் சுற்றி புனிதவட்டங்களையும், பக்தகோடிகளையும் உருவாக்குகின்றனர். இவர்களுக்கு தொடர்பு ஊடகங்களும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வெகுசனப்பரப்பில் பெருங்கதையாடல்களை கட்டமைப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. இன்று கம்பன் கழகம், கம்பவாரிசு குறித்து கட்டமைக்கும் புனைவை இதன் பின்புலத்தில் புரிதல் வேண்டும்.

ஒரு முறை ஒரு கட்சிக்கு சார்பாகப் பேசியவர், மறுநாள் அதே கட்சியை மறுத்துப் பேசுவார்.

இவ்விடத்தில் தமிழகப் பேராசிரியர் ஒருவரின் கூற்றை இங்கு ஞாபகப் படுத்திக் கொள்ளலாம். இப்பேராசிரியர் பட்டிமன்றம் ஒன்றுக்கு நீதிபதியாக இருந்து விட்டு தீர்ப்புக் கூறிவிட்டு வெளியில் வரும்போது, ஒருவர் பேராசிரியரிடம் இராமனை விட பரதன் தான் சரியென கூறியிருக்கவேண்டுமென கூறினார். அப்போ, பேராசிரியர் சரி! உமது ஊரில் ஒரு பட்டிமன்றத்துக்கு ஒழுங்கு செய்யும். அங்கே வந்து பரதனுக்கு சார்பாக தீர்ப்புக் கூறிவிடுகின்றேன் எனக்கூறிச்சென்றாராம். உண்மையில் இந்தப்போக்குகள் தான் பட்டிமன்றங்களில் தொடர்ந்து நடைபெறுகிறது. இங்கு சுவைஞர்கள் மீண்டும் மீண்டும் படுமுட்டாள்களாக்கப் பட்டுத்தான் செல்கிறார்கள்.

பொதுவாகக் கூறினால், இன்றைய சமூக நடப்பு ஒழுங்கை சனரஞ்சகத்தனமாக மரபும், பழமையும் உடைந்து போகாமல் பாதுகாக்க நவீன கருத்தியல் சாதனமாக கருத்தியல் விளக்கும் சம்பவங்களை, கதைகளை இடையிடையே இணைத்து வழங்கி வருகின்றனர். இது ஒரு விதத்தில் தத்துவச் சொல்லாடல் முறையாகவும் புனைவு செய்யப்படுகிறது. இத்னை சுவாரஸியத்துடன் சிரிப்புத்தோன்றும் வகையில் கட்டமைத்து வருகின்றனர்.

சிலசமயம் கருத்துக்களே இல்லாமல் வெறும் சம்பவங்களையும், சிரிப்புத் துணுக்குகளையும், கதைகளையும் எடுத்தியம்பும் கதைசொல்லிகளாகவும், மாறிவிடுகின்றனர். இதனால் பெருங்கதையாடல்களை புனைகின்றனர். இதன் தொடர்ச்சி பட்டிமன்றச் செயற்பாட்டாளர்கள் ஆழ்ந்த சிந்தனாவாதிகளாகவும் புலமையாளர்களாகவும் கட்டமைக்கப்பட்டு விடுகின்றனர். பாத்திரங்களை அடையாளப் படுத்தும் குறியீடுகளை தாங்களே வன்முறையாகவே பட்டி மன்றங்கள் மாறியுள்ளன.

இன்று ஈழத் தமிழர்களுள் புதிதாக மேற்கிளம்பி வரும் அதிகார ஆதிக்க மேட்டுக்குடியினரின் சமூக அங்கீகாரத்துக்கான சமூக அந்தஸ்துக்கான புகலிடமாகவும் பட்டிமன்றம் மாற்றப்பட்டு வருகிறது. இதனை மேம்போக்காக பார்க்கும் போது சீரிய இலக்கியப்பணி செய்வதாகவே நமக்கு இருக்கும். உண்மையில் சீரிய இலக்கிய முயற்சிகள் யாவும் சிறுகதையாடல்களாகவும், பட்டிமன்ற முயற்சிகள் யாவும் பெருங்கதையாடல்களாகவும் மாற்றப்படுகின்றன.

அதோடு இலக்கியமற்ற கும்பல் கலாசார பண்புகள் வளரவே கம்பன் கழகம் செயற்படுகிறது. இவர்களால் தமிழ் இலக்கியம் ஒன்றும் அகற்சி பெறமுடியாது. இராமாயணத்தை மிகை எளிமைப் படுத்தி மலினப் படுத்திவரும் கைங்கரியத்தையே இவர்களால் தொடர்ந்து செய்ய முடியும்.

இன்று கம்பன் கழகத்தின் ஊடாக நடைபெறுவது யாதெனில், புதுமையை நிராகரிப்பது, நவீனத்துவத்தை கிண்டல் பண்ணுவது, அதிகார ஆதிக்க பிரிவினர்களுக்கு மேடையாக பயன்படுவது, சமூகத்தின் அனைத்து பிற்போக்கு கூறுகளும் மீண்டும் மறுவுற்பத்தி செய்யப்படுவது,. முற்போக்கு புரட்சிகர சிந்தனையாளர்களை சாத்தியமானளவு கிண்டல் பண்ணுவது. (இதற்கு மாஜி முற்போக்கு சக்திகளும் துணை போவதுதான் அவலம்.) இவர்களால் நடைபெறுவது இவைதான்.

மேலும் ஈழத்தமிழர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லையெனும் ஒரு போலி நிலைமையை கொழும்பு நகரில் உருவாக்கவுமே இவர்கள் உதவுகின்றனர். இனி தமிழ், தமிழர் உயிர்ப்புப் பெற்று தலை நிமிர்ந்து வாழ கம்பன் கழக விழாக்களே போதுமானது. அரசும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பட்டிமன்றங்கள் வழக்காடு மன்றங்கள் நிகழ்த்துவதனையே தனது நிகழ்ச்சி நிரல்களில் பிரதானமாக்கினால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**ஆணிமுத்தர்**

6 →

## இலங்கைத்...

முடியும். எனினும், பெண்கள் விழிப்புணர்வை வேண்டி நிற்கும் சூழ்நிலையில், அழகுக் குறிப்புகளும், உணவுக் குறிப்புகளும் அவர்களது அறிவுப் பசிக்கு தீனியாகும் என்பது யதார்த்தமற்றது.

ஒரு புறம் தையல் அலங்காரம், அழகுக்குறிப்புகள், சமையல் குறிப்புகள் என்பன இன்று பெண்களுக்குரியதாக மட்டுமன்றி ஆண்களுக்குரியதாகவும் உள்ளது. பிரபல நட்சத்திர விடுதிகளில் தலைமை சமையற்காரர்களாக பெரும்பாலும் ஆண்களே உள்ளனர். அதேபோல் ஆடை தயாரிப்பு, ஆடை வடிவமைப்பு, தையல் வேலைகளிலும் குறிப்பாக அழகு ஒப்பனையாளர்களாகவும், அழகு சிகிச்சை நிபுணர்களாகவும் ஆண்களே பெரும்பங்காற்றுகின்றனர். அழகுக்குறிப்புகளையும், அழகையும் ஆண்கள் எவ்வளவு தூரம் விரும்புகிறார்கள் என்பதற்கு ஒரு சிறு உதாரணம் உண்டு. லக்ஸ் சவர்க்காரம் பெண்களின் அழகை மெருகேற்றி அழகுப் பதுமைகளாக்குகின்றது என்பதனை, குளிக்கும் பெண்களை ஆதாரம் காட்டி விளம்பரங்கள் எடுக்கப்படுகின்ற போதும் பெரும்பாலான இளைஞர்கள் இச் சவர்க்காரத்தைத்தான் பாவிக்கின்றனர் என ஆதாரபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறான நிலைமையின் கீழ் பெண்களுக்கென மட்டும் இவ்வாறானவற்றை உரித்தாக்குவது நியாயமற்றது.

பொதுவாக இப்பத்திரிகைகளில் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டு வழங்கப்படும் தகவல்கள், செய்திகள் என்பனவற்றை விட பெறுமதியான, பெண்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆக்கங்கள் பல பிற பக்கங்களில் வெளிவருகின்றன. அண்மைய தினக்குரல் வாரவெளியீட்டில், அரைப்பக்கத்தில் பெண்கள் ஆய்வு நிறுவன பணிப்பாளர் செல்வி திருச்சந்திரன் பேட்டி இடம்பெற்றுள்ளது. இது பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட பக்கத்தில் வெளிவராததன் மர்மம் தான் என்ன?
அழகிய பெண்களின் புகைப்படங்களும், கண்கவர் உணவுப் பொருட்களின் வண்ணப்படங்களும் பக்கத்தின் கவனத்தை ஈர்க்கின்ற போதிலும் பெண்களுக்கு எந்த விதத்திலும் இவை நன்மையை பெற்றுத்தரவில்லை எனவும், இது தம்மை வரையறுத்து புறமொதுக்குகின்ற செயலாக உள்ளதெனவும் பல பெண்கள் கருதுகின்றனர். எனவே பெண்களுக்கான பக்கங்களில் பெண்களின் உரிமையை வலியுறுத்தும், விழிப்புணர்வை தரவல்ல தொகுப்புகள், ஆக்கங்கள் தேவை அல்லது பெண்களுக்கான பக்கங்கள் அர்த்தமற்றவை.

அச்சு தொடர்பூடகங்களைப் போன்று ஒத்த நிலைமையை இலத்திரனியல் தொடர்பூடகங்களில் பெருவாரியாகக் காணலாம். பல்வேறு தொலைக்காட்சி நிலையங்களில் பெண்களுக்கென ஒதுக்கப்படும் நிகழ்ச்சிகளில் பெண்களை அழகுப் பதுமைகளாகக் காண்பிப்பதையே பெரும் கடமையாகக் கொள்கின்றனர். அழகு, கவர்ச்சி எனும் மாயைகளை நியாயப்படுத்தும் போக்கினையே இவை கொண்டிருக்கின்றன.

இந்த அடிப்படையில் பெண்கள் அமைப்புக்களால் வெளியிடப்படும் பிரசுரங்கள், வெளியீடுகள் என்பன விதிவிலக்கானவை. பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினால் பிரசுரிக்கப் படும் பிரவாகினி செய்தி மடல், நிவேதினி வெளியீடு, பெண்ணின் குரல் அமைப்பினரின் பெண்ணின் குரல் வெளியீடுகள், முற்போக்குத் தன்மையைப் பிரதிபலிக்கின்ற போதிலும் பரந்த அளவில் அவை பெண்களைச் சென்றடையாதது பெருத்த குறைபாடாகும். இந்த வகையில் பத்திரிகைகளில் பெண்களின் பக்கங்களில் பெண்கள் அமைப்பினரின் தலையீடுகள் அவசியமானவை.


இத்தலையீடு பெண்களுக்கென, பெண்கள் பக்கங்களில் விதிக்கப் பட்டிருக்கும் விடயங்களை மீறும் செயலாக அமைதல் அவசியம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புரிதலும் புரிதலும்...



இன்றோடு ஐந்து நாட்களாகி விட்டன. இவளுடன் பேச முடியவில்லை. உப்புச்சப்பற்ற லௌகீக விடங்கள் பற்றி பட்டும் படாததுமாக ஓரிரு வார்த்தைகள் பேசுவதற்கு மேல் எதையும் பேசமுடியவில்லை. பேச வேண்டும் போல் நிறைய விடயங்கள் மனதுக்குள் கிடந்து துடித்துக் கொண்டிருந்தாலும் ஒரு வெறியோடு அவற்றை அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறேன். நெஞ்சிலே சுமை அதிகரித்துக் கொண்டே போவதான உணர்வு, தாங்க முடியாத உழைச்சல், கடற்கரை ஓரத்தின் ஏதாவதொரு தனித்த அமைதியான இடம், பொங்கிப் பிரவகிக்கும் கடலிலிருந்து வான்னோக்கி, அலைகளால் வீசப்படும் வெண்நுரைகளை வெறித்தபடி இருத்தல், தனிமையான நீண்ட தூரப் பிரயாணம். இவை எதுவும் மனதின் அமைதியை இலேசாக்குவதாக இல்லை. பதிலாக திரும்பத் திரும்ப மனசை உலுக்கி ஒருவகை கழிவிரக்கத்திற்குள்ளாக்கி நைந்து நைந்து நெக்குருகிப்போக வைக்கின்றன. விம்மி வெடிக்காது தகிக்கும் பாரச்சுமை. இரவுகளில் தூக்கம் வராத வெறுமை. தூக்கம் பிடிக்காது உடலை அங்குமிங்குமாகப் புரட்டியபடி செய்யும் முயற்சிகளில் ஏற்படும் சலிப்பு... அருகே இவள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருப்தைப் பார்க்கையில் எரிச்சலும் சகிக்கமுடியாத ஆவேமும் பொங்கி வருகின்றது. எட்டி இழுத்துப் பிடித்து உலுக்கி நாலு வார்த்தை, மனசின் பாரம் கரைந்து போகிறமாதிரி கேட்டுவிடவேணும் போல கைகளும் மனமும் துடிக்கின்றன. ஆனாலும் கைகளைப் பலவந்தமாக தலைக்குக்கீழ் செருகியபடி நித்திரையாகி விட்டதுபோல பாசாங்கு செய்கிறான். ஒரொரு கணம் என்னையே நான் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றேனா என்று தோன்றும். ஆனால் மறுகணமே மனது கொதித்து அந்த எண்ணத்தை தூக்கி வீசிவிடும். புத்தகங்கள் பத்திரிகைகள், ஓய்வைத் தவிர்த்துக் கொள்வதற்காக வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தல், நெஞ்சு நோவெடுக்கும் வரை சிகரட்டை ஊதுதல் என்று எல்லாவற்றையும் செய்து பார்த்தாய் விட்டது. அமைதியாக இருக்க முடியவில்லை.ஆனால் இவளுடன் பேசவும் முடியவில்லை. பேசினால் மட்டும் அமைதி வந்து விடுமா என்ன என்ற கேள்வியும் கூடவே பிறந்து விடுகிறது. பேசப்போய் இன்னும் இன்னும் மோசமாக மனசை ரணமாக்கிக்கொள்வதைத் தவிர வேறென்ன நடந்துவிடப்போகிறது? அறிவு பூர்வமாக விளக்க முடியாத இவனுக்கு மட்டுமே புரிந்து கொள்ள முடிந்த எனது இந்த உணர்வுகட்கு எத்தகைய ஒத்தடத்தைத்தான் இவளுடன் பேசுவதன் மூலம் பெற்றுவிட முடியும்..? அப்படி முடிந்திருந்தால்தான் இப்படி ஒரு நிலையே ஏற்பட்டிருக்காதே.....

குழந்தைகள் இருவரும் தோள் மீது தாவி ஏறிப்புரண்டு விளையாடுகையில் இவன் தன்னையே மறந்து விடுகிறான். அவர்களது மழலையின் அழகில் சொக்கிப்போய் மனது இழகிவிடுகிறது. கரையக் கரைய அழுகிற போது மனசும் உடலும் இலேசாகி வருமே... அதேபோல் ஒரு உணர்வை அது தொற்றவைத்து விடுகிறது. இப்போதெல்லாம் இவனுக்கு அலுவலகத்தில் வேலை முடிகிற போது வீட்டுக்குப் போகத் தோன்றவில்லை. போய்த்தான் என்ன செய்வது? இவளுடன் முன்புபோல் மனம்விட்டும் பேசமுடியவில்லை. மௌனமே நிரந்தர பாஷையாகி ஒரு இறுக்கம் ஏற்பட்டுவிடுகிறது. இவளது மௌனமே இவனையும் மௌனமாக்கி விடுகிறது... 'ஏன் ஒரு மாதிரி இருக்கிறியள்...' ஏன் பேசாமல் இருக்கிறீயள்' என்ற இவளது கேள்விக்கும் ஒரு ஒற்றைப்பார்வை அல்லது ''எனக்குப் பேச பிடிக்கவில்லை. என்ற ஒன்றை வசனம் அல்லது வெறும் மௌனமே இவனது பதிலாக இருக்கிறது... அல்லது அப்படித்தான் முடிகிறது.

இது அவளை இன்னுமின்னும் தூரத்தள்ளி விடுகிறதென்பதும் எனக்குப் புரிகிறது... வெடிப்பை ஒட்டவைப்பதில் இருக்கும் விருப்பை விட, இந்த வெடிப்புப் பற்றிய அவசரங்களால் அவஸ்தைப்படுவதும் அதைப்பற்றியே பேசி, வெடிப்பு மேலும் மேலும் பெரிதாக வருவதைப் பார்த்து ஏங்குவதும் என்ற அறிவார்த்தமாக விளங்கிக் கொள்ள முடியாத ஒரு உணர்வுச் சிக்கல்.....

பெண் பற்றியதும் பெண்மை பற்றியதுமான இவனது அறிவார்ந்த புரிதல்கள் பற்றி இவளுக்கு நன்றாகவே தெரியும். குடும்ப வாழ்க்கையின் சிக்கல்கள், அன்றாட அனுபவங்கள் என்பன ஒவ்வொரு கணமும் இவனது அறிவார்ந்த புரிதல்களுக்குச் சவாலாக அமைந்து விடுகின்றபோதும், அவை பல கசப்பான அனுபவங்களை அந்தக்கணங்களில் ஏற்படுத்தி விடுகின்றன தான் என்ற போதும் அவளது சுதந்திரம் குறித்த விழிப்புணர்வு பற்றியும், அதன் நியாயங்கள் பற்றியும் இவனுக்குப் பெருமிதமே தான். இது அவளுக்கும் தெரிந்தது தான்.

ஒரு வகையில் இது இவனது சுயதிருப்தியால் வந்தபெருமையாகவும் கூட இருக்கலாம். அவள் தனது நண்பர்களுடன் சமதையாக இருந்து ஒருவகைப் புத்திஜீவிதமெருகோடு உரையாடும் அழகைக் காணும் போது, இவனுள் ஏற்படும் பெருமித உணர்வுக்கு ஒருவகையில் இவனது சுயப்பெருமைதான் காரணமோ என்று கூட இவன் யோசிப்பதுண்டு.

இவளுடனான கடந்த பத்தாண்டுகால வாழ்வு அனுபவத்தினூடே இவளுடன் நடத்திய அறிவார்த்தமான உரையாடல்கள் இவனது வழிகாட்டல்கள் என்பன தான் இவளது இன்றைய அறிவு விருத்திக்கான பிரதான காரணம் என்பதால் இவனுக்கு உள்ளூர பெருமிதம் தோன்றியிருக்கக் கூடும். தனது இன்றைய அறிவுத்திரட்சியின் மூலம் இவனே என்பதை இவள் கூட ஒப்புக் கொண்டிருக்கிறாள். ஒரு முறை நள்ளிரவின் போது நுளம்புக்கடியால் ஏற்பட்ட விழிப்பின் பின் அதிகாலை வரை நீண்ட இவர்களது உரையாடல் ஒன்றின் போது இவனை அணைத்தபடி இவள் சொன்னாள்... ''நீங்கள் என்னைச் சந்தித்திருக்காட்டி நான் இப்படி நாலுபேர் பாத்துப் பிரமிக்கிற மாதிரி விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கவே மாட்டேன்... எங்காவது ஒரு மூலையில் யாராவது ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனுக்கு நாக்குக்கு ருசியா அவிச்சுப் போடுபவளாக என்ரை காலம் போயிருக்கும்.....''

இவள் சொன்ன 'அவிச்சுப் போடுற' என்ற வார்த்தையில் தொக்கி நின்ற ஆழமான புரிதலுடன் கூடிய வெறுப்புணர்வை மிகவும் இயல்பான ஆமோதிப்புடன் இவனால் விளங்கிக்கொள்ள முடிந்தது. அந்த வார்த்தைகளினூடு வெளிப்பட்ட காதல் மயக்க உணர்வு இவனது மனசைக் கிளர்த்தியதை இவன் நன்றாகவே உணர்ந்தான்.

இவையெல்லாம் பழைய கதைகள். நினைத்துப் பெருமிதப்படுகிற பழைய கதைகள் என்பதாக இப்போது தோன்றுகிற கதைகள். எமக்கிடையே நிலவுகிற உறவு குறித்த கேள்வி எனக்குள் பொறி தெறித்தாற்போல எழுந்த அன்றைய தினம் இவள் மிகவும் அழகாக இருந்தாள் என்பது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. பளிச்சிடுகின்ற தீட்சண்யமும் காதலும் காலும் அவளது விழிகள் இவனில் குத்திட்டு மருண்டதாகவும் பின் திடீரென மரத்துப் போய்விட்டதாகவும் ஒரு பிரமை இவனுக்கு. அன்று தான் முதன் முதலாக இவளுக்கு இவனுக்கும் இடையில் ஒரு இடைவெளி வளர்ந்திருக்கிறது என்பதை ஒருவகை அதிர்ச்சியோடு இவன் புரிந்து கொண்டான். இவளது சுதந்திரம், விடயங்களைத் தீர்க்கமாக ஆராயும் விதத்தில் இவள் தனக்குள் வளர்த்துக் கொண்டுள்ள திறன், அறிவு என்பவைகள் மனிதர்களை கருத்துக்களின் வெறும் காவிகளாக மட்டும் காணுகின்ற ஒருத்தியாக இவளை மாற்றி விட்டதோ என்ற ஒரு உணர்வினால் இவன் திடுக்கிட்டுப் போனான். இவளோடான இவனது உறவில் மேலோங்கியிருப்பது வெறும் கருத்துலக நபர்களின் சம்பிரதாய ஊடாட்டம் தானா என்ற கேள்வி இவனுள் திடீரென எழுந்தது. காத்திருப்பிரிவு, ஏக்கம், ஆதரவு, நினைவில் தோய்ந்து கிளர்தல் என்ற உணர்வுகள் எல்லாம் ஒவ்வொன்றாக விடைபெற்றுப்போன பின் எஞ்சியுள்ள ஒரு உறவாக இந்த உறவு உருவாகிவிட்டதோ என்ற பயத்தை இவன் முதன்முதலாக ஒரு அதிர்ச்சியுடன் உணர்ந்தான்.

அன்று இவன் வீட்டிற்கு வரும்போது இவள் வீட்டின் முன் ஹோலில் ஒரு நண்பனுடன் விவாதத்தில் ஈடுபட்டிருந்தாள். விவாதத்திற்கான பொருள் என்ன என்பதை விட அந்த விவாதத்தின் தீவிரம் இவனது வருகையை எந்த மதிப்புமில்லாத ஒன்றாக ஆக்கிவிட்டது என்ற உணர்வு சுருக்கென இவனுள் தைத்தது. இவனும் வந்து உரையாடலில் கலந்து கொண்ட போதும், இவனது இருப்பு அங்கு அர்த்தமற்றதாக அவசியப்பட்டதாக உணரப் படவில்லையென்பது போன்ற ஒரு உணர்வு. முதன் முதலாக இவனது தேவை உணரப்படாத ஒரு தளத்தில் தான் வெறும் பிரமைகளுடன் இயங்கிக் கொண்டிருப்பதான ஒரு பொறி இவனுள் தெறித்தது.

இந்தச் சம்பவத்தின் பின் இவனது இருப்புக்கு நியாயம் கூறும் விடயங்களை வலியுறுத்துவனாய் நடந்து கொள்வதை இவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதன் விளைவு இவன் எதிர்பார்த்த பாதையிலிருந்து விலகி எங்கென்று இல்லாத ஒரு திசைநோக்கி ஓடுகிறேனோ என்ற உணர்வை இவனுள் பெரிதாய் கிளர்த்த பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்களால் இவன் உடைந்து போய்க்கொண்டிருப்பதாக உணரத் தொடங்கினான்...

''இப்போதெல்லாம் உனக்கு நான் அவ்வளவு ஒரு அவசியமான ஆளாக இல்லை என்ன? என்மீது இருந்த ஈடுபாடு இப்போதெல்லாம் கிட்டத்தட்ட இல்லாமலே போய்விட்டது என்ன?'' ஒரு நாள் அடக்க முடியாமல் இவன் கேட்டே விட்டான்.

அவளது பதில் வெறும் சிரிப்பாக மட்டுமே இருந்தது. இவனைக் கொல்வதாக அந்தச் சிரிப்பு அமைந்தது. அது ஏளனத்துடனும், 'இதை விளங்கிக்கொள்ள இத்தனை நாள் போயிற்றா?' என்று கூறுவதாகவும் இவனுள் அர்த்தப்படுத்திற்று.

இதையடுத்து பல நீண்ட நேர உடையாடல்கள் விவாதங்கள், விளக்கங்கள் என்று பல இரவுகள் தூங்கா இரவுகளாக நகர்ந்து போய்க் கொண்டிருந்தன.

ஒவ்வொரு சம்பவத்தின் போதும் இவள் தரும் விளக்கங்கள், தர்க்க ரீதியானவையாகவும், அறிவுபூர்வமானவையாகவும் மறுக்க முடியாத விதத்தில் அமைந்திருந்தன. இவனை மௌனமாக்கின. அறிவார்த்தமான நியாயமானதாக அமைந்த இவைகளால் இவனது அறிவை மட்டும் திருப்திப்படுத்த முடிந்தது. ஆனால் இவன் உணர்வுகள்.....

இவனுடனான இவளது உறவில் வெறுமையும் வரட்சியும் படர்வதாக இவன் உணர்ந்தான்.

இவற்றுக்கான எந்த சம்பவங்களையும் நினைத்துப்பார்த்து ஆராய இவனுக்குப பிடிக்கவில்லை. சம்பவங்களும், கருத்துக்களும் முக்கியமற்றவையாக இவனுக்குத் தோன்றி... அவற்றுக்கும் மேலாக எந்தத் தர்க்க நியாயங்களுக்கும் அகப்படாத விதத்தில் இவனுடைய உணர்வு கொந்தளித்தது. ஒரு வகைக்கழிவிரக்கம் இவனுள் நிரந்தரமாகக் குடிபுகுந்து விட்டது.... நெஞ்சு பரபரக்க வரவுக்காக ஏங்கும், எதிர்பார்த்துக் காத்திருக்கும் உணர்வுக்குப் பதிலாக, புரிந்து கொள்ளல் என்ற பெயரால் ஏற்புடமை உருவாகி வரவு பற்றிய காத்திருப்பு உணர்வு மறைந்து போய்விடுவதாக இவனுக்குத் தோன்றியது. ஆதரவு, பரிவு, எல்லாம்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்றாட உதவியாகி விடுகின்றன். மொத்தத்தில் அவள் அவளாகவும், இவன் இவனாகவும் இருக்கிற நிலை உருவாகி விடுகிறது. இருவேறு தனியன்களாகி தமது உணர்வுகள் தமக்குள்ளேயே அமுக்கப்பட்டு விடுகின்றன. இவனது தெரிவுகள் அவளது தெரிவுகளுடன் வேறுபடுகின்ற போதெல்லாம் விட்டுக் கொடுப்பு இல்லாமல் போய் அவளது விருப்பின்படி இயங்க அவ்ளுக்கும் இவனது விருப்பப்படி இயங்க இவனுக்கும் சுதந்திரத்தை அங்கீகரிக்கும் அறிவார்த்தமான மனிதப் பிறவிகளாகவும் ஆகி விடுகின்றதை இவன் கண்டான். ஒருவரது செயல் குறித்து மற்றவருக்குளந்தக்கட்டுப்பாடும் சரி, கடப்பாடும் சரி இல்லாமல் ஆகிவிடுகிறது என்றால் இந்த உறவுக்கு என்ன அர்த்தம்? ஒரே வீட்டில் வாழும் இரு நபர்கள் மட்டும் தானா? உறவுக்கு இதற்கு மேல் எந்த அர்த்தமும் இல்லையா? குழந்தைகளைப்பார்ப்பது, வீட்டுவேலைகளைப் பகிர்வது, தமக்குப் பசியெடுக்கும் போது சாப்பிடுவது.. இவைகளைச் செய்வதற்காக இருவரும் கணவன் மனைவி என்று இருக்கத்தான் வேண்டுமா?

ஒரு கசப்பான தன் சம்பந்தப்பட்ட கேள்வியை நாட்கணக்காக மனசில் போட்டுக் கொண்டிருப்பதில் இருக்கிற சித்திரவதையைப் புரிந்து கொள்ள யாருக்கு முடியும்? 'நம்மிடையேயான உறவுக்கு நாமிருவரும் வழங்குகின்ற பெறுமதி அதைப்பற்றிய எமது புரிதல் என்பவற்றின் அடையாளங்கள் தான் என்ன? அவள் தனது உலகம் தனது சந்தோசம் என்று இயங்கவும், நான் எனது உலகம் எனது சந்தோசம் என்று இயங்கவும் உள்ள பரஸ்பர சுதந்திரத்துக்குப் பெயர் தான் எமது உறவா? இந்த உறவு நிலைக்கு அதற்கு மேல் எந்த அர்த்தமும் இல்லையா...? எனக்கு அப்பாலாக அவளுக்கு ஒரு உலகம் இருப்பதை மறுத்த, நானே அவளது உலகமாக இருக்க வேண்டும் என்ற முட்டாள்தனமான யதார்த்தமான பாரம்பரிய கோட்பாட்டின் அடிப்படையில் நின்று நான் இதைக் கேட்கவில்லை. எம்மிடையே இருந்த காதல் உணர்வின் மெல்லிய இதழ்களைக் கசக்கி விடுகின்றதால் எழும் துன்ப நிலையிலிருந்து விடுபடுகின்ற துடிப்பின் காரணமாகவே இதைக்கேட்கிறேன். இதைவேறு விதமாகப் புரிந்து கொள்ள முடியாதா...? காதல் என்ற சொல்லின் அடையாளங்களே காலவதியாகி விட்டதா.....

வாய்விட்டுச்சிரிக்கவோ அழவோ வேண்டும் போல இருந்தது இவனுக்கு. அறிவு எப்படி ஒரு மனிதனை, அவனது உணர்வுகளைத் தனது தொங்குசதையாக மாற்றிவிடுகிறது என்று நினைக்கையில் இப்படி ஒரு உணர்வு இவனுள் எழுந்தது. கடலோரத்து மணலில் பின்புறமாக கைகளை ஊன்றி கால்களைப் பரத்தி நீட்டி தொடுவானத்தை வெறித்து உட்கார்ந்தான் இவன். மாலை நேரம் சூரியன் தற்கொலை செய்வதாக மிரட்டும் ஒரு குடிகாரனைப் போல கடலுக்குள் குதிப்பதற்கு முயன்று கொண்டிருந்தான். தொடுவானத்தினை சிவப்பாக்கி விட்டிருந்த அவனது நாட்டியம் குறித்து எந்தவித பரபரப்பு மற்றதாக நடக்கப் போகிறதையிட்டு அலட்டிக் கொள்ளாததாய் மௌனமாக இருந்தது. தொடுவானத்தையண்டிய கடல் இவனுள் இந்தக் கேள்விகட்கு முரண்நகையான ஒரு பதில் திடீரென்று கருக்கட்டி வளர்வதாக இவன் உணர்ந்தான்... நான் மட்டும் எப்படி இருந்தேன்? எனது கடந்த காலம் எப்படிக் கழிந்தது? வெறிபிடித்தாற்போல் அறிவுப்பசி பிடித்து நான் மட்டும் ஓடித்திரியவில்லையா?

எனது இன்னொரு இரத்தமும் சதையுமான வாழ்வின் ஆசாபாசங்களிலிருந்து விடுபட்ட வெறும் 'பிறவி'யாகி நான் திரிந்ததில்லையா? இந்த வெறியுடன் பயணம் செய்த நான் பலவற்றை புறங்காலால் உதறிவிட்டு நீண்டதூரம் வந்துவிடவில்லையா? என்னால் உதறப்பட்டவைகள் குறித்து அப்போதெல்லாம் நான் கவலைப்பட்டதுண்டா? இன்று என்னால் உதறப்பட்டவைகள் ஒவ்வொன்றும் தாம் தமக்கென்று உருவாக்கிய உலகில், தமக்குள் நிம்மதியாய், எத்தகைய ஏக்கங்களும் அற்றவையாய், நினைவுடன் பூத்துக் குலுங்கி நிற்க, நான் மட்டும் யாரும் அண்மிக்க முடியாத உயரத்திற்குப்போய் வெறும் தனியனாக நின்று கொண்டிருக்கிறேனா? ஏன் அப்படி இருக்க முடியாது? நானே எனக்கு உருவாக்கிய சிறைக்குள் சிறைப் பட்டிருப்பதாக இது இருக்க முடியாதா?



ஆர்வத்துடன் கரை நோக்கி தவழ்ந்துவரும் அலைகள் கரையை எட்டமுடியாமல் திரும்பிச் செல்வதில் இவன் கண்கள் குத்திட்டுநின்றன. இவனது எதிர்பார்ப்புக்களும் விருப்பங்களும் பெரிதாக இருந்த போது, வியப்பாலும் அதிர்ச்சியாலும் திகைத்துப்போய் நின்றவர்கள், இவனை அண்மிக்க முடியாத ஒருவன் என்று ஒதுங்கிவிட்டவர்கள் எல்லோரும் இவன் முன் தெரிகிறார்கள். அவர்களுக்கேயான அவர்களது உலகத்தில் அவர்கள் திருப்தியுடன் இயங்குகிறார்கள்.... ஆனால், இவனது சின்னச்சின்ன ஆசைகளைக்கூட அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவளுக்கும் கூடத்தான்.... இதை ஆளுகிற விதி என்ன? இவன் எதிர்பார்க்கிற ஒரு அற்பமான எதிர்பார்ப்புக்கூட விளங்கிக் கொள்ளப்படாததை எப்படி எடுப்பது? எப்படி நம்புவது...? இவள் என்னோடு இருந்து உணவருந்த வேண்டும்... என்னோடு கை கோர்த்தபடி இந்த உலகத்தை வலம் வரவேண்டும்... இவையெல்லாம் என்ன பெரிய எதிர்பார்ப்புக்கள்...? ஆனால் இவள்... இவள்... தனது உலகத்தைவிட்டு அப்படி வரமுடியாதவளாய், அதை உருவாக்கி விட்டிருக்கிறாள்.... ஒருக்கால் இவள் கூட என்னிடம் இதைப்போலவெல்லாம் எதிர்பார்த்து கிடைக்காமலே தனக்கென ஒரு உலகை உருவாக்கி விட்டிருக்கக் கூடுமோ....?

இவனுடைய நிறைவேறா விருப்பங்கள் எதிர்பார்ப்புக்களுக்கு தடையாக இருக்கிற ஒவ்வொன்றின் மீதும் இவனுக்குக் கோபம் வருகிறது. இவள் தாயுடன் அன்பாக உரையாடுவது, சகோதரனுடன் சேர்ந்து எங்காவது போவது... அல்லது யாராவது ஒரு நண்பருடன் உரையாடுவது எல்லாமே இவனை ஏளனம் செய்யும் விடயங்களாக இவனுக்குத் தோன்றுகிறது.... இவர்கள் எல்லோரையும் விட இவளது அபிப்பிராயத்தில் தான் தாழ்ந்து போய் விட்டதாக இவனை எண்ண வைக்கிறது.

இவனது உலகமே இவனுக்கு சிறையாக, தனிமை அளிப்பதாக இந்த முழு உலகமுமே இவனுக்கு எதிராக இயங்குவதாக.....

'எனது இந்த உணர்வுகள் கூட எவ்வளவு கொச்சைத்தனமாக விளங்கிக் கொள்ளப் படுகின்றன? இவள் என்னுடன் அருகாக இருப்பது பற்றிய எனது வெறி வெறும் அற்பத்தனமான சந்தேக வெறியாக இனங் காணப்படுவது எவ்வளவு பெரிய துயரம்? இந்தத் துயரத்தை எனது நெஞ்சிலிருந்து கழுவிட இந்தப் 'பெருங்கடலுக்குத்தானும் முடியுமோ என்னவோ? இத்தகைய சந்தர்ப்பங்கள் எல்லாம் எனது சுய அடையாளத்தை நொருக்கி எதையெல்லாம் எனது சிறப்புக்கள் என்று நினைத்தேனோ அவை எல்லாவற்றையும் பொய்மையாக்கி என்னை ஒரு வெறும் அற்பப் புழுவாகச் சிறுமைப்படுத்திவிடுகின்றனவே.....

வாய்விட்டு அழுதும் மாளாத்துயரம் இது...

செக்கோவின் குதிரைக்காரனுக்கு அவனுடைய கவலையை கேட்க ஒரு குதிரையாவது இருந்தது... எனக்கு எனக்கு...?

மூத்தமகள் தோளில் ஏறி உட்கார்ந்தாள். அவளது ஸ்பரிசம் ஏற்படுத்திய சுகத்தில் ஒரு கணம் இவனது கவலைகள் கரைந்து போனதொரு உணர்வு....

'ஒரு ஆய் குடுங்கோ அம்மா, அப்பாவுக்கு' அவளிடம் கேட்டான் இவன்.

''ஏன் அப்பா... உங்களுக்கு என்னிலை ஆசையா?'' அவள் திருப்பி இவனிடம் கேட்டாள். சொன்னதை கேள்வி கேட்காமல் செய்யும் பழக்கமே கிடையாது அவளுக்கு.

''ஓ.. நிறைய..'' இவன் பதில் சொன்னான்.

''பொய்... பொய்...'' அவள் கத்துவதுபோல உரத்துச் சொன்னாள். இவன் இதற்குப்பதில் சொல்ல முதல் அவளே தான் அப்படிச் சொன்னதற்கான காரணத்தையும் சொன்னாள்.

''நீங்கள் என்னை நேற்று 'பாக்குக்கு' கூட்டிக் கொண்டு போகேல்லைத் தானே''

''எனக்கு நேற்று உடம்பு சரியில்லை.. நான் சொன்னேன் தானே.... நாளைக்கு கூட்டிக் கொண்டு போறென் எண்டு''

''இல்லை.. நீங்கள் உப்பிடித்தான் நெடுகவும் சொல்லுவீங்கள்... ஒருநாளும் கூட்டிக் கொண்டு போகமாட்டிங்கள்.... உங்களுக்கும் சுகமில்லாமல் வாறதே.. அப்பாமாருக்கும் காய்ச்சல் வாறதே.. பொய்தானே சொல்லிறிங்கள்....''

இப்போது அவள் தோளைவிட்டு இறங்கி விட்டிருந்தாள்.

ஒரு கணம் சலித்துப்போய்விட்டதாக இவன் உணர்ந்தான். ஒரு முத்தத்தைப் பெற இவ்வளவு பேசவேண்டி இருக்கிறதே என்ற தவிப்பு.... 'எங்கே பிழை இருக்கிறது...? ஏன் தான் இப்படி ஒரு சிக்கல் எனக்கு மட்டும் வருகிறது? எல்லோருமே சந்தேகப்படுகிற மாதிரி... இவளை நான் எங்கெல்லாம் கூட்டிப் போயிருக்கிறேன்... ஆனாலும் இவள்.. இவள்... இப்படித்தான் பேசுகிறாளே... ஏன்... ஏன்...

இவனது மௌனம் அவளைப் பாதித்ததாகத் தெரியவில்லை. அவள் தன் பாட்டிற்கு விளையாடத் தொடங்கிவிட்டாள். ஒரு குழந்தையின் கேள்விக்காக நான் இப்படி அலட்டிக் கொள்ளலாமா என்று தோன்றியது.... 'ஆனால் ஒரு முத்தம் கொடுப்பதற்காக இவ்வளவு கேள்விகளை இவள் கேட்கிறாள் என்றால், அது அவள் குழந்தையாக இருப்பதால் மட்டும்தானா? அல்லது எனக்குத்தான் இப்படி எல்லாமே வித்தியாசமாகத் தெரிகிறதா...?''

நான் எழுந்து நின்றேன். அடிவானத்திலிருந்து மிரட்டிக் கொண்டிருந்த சூரியன் கடலினுள் குதித்தே விட்டான். முழுச் சூழலும் இருளாகி விட்டிருந்தது. கடற்கரையில் உட்கார்ந்திருந்த பலர் எழுந்து போய்விட்டிருந்தார்கள். மகள் மட்டும் உற்சாகமாக மண் கிண்டிக் கொண்டிருந்தாள். அப்பா ஒரு முத்தம் தருமாறு கேட்டார் என்பது அவளுக்கு ஞாபகம் இருப்பதாகவே தெரியவில்லை.

என்னையறியாமலே திரும்பி வீடு நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

'அப்பா' என்று அலறினாள் மகள். திடுக்கிட்டு என்ன மகள் என்று கேட்டேன்.

'என்னை விட்டிட்டுப் போகாதேங்கோப்பா' என்று அழுதபடி ஓடிவந்தாள்.

திடீரென ஏதோ மண்டையில் அசுர வேகத்துடன் தாக்கியதுபோல உணர்ந்தேன். புத்தகங்களும், விவாதங்களும் உணர்த்தாத ஒரு தத்துவமாக அவள் என்மீது தாவியமை அமைந்தது.

தூக்கி அணைத்தபடி கேட்டேன். 'பயந்திட்டீங்களோ?' நெஞ்சுடன் தன்னை இறுக அணைத்தபடி அவள் சொன்னாள்.

'என்னை விட்டிட்டுப்போகப் பாத்தியளே' விம்மி அழத்தொடங்கினாள் அவள்.

'இல்லை, இல்லை' என்று அவள் முதுகைத் தடவி விட்டேன். உடனே சமாதானமாகி விட்டாள். அழுகை அடங்கியது. என்னைத் தவிர்த்துக்கொண்டு கீழே இறங்கினாள்.

'சரி வாங்கோ அப்பா போவோம் என்று முன்னே நடக்கத்தொடங்கினாள்.

நான் நடந்தேன். அவளைத் தொடர்ந்தபடி சிறிது நேர மௌன நடையின் பின் அவள் சொன்னாள்.

நான் நல்லாப் பயந்திட்டன்.... உங்களுக்கு என்னிலை ஆசை இல்லைத் தானே. அதுதானே விட்டிட்டுப் போனனிங்கள்.

அந்தப் பிஞ்சு மனதின் கேள்விகள் என்னை என்னவோ செய்தன. நெஞ்சைப் பிடித்து உலுப்புவது போல... செய்தன. ஓ... எனது உலகம்... எனது உலகம்....

''சொல்லுங்கோ அப்பா ஆசை இல்லைத் தானே''

'இல்லை குஞ்சு.. சரியான ஆசை தான்' சொல்லியபடி அவளைத்தூக்கிய கன்னத்தில் முத்தமிட்டேன்.

'மற்றப்பக்கம்' - மறுகன்னத்தைக் காட்டியபடி கேட்டாள்; கொடுத்தேன்.

'அப்பாவுக்கு' என்று கேட்டேன். கன்னத்தைக் காட்டியபடி

''நான் மாட்டேன்... தாடி குத்தும்' என்றபடி என்பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு இறங்கி முன்னாக ஓடினாள்.

நான் மெல்ல பின் தொடர்ந்தேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் விமர்சனம்

தேசியவாதத்தின் வகைகள் என்ன, அவை நல்லதா கெட்டதா என்ற கேள்விகளும், வாதப்பிரதி வாதங்களும் எமக்கு என்றும் உள்ளன. அதேவேளை தேசியவாதம் நல்லதா கெட்டதா என்ற கேள்வியை முன்வைப்பதே ஓர் அர்த்தமற்றது என்ற ஓர் நிலைப்பாடும் உண்டு. தேசியவாதத்தின் பங்கும், பலா பலன்களும், பயங்கரவாதமும் பற்றிய கோட்பாட்டியல்களும், சொல்லாடல்களும் ஒரு புறமிருக்க தேசியவாத வீச்சின் இறுக்கத்தில் எமது சமூகத்தில் எழுந்த யதார்த்தத்தின் ஒரு கோணத்தைப்பார்ப்பதில் வரலாற்றுத் தவறும் ஏதும் இருக்க முடியாது. கூடவே அவ்வாறான ஓர் பார்வையை வரட்சியான கருத்தியல் மொழிப் பிரயோகத்தினூடாகவே வெளிப்படுத்த வேண்டும் என்ற அவசியமும் இல்லை.


மண், மொழி, மதம், கலாசாரம், தேசியம், கருத்தியல் நிலைப்பாடு, கொள்கை இலட்சியம் போன்ற புனிதங்களுக்கு சரித்திரங்களில் மற்றுமோர் முகம் எப்போதும் இருந்து வந்தது. புனிதங்களின் பெயரால் செய்யப்பட்ட மனித அவலங்களே அந்த முகமாகும். புனிதங்களின் பாவனை நோக்கிலும், அதனால் ஏற்பட்ட வீச்சிலும் எழுந்த இந்த முகம் சமூகத்தின் சமகால சரித்திரத்தில் புதிதான ஒன்றல்ல. இப்புனிதங்களில் எழுந்த சமூக அனர்த்தங்களின் ஒரு முகத்தை குமார் மூர்த்தியின் ''முகம் தேடும் மனிதன்'' மனித நேயத்துடன் காத்திரமாக எடுத்துக்காட்டுகின்றது.

மனித அனுபவங்களும் அவர்கள் அவற்றைப் பார்க்கும் பார்வைகளுக்கும், கோணங்களுக்கும் பல பரிமாணங்கள் இருக்கின்றன. அவற்றை சுதந்திரமாகக் கோர்க்கும் ஆளுமையில் தான் சிருஷ்டிப்பு சக்தியும், ஆழமான படைப்புக்களும் புதிய சமூகப்பிரக்ஞையும் எழுகின்றது. கலைப்படைப்புக்களின் தனித்துவம் இச்சிருஷ்டிப்பு சக்தியின் ஓர் வெளிப்பாடாக வருகின்றது.

அதிகாரத் தேடல் அரசியலின் ஓர் கருவியாக கலைவடிவங்களை போர்க்காலங்களில் பாவிப்பதும் இவற்றைப் படைக்கும் படைப்பாளிகள் சமூகத்தின் மனச்சாட்சியாய் தம்மை வரித்துக் காட்டுவதும், காலா காலம் நடைபெற்றுவரும் விடயமே! இவ்வாறான மனப்பாங்கில் எழுந்த கலைப் படைப்புக்கள் பலவும் காலப் போக்கில் நொண்டியாயின. நெறி கெட்ட போரில் எழுந்த மனித அவலங்களை வெறியற்ற பார்வையில் ஓர் கலை ஆக்கமாக வெளிப்படுத்துவது ஓர் ஆளுமை. இவ்வாறான படைப்புக்கள் மனிதத்தின் முறிவை படைப்பாளியின் தீர்க்க பார்வையினூடு வெளிப்படுத்தி நிற்கும் குமார் மூர்த்தியின் ''முகம் தேடும் மனிதன்'' இப்படிப்பட்ட ஆக்கத்தின் ஒரு செப்பமான வெளிப்பாடே.

''வலுத்தவன் கருத்துக்கு இமைந்து போவது'' (ப.18) எனும் விடயத்தை தமிழ்ச் சமூகத்தில் துப்பாக்கிக் குழல்களும், ரவைகளின் திசைகளுமே தீர்மானித்ததால், கொள்கைகள், கோட்பாட்டு ஆய்வுகள் நிலைப்பாடுகள் போன்ற அனைத்தும் புனித இலட்சிய வேகத்தில் அடிபட்டுப்போயின. துப்பாக்கி என்பது அரசியலின் ஒரு கருவி மட்டுமே என தமிழ்ப்பிரதேசங்களில் அப்பாவித்தனமாக அரசியல் பேசிய வாய்கள் காலப்போக்கில் துப்பாக்கிக் கரங்களால் நிதானமாக மூடப்பட்டன.

''மனிதன் ஓர் அரசியல் பிராணி'' என அரிஸ்டோட்டில் கூறினார். இது ரசனையான ஓர் வசனம். ஏனைய மனிதனை ஏனைய பிராணிகளில் இருந்து மேம்படுத்தி வேறுபடுத்தும் காரணியாக அரசியல் இருப்பது எமக்கு ஒரு வித உயர்வைத் தருகின்றது. ஆயினும் எமக்கும் ஏனைய ஜீவிகளுக்கும் இடையே நகைப்புக்குரிய பல வித்தியாசங்கள் இருக்கின்றன. உதாரணமாக ஏனைய ஜீவராசிகள்மனிதர்கள் போல் தமது நுகர்வுத்தேவைக்கு அதிகமாக ஏனைய ஜீவராசிகளைக்கொல்லும்




பழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. கூடவே பசியற்ற ஏனைய பிராணிகள் அவை அநாவசியமாய் கொல்வதோ, கருத்தியல் முரண்பாட்டில் கொலைப் பட்டியலைத் தயாரித்துத் தட்டுவதோ இல்லை. இனப் படுகொலைகளையும், கால் தெறிக்கும் கண்ணி வெடிகளையும் அவை செய்வதில்லை. உயிர் பிடுங்கும் எறிகுண்டுகளையும், நச்சுவாயுக்களையும், அணுகுண்டுகளையும் அவை தயாரிப்பதும் இல்லை. புறச்சூழ்நிலையை பாரிய அளவில் மாசுபடுத்தி அனைத்து ஜீவராசிகளையும் தற்கொலைப் பாதையில் அவை இட்டுச்செல்வதில்லை.

அரிஸ்டோட்டிலின் கூற்றில் காமம் கொண்டு ''எல்லாமே அரசியல் தான்'' என வசன ரசனையுடன் கூறும் விவகாரம் குமார் மூர்த்தியின் எழுத்தில் இல்லை. அரசியலின் பெயரால் நிர்வாணக்கொலைகளை அவை பூரித்து ஆதரிக்கவும் இல்லை. சொல்லும் விடயத்தை வாசகர்களை அதிர வைத்துச் சொல்லவேண்டும் என வரிந்து கட்டிவரும் வக்கிரமும் ''முகம் தேடும் மனிதன்'' இல் இல்லை. ஒரு விடயத்தை ஆதங்கத்துடன் எளிமையாக வெளிப்படுத்துவது குமார்மூர்த்தியின் எழுத்தாழுமை. தொலைநோக்குள்ள கூடவே சுயவிமர்சனமும், சமூகப்பொறுப்பும் கொண்ட பார்வைகள் அவரின் கதாபாத்திரங்களில் அடிக்கடி நிதானமாகத் தலைநீட்டும்.

திரைப்படங்களுக்கும் நிஜவாழ்க்கைக்கும், விளையாட்டுத் துப்பாக்கிக்கும் நிஜத்துப்பாக்கிக்கும் வித்தியாசம் கண்டு கொள்ள முடியாது குழம்பிய வெகுளிச்சிறுவனின் (மணிவண்ணன் - சின்னத்துப்பாக்கி ப. 37-43) துப்பாக்கி மோகத்தை குமார்மூர்த்தி ஒரு தளத்தில் நகைச்சுவை உணர்வுடனும் மறுதளத்தில் ஆழமான சோக உணர்வுடனும் அவர் வாசகர்களுக்குத் தருகின்றார்.

''அவனது கனவில் தெருவில் எல்லாம் துப்பாக்கி கிடப்பது மாதிரியும், மாடும் ஆடும் அதை ஏறி மிதித்துக் கொண்டு போவது மாதிரியும் நாயும் பூனையும் கடித்து விளையாடுவது மாதிரியும் வரும். அதைப்பார்க்கும் அவனுக்கு தாங்க முடியாத வேதனையாயிருக்கும். அப்பாவோ சற்றும் இரக்கமில்லாமல் கை கொட்டி வேடிக்கை பார்ப்பார். பிறிதொரு கனவில் ஆளுக்கொரு துப்பாக்கி எல்லோரிடமும் இருக்கும். ஆனால் இவனிடம் இருக்காது. எல்லோரும் இந்தா என்று நீட்டுவார்கள். ஆனால் கொடுக்காமல் ஏமாற்றுவார்கள். அவனுக்கு அழுகை அழுகையாக வரும். எது எப்படியோ அந்தத் துப்பாக்கி அவனை நன்றாகவே ஆக்கிரமித்து விட்டிருந்தது. அவன் துப்பாக்கியைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்தால் அவன் அவனையே சந்தேகிக்கும் படியாக ஆகிவிட்டிருந்தது. சர்வமும் அதுதான்''

'முகம் தேடும் மனிதன்'
குமார் மூர்த்தி
காலம் வெளியீடு
கனடா.

> "கலைப்படைப்புக்கள் வெறுமனே அழகியல் செயல்பாடுகள் அல்ல - அது எமக்கும் குரூரமானதும், குரோத உணர்வுள்ளதுமான உலகிற்கும் இடையில் நின்று எம்மைக் காக்கும் விந்தையான ஓர் வடிவமாகும்."
>
> -பிக்காசோ

—நேசன்—

பெரியவர்களின் இலட்சியப்பரப்பில் பூத்த சிறுவனின் துப்பாக்கிக் கனவும், இரண்டு கைகளாலும் சின்னத் துப்பாக்கியைப்பிடித்து குறி பார்க்கும் வாட்டசாட்டமான வாலிபனின் வழவழப்பான சுவரொட்டி வண்ணப்படமும் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் வாழ்க்கை பற்றிய பலவித பிசகு மாயைகளையும், திணிக்கப் பட்ட வன்மப்பார்வைகளையும் தந்ததில் வியப்பில்லை. ''துப்பாக்கிக் குழலிலிருந்து அதிகாரம் பிறக்கின்றது'' என்ற அவல தத்துவம் வெகுளித்தனமாய் அவனையும் வாஞ்சையுடன் ஆக்கிரமித்திருந்தது. ஒடுக்குமுறையை நிரந்தமாக அழிக்கவெனக் கூறி எழுந்த வன்முறை அரசியல் பொதுமக்களை சமூக மௌனிகளாக்கியது. சமூக மதிப்பும் செல்வாக்கும் துப்பாக்கிக்குழலில் இருந்துதான் வளர்கின்றது என்ற மாயை, வன்முறைக் கலாசாரத்தில் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தெரிந்தும் தெரியாமலும் கற்றுக்கொடுக்கப்பட்டது.

''அந்தத் துப்பாக்கியை அவன் கையில் வாங்கியதும், அந்த இரும்பைப்போலவே அவனும் ஒரு கணம் ஜில்லிட்டுப்போனான். கண்கள் பளபளவென்று ஒளியைக்கக்கி மூச்சு விடுவதே ஒரு ஆனந்தமாக தன்னைப் போல் தன்னைச்சுற்றியுள்ள பொருள்கள் அனைத்தும் சந்தோசமாக இருப்பதாக தன்னைப்பார்த்து எல்லாம் பணிந்து வணங்கிக்கொண்டிருப்பதாக, இவர்களெல்லோரையும் விட ஆயிரம் மடங்கு பெரிய பலசாலியாக தான் இருப்பதாகவும் அவன் சிறகடித்தான்.... அந்த சாசுவதமான பொருள் இருந்தால் எந்தப்பெரிய எதிரியும் அடங்கிப் போவான் என்று கண் முன்னே நிரூபணம் ஆகியவுடன் அந்தப் பொருளின்மேல் அவனுக்கு இன்னும் வாஞ்சை கூடியது. அது அவனின் எல்லாமுமே என ஆகிவிட்டதோடு உலகத்தின் எல்லாமுமே அதுவாகி விட்டதாக அவன் நிச்சயித்துக் கொண்டான். (ப.42)

இவ்வாறான பாதிப்புக்கு உள்ளான சிறார்களின் நடத்தை இத்தேசியப் போரின் ஓர் சோகமான பக்கம். துப்பாக்கி மோகவீச்சில் இயக்கத்தில் விரைந்து சேர்ந்த மணிவண்ணன் இறுதியில் இயக்கத்தோழனின் துப்பாக்கி சீறத்தான் வெட்டிய புதைகுழியில் அவலமாய் வீழ்ந்தது வெறுமனே விதியல்ல. மாறாக, ஆயுதவழிமுறையின் உற்சாகத்தில் எழுந்த ஓர் நிதர்சனம்.

துப்பாக்கிக்குழலினூடு உலகின் யதார்த்தத்தைப் பார்க்கப் பழக்கப் பட்ட ஓர் சமூக விளைவிற்கு இன்னுமோர் வடிவம் இருந்தது. துரோகியாக்கப்பட்டவர்களும், மின்கம்ப தண்டனைப் பாரம்பரியமும் வெறுமனே புனிதர்களின் இலட்சிய ஆக்க வளங்களாக மட்டும் அங்கு விளங்கவில்லை. அவை சிறுவர்களின் கற்பனை விளையாட்டாகவும் மாறியிருந்தது. ஆமியைத் திருப்பியடித்த பொடியளின் போர்க்குணத்தைப் பாராட்டிய சிவப்பிரகாசம் (ப.16) அப்போர்க்குணத்தின் மறுபக்கமான சகியா அரசியல் பாரம்பரியத்தின் சமூக முத்திரைகளை அவதானிக்கத் தவறவில்லை.

''சுடுமணல் கூட காலுக்கு உறைக்காது. ஆனால் ஒவ்வொரு மின்கம்பத்தைக்கடக்கும் போதும் கால்கள் தானாக சோர்வடைவது மாதிரி இருக்கும். பார்க்கக்கூடாது என மனது பிடிவாதமாக மறுத்தாலும் கண்கள் கட்டுப்படுத்த முடியாமல் அபாயம் என்ற எழுத்திற்குக் கீழே இலக்கங்களுடன் நேராக நிமிர்ந்து நிற்கும். அப்படித்தான் ஒரு கம்பத்தில் நிமிர்ந்த போது வெள்ளைப்பூனை ஒன்றைக் கட்டி தொங்க விடப்பட்டிருந்தது. பளபளப்பு மாறி அதன் கண்கள் பழுப்பேறியிருந்தன. அதன் கழுத்திலும் ஒரு அட்டை தொங்கவிடப்பட்டிருந்தது. துரோகிகளுக்கு தண்டனை. எலிகளின் சங்கம் என்று குழந்தைத்தனமாக கிறுக்கியிருந்தது. எதிரே சிறுவர்கள் கலகலப்பாக விளையாடிக் கொண்டிருந்தனர். கால்வலிக்க நெடுநேரம் நின்று மாறி மாறிப்பார்த்தார். ஏதோ சொல்ல ஆதங்கப்படவேண்டும் என்று மனது அங்கலாய்த்தது. ஆனால் சொல்ல முடியாத தவிப்பாய், வார்த்தைகள் தெரியாத தவிப்பாய் அகன்று விட்டார். (ப.22)

துவக்குக் கலாசாரத்தால் தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்ட மௌனம் வெறுமனே பயத்தினால் ஏற்பட்ட ஒன்றல்ல. வெட்கமும் அதன் மறுபக்கம் சமூக விழுமியங்களில் ஏற்பட்ட அகோர மாற்றங்களால் தோன்றிய மனத்தொய்வுகள் மனிதரை வெட்கத்துடன், கூசி மௌனமாக்கியது. கல்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றி மூத்த தமிழன் எனக் கவிபாடி தற்பெருமையில் வளர்ந்த தமிழர் நாம். வெறுங்கையுடன் நிற்பவரைக்கொல்வர் மறவரல்லர் எனச் சங்க காலப் பாடல்களை நா சுவைக்கப் பாடியவர் நாம். வீதியில் நின்ற சிறுபையன்களை வெறுங்கையுடன் மட்டுமல்ல தாயுணர்வுடன் ஆமிவர முன் வீடுபோய்ச் சேருங்கள் என்று சொல்ல வந்த சுமதியை (இறுதி அத்தியாயம் ப.58) துப்பாக்கியினால் நெற்றில் குங்குமப்பொட்டிட்ட மைந்தர்களின் மறம் குறித்து வெட்டிகியவர் மௌனமாயினர். தெருவில் விழுந்த மேனியின் பிடரியில் வெறும் குருதி அல்ல. உயிர்காக்கும் அறிவும் கூட, அநாகரீகங்கள், அரசியல் புனிதங்களின் பெயரால் நாகரீகப்படுத்தப் பட்டு விட்டன. இவ் அநாகரீகங்களுக்கும் சங்ககாலப் பாடலில் அடியெடுத்துக் கொடுக்க (அப்படி ஏதும் இருந்தால்) முன்வரும் இலட்சிய வேகம் கூட எம்மிடம் இருந்தன. பெரியவர்களின் இந்த அரசியல் உற்சாகத்தில் சிறுவ சிறுமிகளின் மனங்கள் வன்மமாய் பலவந்தப்படுத்தப்பட்டுப்போனது. பயமறியாக் கன்றுகளாய் அவர்கள் களமேடு புகுந்தனர்.

*தசையிறுக்கி*
*இமை விழித்து*
*களம் புகுந்த*
*குழந்தைக்கு*
*.வெடிபட்ட கலக்கத்தில்....*
*நெஞ்செங்கும்*
*சிகப்பாக*
*தன் உடலே*
*திகைப்பாக*
*கால்பின்னித்*
*தடுமாற*
*மூச்சிறைத்து*
*வாய் அகல*
*தனியாகத்*
*தரை பதுங்க*
*விதியாக*
*அக்கணத்தில் வந்ததெல்லாம்.*

*நாக்கு நுனிக்கும்*
*மார்பில் ஆடிய- அந்த*
*மரணக் குப்பிக்குமான*
*சில அங்குல*
*மனவெளிதான்.*

அடுத்த இதழில் முடியும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



***நீங்கள் உங்கள் நாவல்களுக்கான கருப்பொருள் களைப்பெரும்பாலும் விவிலியத்திலிருந்து எடுத்துக்கொள்வது ஏன்?***

அன்றாடச் சிக்கல்களுடன் அவை ஒத்துப்போகும் போது அவ்வாறு எடுத்துக்கொள்கிறேன். நடப்பு நிகழ்வுகளில் மட்டுமே நான் கருப்பொருள்களை எடுத்துக்கொண்டால், அவற்றின் வீச்செல்லை மிகக்குறைவாகவே இருக்கும். அவை ஓர் உலகளாவிய பரிமாணத்தை எட்டுவதற்கு தவறிவிடும்.புராணங்கள் இன்றைய நிலையினையும், பண்டைக்காலத்தையும் ஒருங்கிணைப்பதால் தான் அவை உலகளாவியனவாக விளங்குகின்றன. மனித இயல்பின் அனைத்து அம்சங்களையும் ஆராய்வதற்கான வாய்ப்புக்களை அவை உண்டாக்குகின்றன. நடப்பு விவகாரங்களில் மட்டுமே மூழ்கிவிடுவீர்களானால், நிகழ்வுகளின் சூழல் உங்களை அடித்துச் சென்றுவிடும், நம்மைச்சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளை மட்டுமே நம் கண்கள் பார்த்துக்கொண்டிந்தால், நமது உள்ளார்ந்த வாழ்வு பாதிக்கப்படுகிறது. இதற்கு மாறாக, புராணங்கள் நம்மைப் பின்னோக்கி அழைத்துச் செல்கின்றன.

***இந்த உலகின் மகளிர் ஆட்சி நடந்தால், இவ்வுலகம் இன்னும் அதிகச் சகிப்புணர்வுடைய இடமாக அமையும் என்பது உங்கள் கருத்து இல்லையா?***

நல்ல கேள்வி. மகளிர் தங்கள் தாய்மையுணர்வுடன் செயற்படுவதால், உடல் சார்ந்த வன்முறையில் இயல்பாக அதிகம் ஈடுபடமாட்டார்கள். ஆனால் அதிகாரத்திற்கு வரும்போது எல்லோருமே ஊழலுக்கு அடிமையாகி விடுகிறார்கள். மகளிரும் இதற்கு விதிவிலக்கல்ல. மகளிர் அதிகாரத்திற்கு வரும்போது தொடர்ந்து அமைதி விரும்பிகளாக இருப்பார்களா? ஆண் -பெண் இருசாரரிடமும் சரிநிகரான அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் மட்டுமே பொது நலன் அமைய முடியும். மனித குலத்தின் ஒரு பகுதியினருக்கு அதிகாரத்தை மறுப்பதன் மூலம் இதைச் செய்ய முடியாது.

***மத்திய கிழக்கு மகளிர் குறித்து நீங்கள் நிறைய அறிந்திருக்கிறீர்கள். அவர்களின் தகு நிலையை எவ்வாறு வரையறுத்துக்கூறுவீர்கள்?***


மத்திய கிழக்கு மகளிர் ஓர் அலையின் ஏற்றவற்றத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு சில சமூக மாற்றங்களின் பயனாளிகளாக அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், பாவம் இந்த மாறுதல்களுக்கேற்ப அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளத்தொடங்கியபோது, சமூகத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லும் ஓர் எதிர்மறைப் போக்கு தோன்றி விடுகிறது. மத்திய கிழக்கு நாடுகளில் சிலவகைச் சுதந்திரங்கள் வந்தன. ஆனால் அவற்றை அடிப்படைவாத சீர்த்திருத்த எதிர்ப்பு அலை அடித்துச் சென்று விட்டது. என் இளம் வயதில் உலகம் ஒரு நேர் கோட்டில் திடமாக முன்னேறி வருகிறது எனக்கருதினேன். ஆனால் மெதுவான சரிவுகளும், எதிர்த்திசைத் திருப்பங்களும் இருக்கின்றன என்பதைப் பின்னர் கண்டு கொண்டேன். இந்த வகையான வெறுப்பு வேதாந்த இயங்களுக்கு மனிதரின் தலைவிதி உட்பட்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். இதனால் எதிர்காலத்தை முன்னேற்றத்தை நோக்கி நாம் பார்க்கலாகாது என்று கூறவில்லை. எடுத்துக்காட்டாக, ''மணலில் காலடிகள்'' என்ற என்நாவல், இந்தச் சுழற்சிகளுக்கு அடிப்படையான உள்ளார்ந்த அச்சங்களையும், நம்பிக்கைகளையும், பின்னடைவுகளையும் இறைமையில் மற்றும் கோட்பாட்டுப் போராட்டங்களையும் சித்திரிக்கிறது. சமயம் நம்மை மாண்புடையவர்களாகச் செய்யவேண்டும். நம்மை நம்மிடமிருந்து வெளிக்கொணர வேண்டும். நம்மை இன்னும் அதிக மனிதநேயமுடையவர்களாக ஆக்க வேண்டும். ஆனால், இதற்கு மாறாக, அது மக்களிடையே பிரிவினைச் சுவர்களை எழுப்புகிறது.

***நீங்கள் எப்போதுமே கோட்பாடுகளிலிருந்தும், மரபுகளிலிருந்தும் விலகியே இருந்து வருகிறீர்கள் அல்லவா?***

ஆமாம்! இயன்றவரை விலகியே இருக்கிறேன். சுதந்திரம் என்னும் சொல்லின் அடித்தளத்தில் என் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருக்கிறேன். என்னை யாரும் முன்னடத்திச் செல்ல நான் விரும்பவில்லை. ஆனால், இதற்கு இடையறாத விழிப்புணர்வு தேவை. ஏனென்றால் வாழ்க்கையில் நாம் அறியாத எத்தனையே வீழ்த்துப் பொறிகள் நிறைந்திருக்கின்றன. மரபு, கண்மூடித்தனமான பேராசை, வயது, தன்னைத்தானே பெரிய ஆளாக நினைத்துக்கொள்தல் போன்றவை இந்தப்பொறிகளில் சில. எல்லாவகையான முத்திரைகளையும் நான் ஒதுக்கி விடுகிறேன். என் பிறப்பு பண்பாடு அடிப்படையில் என்னை

***ஆண்ட்ரோ ஷேடிட் :***

*லெபனானில் பிறந்த கவிஞர். "தேர்ந்தெடுத்த கவிதைகள் "(1996), "பன்முகக் குழந்தை "(1995), "ஆழங்காணா உறக்கத்திலிருந்து " (1987) உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பல்வேறு பண்பாடுகளின் சங்கமத்தில் நிற்கும் இவர், இன்றைய உலகின் நெருக்கடிகளையும், பிளவுகளையும் கூர்ந்து நோக்கி வருபவர். மார்ட்டின் லேக்காவுக்கு அளித்துள்ள அந்தப் பேட்டியில் சுதந்திரத்தின் மீது தமக்குள்ள ஆழ்ந்த நம்பிக்கையை நேரடியாகவும் எளிமையாகவும் விளக்குகிறார்.*



எழுதுவதன் மூலம் நமது உடலையும்,உணர்வையும் ஒருங்கிணைக்கிறோம்.கவிதை என்பது ஒரு காதல் செய்கை: காதல் நமக்கு அகத்தூண்டல் அளிக்கிறது.இது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வெறுங்காதல் அன்று. இது உலகளாவிய காதல்.

வகைப்படுத்துவதற்கும் நான் இடம்கொடுப்பதில்லை. ஒருவருக்கு முதியவர் அல்லது இளைஞர் என்ற முத்திரையைக் குத்துகிறது. வயது, குருதி, பாலினம், மண் ஆகியவை மற்ற முத்திரைகள். ஒருவரை வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட இடத்துடன் கட்டிப்போடும் எதனையும் நான் வெறுக்கிறேன். இதைவிடப் பெரிதான ஓர் பெரிதான இயல்பு நம்மிடம் உள்ளது. ஒரு வகையான தீப்பிழம்பு. ஓர் உள்ளார்ந்த சுதந்திரம். அதனை வரையறுத்துக் கூற இயலாது. இந்த வரையறுக்க முடியாத பண்பினைத்தான் இடையறாது கவனிக்க வேண்டும். இதற்கு வேறொரு பெயர் சூட்டவேண்டும். இலக்கிய வடிவங்களை அனைத்திலும் நான் மிகவும் விரும்பும் கவிதை வாயிலாக இதை ஆராயவே நான் முயன்று வருகின்றேன்.

***நகருக்கும் பாலைவனத்திற்கும் இடையில் அடிக்கடி வந்துபோவது உங்கள் நாவல்களில் அடிக்கடிக்காணப்படும் கருப்பொருளாக உள்ளது அது ஏன்?***

எனது கதை மாந்தர்கள் தங்கள் உள்ளுணர்வின் உந்துதலினால் செய்ய நேரிடும் ஒரு முடிவுற்ற நிகழ்வு. அது என்னைப்பொறுத்தவரையில் நகரங்கள் என்றால் சுதந்திரம் என்று பொருள். மக்கள் தங்களிடமிருந்தும், தங்கள் பின்னணிகளிலிருந்தும் தப்பிச் செல்லும் இடங்கள் அவை. நகர வாழ்க்கை, மக்களைத் தங்களுடனேயே கட்டிப்போட்டுவிடாமல்,மற்றவர்களுடன் கலந்து பழகுவதற்கு அனுமதிக்கிறது. நான் ஒரு கிராமத்தில் வாழந்தால் நான் அந்த இடத்தைச் சேர்ந்தவள் என்ற உணர்வு எனக்கு ஏற்படும். நகர வாழ்வின் தனிமை எனக்கு அளிக்கும் இந்த தன் விடுவிப்பு உணர்வினை நான் அனுபவிக்க முடியாது. நகர வாழ்க்கை நம்மை விரிவடையச் செய்கிறது. சிலநிமிடங்களுக்குள் நம்மை மற்றவர்களுடன் கலந்திடச் செய்கிறது. கூட்டத்திற்கிடையே அவர்களுடன் நாம் பேச இயல்விக்கிறது. நகரத்தில் எவ்விதத் தொந்தரவுமின்றி நாம் நடக்கலாம். எங்கு நோக்கினும் கவிதையைக் காணலாம். நீங்கள் சற்று நின்று கவனித்திட வேண்டும்.

***பாலைவனம் பற்றி என்ன சொல்கிறீர்கள்?***

நீங்கள் ஒரு வகைத்தொல்லைகளை அனுபவித்த பிறகு ஒரு புதிய வாழ்க்கை தொடங்குவதற்கு ஏற்ற இடம் பாலைவனம். அது நிலைமைகளை ஒருகிணைப்பதற்கான ஓர் இடம். தியானத்திற்கும், எளிமைக்கும் பொருத்தமான இடம். அங்கு உங்களுக்கு காவலர்கள் தேவையில்லை. பாலை வாழ்க்கை ஒரு வகை மெஞ்ஞானப்பயிற்சி சகிப்புணர்வின் இருப்பிடம். ஒருவகை வடிகட்டி என்று கதை மாந்தர்கள் தங்கள் அறவியல் காயங்களுக்கு மருந்திடுவதற்காகப் பாலைவனம் செல்கிறார்கள். எடுத்துக்காட்டாக ''லே மார்ச்சஸ் டி சாபிள்'' என்ற என் நாவலில் வரும் கதாநாயகி அனாஸ்டாசியா, பாலைவனத்தில் இந்தத்தொல்லையிலிருந்து விடுபடுவது பற்றியே சிந்திக்கிறாள். பாலையை தாண்டியதும் அவள் தூய்மைப்பெற்று, வலுவடைகிறாள். ஆனால் பாலைவனத்தை மீண்டும் நகரத்திற்கு எடுத்துச் செல்லாவிட்டால், பாலைவனத்தின் போதனை வீணாகி விடும். பாலைவனத்திற்கு பிறகு ஒருவர் மனித குலத்திற்கு திரும்பவேண்டும். ஒருவருக்குள்ளேயே இருக்கும் பாலைவனத்தின் குரலுக்கும் செவி சாய்ப்பதும் முக்கியமானதாகும். இது மரண பயத்தை நீக்குகிறது. மரணம் இன்றியமையாத ஒரு தோழன் என்று அதனை நாள்தோறும் எதிர்நோக்க உதவுகிறது. இதனால் மரணத்தையும் நாம் நம் வசப்படுத்தலாம். மரணம் வரும்போது அதனை நாம் நம் வசப்படுத்தலாம். மரணம் வரும்போது அதனை நாம் வரவேற்கலாம். மிக இளம் வயதிலேயே ஒருவர் மரணம் பற்றிச் சிந்திப்பாரானால் அவரால் வாழ்க்கையைப்பார்க்க முடியாது. மரணம் உறுதியானது. மரணம் மட்டுமே உறுதியானது. அதன்பின் வருவது யாருக்கும் தெரியாது.

***ஒரு தொடர்பாட்டு வேட்கையினை உங்கள் படைப்பு புலப்படுத்துகிறதா?***

எனது படைப்பு இந்த உலகில் முற்போக்கானது. அது இப்பிறவிக்குப்பிந்திய உலகம் பற்றியது. அன்று. நமது வாழ்வின் இந்தப்பக்கத்தில் மட்டுமே நான் அக்கறை காட்டுகின்றேன். ''நாம் எங்கிருந்து வந்தோம், எங்கே செல்கிறோம்?'' என்ற கேள்விகளை நாம் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். எந்தத் தத்துவ அறிஞரும், எந்த விஞ்ஞானியும், எந்தக் கவிஞரும் இந்த கேள்விகளுக்கு மனநிறைவளிக்கும் பதிலைச் சொல்லவில்லை. நான் மூலக்கூறுகளின் இணைப்புமூலம் ஒரு மனிதப் பிறவியாக இருந்து வருவது கண்டு அன்றாடம் வியப்படைகிறேன். அழகு, ஒப்பனை, தோற்றம் பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை. இந்த மனிதத் தொழிற்சாலை, தன்னுள் அடக்கியுள்ள எல்லா வகை எந்திரச் செயல்முறைகளுடனும் எவ்வாறு உருப்பெற்றது என்பது எனக்கு வியப்பளிக்கிறது. இந்த விசித்திரமான புதிர் எனக்குப்போதும். எனவே இம்மைக்கு அப்பாற்பட்ட இப்பிறவிக்குப் பிற்பட்ட வாழ்க்கை பற்றிய புதிர்களை ஊடுருவிப்பார்க்க நான் முயல்வதில்லை.

***உங்களுடைய வாழ்க்கை எழுத்தைச் சுற்றித்தான் உருவாக்கப்பட்டிருக்கிறதா?***

என்னைப்பொறுத்தவரையில் வாழ்க்கையும், எழுத்தும் இணைபிரியாதவை. எழுத்து வாழ்க்கையை வளமாக்குகிறது. ஆனால், நான் இடைவிடாது எழுதும் எந்திரம் அன்று. நான் சிறிது காலம் எழுதாமலும் இருக்க முடியும். எடுத்துக் காட்டாக, ஒரு நூலுக்கான கரு உருவாகும் காலத்தில் நிறைய சிந்திக்க வேண்டியிருக்கிறது. பெருமளவு கற்பனை செய்ய வேண்டியிருக்கிறது. என்னுள் ஏதோவொன்று உருப்பெறுகிறது. அதன் போக்கினைப் பேனா காகிதத்தில் எழுதுகிறது. எனினும், எழுதும் வேட்கை என்னை விட்டு ஒருபோதும் நீங்குவதில்லை. அது எப்போதும் என்னுள் சுருண்டு கிடக்கிறது. சிறிது காலத்திற்கு பிறகு எழுத்து எதுவும் வெளிவரவில்லையென்றால், எனக்கு மனக்கவலை உண்டாகிறது. ஏனென்றால், என் வாழ்க்கை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எனக்கு எழுதுவது காதல் புரிவது போன்றது. காதல் வாழ்க்கையை விரிவாக்குகிறது. உன்னதமாக்குகிறது. அது வாழ்க்கைக்கு ஒளிரும் பதற்றத்தைக் கொடுக்கிறது. அது இந்த உள்ளார்ந்த துடிதுடிப்பில் என்னை வைக்கிறது. இந்த வேட்கையினை நான் என் ஆழ்மனதில் உணர்கிறேன். இந்த வேட்கையில்லாமல், வெறும் உலகாயத வாழ்வு முழுமை பெறுவதில்லை.

***எழுத்தின் ஒரு பகுதி என நீங்கள் வருணிக்கும் இந்தக்காதல் தன்னலமல்லவா?***

ஓர் அன்னை தெரசாவின் அல்லது ஒரு மருத்துவரின் பணியுடன் ஏழைகளின் அவலங்களை நீக்குகிற அல்லது உடல் நோயைக் குணப்படுத்துகிற பணியுடன் ஒப்பிடும் போது, எழுத்துப்பணி சில சமயம் அற்பமானதாகவும், எளிமையானதாகவும் தோன்றாலாம். ஆனால், ஃபிரெஞ்சுத்தத்துவ அறிஞர் காஸ்டோன் பாஷலார்ட் எழுதியதுபோல், ''நாம் மெய்மையாகவும், பொய்மையாகவும்'' இருக்கிறோம்; மெய்மை, பொய்மை இரண்டையும் நாம் ஒருங்கிணைக்காவிட்டால் நாம் முழுமை பெறமாட்டோம். அதனால் நாம் அதிர்ச்சியுற்றவர்களாகி விடுவோம். எழுதுவதன் மூலம் நமது உடலையும், உணர்வையும் ஒருங்கிணைக்கிறோம். கவிதை என்பது ஒரு காதல் செய்கை; காதல் நமக்கு அகத்தூண்டல் அளிக்கிறது. இது ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கு மிடையிலான வெறுங்காதல் அன்று. இது உலகளாவிய காதல்.

*தமிழில்: இரா நடராசன்*
*நன்றி:யுனெஸ்கோ கூரியர்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நாசமறுப்பானுக்கு ஒரு எதிர்வினை

## தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு:

# உண்மையை விட உயர்ந்த மதம் வேறு ஒன்றும் கிடையாது!

**சாந்தி சச்சிதானந்தம்**


சரிநிகர் ஜன. 29 - பெப்.11 இதழ் கண்டேன். வெற்றி ய்ாருக்கு? என்ற தலைப்பின் கீழ் தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு தீர்க்கதரிசனம் அற்ற ஒரு மோசமான நடவடிக்கை என்று குறிப்பிட்டு, வணக்கஸ்தலங்கள் பல லட்ச மக்களின் நம்பிக்கையாக இருப்பதை மறப்பவர்கள் அவற்றின் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள் அந்த மக்கள் மீதான தாக்குதல் களாகவே கொள்ளப்படும் என நாசமறுப்பான் தெரிவித்த கருத்துக் களுக்கு பதிலிறுக்க விரும்புகின்றேன்.

நாசமறுப்பானின் கண்டனம்; நாம் அன்றாடம் காணும் அரசியல்வாதி கள், பெரியமனிதர்கள், (ஜனநாயக) தாராளவாதிகள் ஆகியோர் வெளி யிடும் மாமூல் கண்டனங்களில் ஒன் றல்ல என்று நம்புகின்றேன். மாறாக, ஒரு நடவடிக்கையின் தர்ம அதர்மங் க்ளைக்கூறு போட விளைந்ததனால் எழுந்த கருத்து என்று நான் நினைப்பத னால் தான் இந்த உரையாடலில் இறங்குகிறேன்.

இந்த இடத்தில் சர்வ மதங்களின் தத்துவங்களையும் பகுப்பாய்ந்து உணரும் நோக்குடன் ஸ்தாபிக்கப் பட்ட பிரம்ம ஞான சங்கத்தின் இலட் சிய சுலோகம் தான் என் நினைவுக்கு வருகின்றது. 'உண்மையை விட உயர்ந்த மதம் வேறொன்றும் கிடை யாது' என்பதே அது. சாதாரண மாகவே நாம் மதங்கள் தொடர்பான விடயங்களில் காலை லேசில் நுழைத்து கருத்துக்கள் கூற மாட் டோம். கூச்சத்தைக் கையாண்டு விடுவோம். மதங்கள் மக்களின் உணர்வுகளோடு ஊறியது என்பதை விடவும், எல்லோரும் தத்தமது மத சம்பிரதாயங்களை, அவை சரியோ பிழையோ பாதுகாக்க முற்படும் தற்காப்பு முயற்சியின் விளைவே அது. கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு அடுத்தவன் வீட்டுக்குக் கல்லெறியப்படாதே. இதன் விளை வாக, உண்மை எங்கோ புதையுண்டு போக வெற்று நம்பிக்கைகளைச் சுமந்து கொண்டு நாம் திரியவேண்டி நேரிடுகிறது. இவற்றிலிருந்து நாம் விடுபடுவது கூட விடுதலைப்போராட் டமே.

தலதா மாளிகைத் தாக்குதல் விளங் கிக்கொள்ளக் கூடியதொன்றல்ல என்கிறார் நாசமறுப்பான். யுத்தம் என்றால் அப்படித்தான். அதற்காக, வடகிழக்கில் முன்னூறு வணக்கஸ் தலங்கள் மற்றும் மாவீரர் துயிலும் இல்லங்கள் போன்றன ஸ்ரீலங்கா இராணுவத்தின் குண்டுத்தாக்குதலில் அழிந்தனவாதலால் ஸ்ரீ தலதா எந்த மூலைக்கு என்பதல்ல கருத்து. யுத்தம் என்பது களத்தில் நடத்தப்படும் அரசியல் என்பது உண்மையானால், பழிவாங்கும் இராணுவ நடவடிக் கைகள் என்றுமே மோசமான அரசி யல் தந்திரோபாய வகையினையே சாரும் என்பது என்னுடைய உறுதியான கருத்து.

பௌத்த சிங்களப்பேரினவாதத்தின் சின்னமாக உபயோகிக்கப்படும் ஒரு தலம். அதன் பாதுகாவலர்களாகவும், நாட்டின் முக்கிய சமயத் தலைவர்க ளாகவும் இருப்பவர்களே இந்நாட்டில் பௌத்த அரசின் உருவாக்கத்தினதும், ஊன்றலினதும் சூத்திரதாரிகளாக இருந்திருக்கின்றனர். அஹிம்சையின் காவலர்களாக இருக்க வேண்டிய இவர்களே தமிழ் மக்களின் போராட் டத்தினை நசுக்கவும், அப்போராட் டத்தின் தலைமையினைக் கொன்றொ ழிக்கவும் அரசினை ஏவி விடும் எமகிங்கரர்களாக மாறியுள்ளனர். உன்னை அழித்தொழிக்க நான் இயங்குவேன். ஆனால் நீ என்னைத் தொட முடியாது எனக் கதறினால் எங்கே ஐயா நியாயம்? அரசியலா னது ஆயுதங்கள் கொண்டு மோதும் உருவினை எடுத்தபின், அந்த அரசியலுடன் சமய நலன்கள் ஒன்றறக் கலந்தால், வணக்க ஸ்தலங்களும் போர்க்களங்களாவது இயற்கையே. இப்படியெல்லாம் இருப்பினும் கூட, எனது கணிப்பில் தலதா குண்டு வெடிப்பிற்கு இவையல்ல கராணங் கள். உறவிழந்து, வீடிழந்து, சொத்து சுகங்கள் இழந்து கல்வி இழந்து, தொழில் இழந்து, தன் சொந்த பூமியில் விரும்பிய வகையில் நடமாடும் உரிமை இழந்து இந்நாட்டில் ஒரு சாரார் உழல, அவர்களின் சமூகங் களை எந்தவிதத்திலும் பிரதிநிதித்து வப்படுத்தாத ஒரு இடத்தில் சுதந்தி ரம்?! பெற்ற ஐம்பதாவது வருட நிறைவை இவ்வளவு ஆடம்பரமாகக் கொண்டாட முனைந்ததே இந்த அரசு. இதைத்தான் காரணமாகக் காண்கி றேன். 'கண்டி குவின்ஸ் ஹோட்ட லையோ, வெறெந்த இடத்தையோ அடித்திருக்கலாம். ஏன் தலதாவை அடிச்சான்கள்' என்று புலம்பினார் நண்பரொருவர். 'அப்படியானால் குவின்ஸ் ஹோட்டலில் உங்கள் சுதந்திரத்தினத்தைக் கொண்டாடி



யிருக்கலாமே. ஏன் தலதாவில் கொண் டாட வெளிக்கிட்டீர்கள்?' என்று கேட்டேன் அவர் மௌனமானார். ஏன் தலதா மாளிகை சுதந்திரத்தின் சின்னமானது? மதம் அரசியலாக ஏன் உருமாறியது! அந்த எண்கோண மண்டபத்தில் நின்று ஒரு பௌத்த சிங்களத் தலைவர் தனது சுதந்திர (?) தின உரையை வழங்குவாரெனில், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க நினைப்ப வர்கள் பேராதனைப் பூங்காவிலேயா கொண்டு போய்க்குண்டை வெடிக்க வைப்பார்கள்?

இந்தச் சம்பவத்தை விவரிப்பதில் கொழும்புப் பத்திரிகைகள் நிகழ்த்திய அட்டகாசம், அப்பப்பா. பாரம்பரிய மாகவே புத்தரினது புனித தந்தம் வைத்திருப்பவரின் கையில் தான் ஆட்சிப் பொறுப்பு அளிக்கப்பட்டது என்றும், இதற்குப் பங்கம் விளைவித் திருந்தால் நாடே எரிந்திருக்கும் என்றும் வரலாறு கூறும் சாக்கில் இன்னோரன்ன வகையில் அப்பட்ட மான நிலப்பிரபுத்துவக் கோட்பாடு களை அள்ளித் தூவின. ஒரு முக்கிய மான தேரர் புனித தந்தத்தைக் காப் பாற்றக்கூடியவர்கள் தான் இலங்கையை ஆட்சி செய்யத் தகுந்த வர்கள் என்று சூடாகக் கூறியதாகவும் ஒரு மூலையில் தரப்பட்டது. நாங்கள் சர்வதேச முதல் கொக்கிபோட்டு இணைத்திருக்கும் கணணி தொழில் நுட்பம் வலைப்பின்னல் போட்டி ருக்கும், இருபத்தொராம் நூற்றாண் டின் விளிம்பிலேயா வாழ்கின்றோம்? இல்லை ஸ்ரீ இராஜசிங்கனின் பதினெட்டாம் நூற்றாண்டுக் கண்டி இராச்சியத்திலேயா? இதற்காகத் தானா 1989ல் ஜே.வி.பி. இயக்கம் தானும் கூடத் தலதாவைத் தாக்க முயற்சி செய்தது? அன்று நந்தனார் பணிவுடன் கோயிலுக்குள் நுழைய அனுமதி கோரிக் கொண்டிராது. சிதம்பரம் கோயிலையும் அதைத் தாங்கி நின்ற பிராமண சாதித் திமிரையும் துவம்சம் செய்திருந் தாரெனில் இன்று தலித்துகள் என நாம் தூக்கிப் போட்டுக்கதைக்க வேண்டிய தேவை இருந்திருக்காதே. அப்படி அவர் செய்திருந்தால், நாம் நாசமறுப் பான் செய்தது போல சைவ மக்களின் நம்பிக்கையினைத் தாக்கி விட்டார் என ஓலமிட்டிருப்போமா?

நாங்கள் பிரபாகரனில் கொஞ்சமா வது மரியாதை வைத்திருந்தோம். இது எல்லாவற்றையும் விடக்கொடூரமான செயல். அந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் தீர்ந்து விட்டது. இனி இவர்களோடு பேச்சுவார்த்தையே கிடையாது. யுத்தம் தான் பதில்' என்று பலர் சூளுரைத்ததாகவும் கேட்டேன். வட- கிழக்கின் வணக்கஸ்தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல்களை விடுங்கள், அது விமானமோட்டியின் மயிரிழைத்' தவறுகளினால் ஏற்பட்டிருக்கலாம். எம்து மண்ணின் இளஞ்சமுதாயம் மரியாதை செலுத்தப்பட்டு அடக்கஞ் செய்யப்பட்ட புண்ணிய பூமியைக் குடைந்தெடுத்ததை விடுங்கள், டோசர்களுடன் வரும் இராணுவ வீரர்கள் நடந்து வந்த சூட்டதில் செய்தார்கள் என்று கொள்வோம். வைச மக்களால் பூசிக்கப்படுகின்ற வெருகல் முருகன் கோயில், திருக்கே தீஸ்வரம் கோயில்களில் இராணுவம் குடிகொண்டதே. பாரிய சேதங்களை ஏற்படுத்தியதே. இன்றும் திருகோ ணேஸ்வரரைத் தரிசிக்க நாம் பாஸ் எடுத்தால்தான் உண்டே. இவையும் கொடூரமில்லையா? வெருகல் கோயில் சன்னிதானத்தில் இராணுவ வீரர்கள் பூட்ஸ் கால்களால் நடந்து திரிந்து கோழியிறைச்சி விருந்து பரிமாறும்பொழுது எனக்கு மனம் துணுக்குற்றதே தவிர ஓடி வந்து அரசியல்வாதியின் காருக்குக்கல் லெறிந்து இனி இவர்களுடன் பேச்சுவார்த்தையே கிடையாது என சூளுரைக்கத் தோன்றவில்லை. இதே கதியினை தலதாவுக்கு தமிழ் இராணுவம் ஏற்படுத்தியிருந்தால்...? தலதா மாளிகை நானூறு வருட வரலாறு. திருக்கேதீஸ்வரம் ஆயிரத்து நானூறு வருட வரலாறு. (தலதாவும் திருக்கேதீஸ்வரமும் இலங்கை மக்களின் பொதுப் பாரம்பரியங்களே. நாங்கள் இவற்றை அவ்வாறு கருதாதது இன்னொரு பிரச்சினை.) யுத்தம் என்றால் அப்படித்தான். எங்களுடைய நம்பிக்கையைக் களங்கப்படுத்தி விட்டார்கள் எனக்கூக்குரல் இடவும் கூட அரசியல் அதிகாரம் வேண்டும். அந்த அதிகாரம் இல்லாவிடில், தமது மத நம்பிக்கையைப்பற்றி மக்கள் கதைத் துக் கொண்டிருக்க மாட்டார்கள். யுத்தம் என்றால் அப்படித்தான் என்று எல்லோரும் பூரணமாக விளங்கிக் கொள்வார்கள்.

நான் மேலே மேற்கோள் காட்டிய பொது மக்கள் கருத்துக்கள் எல்லா வற்றுக்கும் மகுடம் வைத்தாற் போன்று தெரிவிக்கப்பட்ட இன்னொரு கருத்தினை இனித்தான் கூறப்போகின்றேன். 'தலதாவில் சுதந்திர தினத்தைக்கொண்டாடுவது பொருத்தமானதே. ஆனால், அரசு இன்னும் கூடிய பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டும்' என்றும் பலர் தெரிவித்திருந்தார்களாம்! ஏற்கெனவே தலதா மாளிகைக்குச் செல்லும் பக்தர்கள் கொண்டு போகும் பூக்குடலையை துப்பாக்கி முனையி னால் கிளறி விட்டுத்தான் பாது காவலர்கள் உள்ளே விடுகின்றனராம். இதற்கு மேலும் அரண்கள் போடு வதில் பௌத்தர்களே உங்களுக்கு ஆட்சேபனை இல்லையா? அஹிம் சையே உருவான புத்தபிரானைத் தரிசிக்கப் போகும்போது தடைகள், விசாரணைகள், இராணுவச் சிப்பாய் சோதனைகள் போன்றவை இன்றி அமைதியாகச் செல்லும் சுதந்திரத் தினை நான் மதிக்கின்றேன், வேண்டு கின்றேன். உங்களுக்கு அது தேவை யில்லையா? இப்படி தங்கள் சுதந்திரத் தினை தாமே கவிழ்த்து தாரை வார்க்கத் தயாராக இருப்பவர்கள் எவ்வாறு மற்றவர்களுடைய சுதந்திரத் தினை மதிக்கப்போகின்றார்கள்? சீ, நான் நிம்மதியாக சுவாமி தரிசனம் செய்ய வேண்டும். ஆதலால் யுத்தத்தை உடனடியாக நிறுத்து என்று எப்படிக்கோருவார்கள்? இந்தக்கணத் தில் நான் பொறுமையை தொலைத்து விட்டுத்தான் கேட்கின்றேன். சிங்கள மக்கள் எப்பொழுதுதான் இந்த சிறுபிள்ளைத்தனத்தை கைவிட்டு வளரப் போகின்றார்கள்?


மனிதர்கள் எல்லோரும் ஒன்று என்றி ருக்க இயேசுநாதர் ஏன் 'ஏழைகள் பாக்கியவான்கள், அவர்கள் இரட் சிக்கப்படுவார்கள்' என்று கூறினார்? ஏனெனில், அவர்கள் அதிகாரம் பறிக்கப்பட்டு ஒடுக்குமுறைக்குள் ளாகுவதனால், அந்த நிலையிலிருந்து கொண்டு வாழ்வின் நீதி, அநீதிகளை மற்றவர்களிலும் விட துல்லியமாக உய்த்துணரக்கூடிய பாக்கியத்தினைப் பெற்றிருக்கிறார்கள் என்பதனா லேயே என்று நான் கருதுகின்றேன். இந்த நாட்டிலும் தற்சமயம் பௌத்த சிங்களவர் அல்லாதோருக்கு அந்தப் பாக்கியம் கிட்டியிருக்கின்றது. இதற்கு ஒரு சின்ன உதாரணமாக ஒரு சம்ப வத்தை நான் காட்டலாம். சந்திரிகா ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் 'பௌத்த சிங்களவரின் உரிமைகளைக் காக்கும் அதே வேளை யில் சிறுபான்மையினரின் கௌரவத் தையும் காப்போம்...' என்று உரையாற்றியவுடன் தெரிந்தவர்கள் எல்லோரிடமும் உரை எப்படி இருந்தது என்று மறைமுகமாக இதனை விசாரிக்கத் தலைப்பட்டேன். என்னுடைய சிங்கள நண்பர்கள் எல்லோரும் இடதுசாரிகள், தாராள வாதிகள் உட்பட ஒருவர் மீதியின்றி நன்றாயிருந்தது என்று புகழ்ந்தார்கள். எல்லாத் தமிழ் நண்பர்களும், பௌத்த சிங்களவருக்கு உரிமை, எங்களுக்கு கௌரவம் மட்டுமா என்று பொருமினார்கள். ஆகவே மனிதர்களில் தவறில்லை. அவர்கள் சமூகத்தில் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதைப்பொறுத்தே சிலர் பாக்கியசாலிகளாவதில்லை.

இவ்வகையில் கைமேல் தரப்பட்ட இந்தப்பாக்கியத்தினை, '...பாவம் இன்னமும் கழுவப்படவில்லை... புத்த பெருமானையும் கூடத் தாக்கியிருக்கிறது...' என்று இவ் வண்ணம் கூறி நாசமறுப்பான் கைவிட்டு, தனக்குக் கொடுக்கப்பட்ட விசேட அந்தஸ்தினைத் தானாகவே பறிகொடுக்கத் தயாராவது துரதிருஷ் டவசமானது. வெறும் வார்த்தைப் பிரயோகங்களால் மேலோட்டமான 'மரியாதை' கண்டனங்களைத் தெரிவிப்பதைவிட்டு சமகால பாக்கிய சாலிகளாக உருவெடுத்திருக்கும் நாங்கள் வீரம் தோய்ந்த குரலில் கர்ச்சிக்க ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் எல்லா மதங்களிலும் உயர்ந்த மதமாகிய உண்மை என்ற மதமானது இலங்கையின் அரசியல் அரங்கில் ஒவ்வொரு நாளும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுக் கொண்டே யிருக்கிறது. அவ்வாறே நாங்கள் செய்யத் துணியும் பொழுது தான் கடவுளும் தான் எங்களுக்கு இந்தப் பாக்கியத்தை ஈந்ததற்காக மகிழ்வார். ○

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## உண்மை அதுவல்ல!

'இலங்கை திராவிடர் இயக்கம்' பற்றிய ஒரு விவாதத்தில், தமிழ் நாட்டவரான எஸ்.வி.ஆர். வலிந்து தோழர் ராமமூர்த்தி மீது சுமத்தியுள்ள அபாண்டங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்பதை மட்டும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

பெரியார் ''பார்ப்பானையும், பாம்பையும் கண்டால், முதலில் பார்ப்பானை அடி'' என்கிற விதமாக எழுதவே இல்லை என்பதாக ஏற்றுக் கொண்டாலும், அவ்வாசகம் திராவிடர் கழக பிரச்சார சுவரெழுத்துக்களிலும், மேடைப் பேச்சுக்களிலும் பரவலாக இடம்பெற்றது என்பது உண்மை. இதற்கும் தோழர் ராமமூர்த்தி தான் பொறுப்பாளியா? இயக்கத்தின் தலைவர் என்கிற வகையில் இதில் பெரியாருக்கு எந்தப்பொறுப்புமே கிடையாதா?

தோழர் ராமமூர்த்தி ஒரு பார்ப்பனர் என்பதை தங்களுக்குச் சாதகமாக்கி, எல்லாப் பழியையும் அவர் தலையில் சுமத்துவது இங்கே சிலரது தொழிலாகி விட்டது.

எனினும் பெரியார் ஈ.வெ.ராவுக்கும், தோழர் ராமமூர்த்திக்கும் இருந்த நட்புறவு பற்றியும், தோழர் ராமமூர்த்தி பற்றியும் சில தகவல்களை 'சரிநிகர்' வாசகர்களுக்கு தர விரும்புகிறேன்.

தோழர் ராமமூர்த்தி 1952ல் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர் என்ற உண்மை பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இந்தத் திருமணம், சீர்த்திருத்தத் திருமண விளம்பரம் இல்லாமலே நடந்தது என்பதும் முக்கியம். இதற்கான வரவேற்பு நிகழ்ச்சியை கட்சித்தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்நிகழ்ச்சிக்கு, பெரியாரையே தலைமை தாங்க அழைத்தார் தோழர் ராமமூர்த்தி. அன்றைய திராவிட இயக்க - இடதுசாரி மோதலின் சூழலில் பெரியார் தலைமை தாங்குவதை சில கட்சித்தோழர்கள் விரும்பாமல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. ஆயினும், பெரியாரின் தலைமையில் தான் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. (ஆதாரம்: பி.ராமமூர்த்தி: ஒரு போராட்டச் செம்மலின் வாழ்க்கைப் பணயம், பக்.306-308)

பெரியாரிடம் தோழர் ராமமூர்த்தி தனது கலப்புத் திருமண முடிவை முதல் சந்திப்பிலேயே வெளிப்படுத்தினார். அதற்குப் பெரியார் தலைமை ஏற்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டதாக அந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, பெரியார் தனிப்பட்ட எந்த ஒரு பார்ப்பனர் மீதும் பகைமை பாராட்டியவரல்ல என்ற உண்மையை அவரே கூறியுள்ள தகவலும் அதே நூலின் 134ம் பக்கத்தில் உள்ளது.

எனினும், பார்ப்பனர் மீதான பொதுவான ஐயம், தோழர் ராமமூர்த்தி மீது மட்டுமின்றி தோழர் உமாநாத் போன்ற சில கம்யூனிஸ்டுகளின் மீதும் பெரியாருக்கு இருந்தது. தனது அன்புக்குப் பாத்திரமான இளம் கம்யூனிஸ்ட் ஊழியரான தோழியர் பாப்பா அவர்கள், தோழர் உமாநாத் என்கிற பாரப்பனரைக் கலப்புத் திருமணம் செய்ய எண்ணியது பற்றிநேரில் தெரிவித்தபோது தோழர் உமாநாத் பார்ப்பனர் என்பதற்காக மிகுந்த ஆட்சேபம் தெரிவித்த பெரியார், அவர் பற்றி அறிந்து பின்பு மன்னிப்பு கேட்டதோடு, திருமணத்திற்கு வருகை தந்து ''நான் பெண் வீட்டுக்காரன்'' என்று கூறி வாழ்த்திய தகவலும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஆதாரம்: ஈ.வெ.ரா.பெரியார் வாழ்வும் பணியும் பக். 176-185)

தாழ்த்தப்பட்ட மக்கள் (தலித்துகள்) மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் தோழர் ராமமூர்த்தி செயல்பட்டமையையும், பார்ப்பன சாதிவெறியர்களுடன் அவர் மோதிய சூழல்களையும் மேற்குறிப்பிட்ட அவரது வாழ்க்கை வரலாற்று நூலில் (பக். 88-97) பதிவு செய்யப்பட்டுள்ளது.

தோழர் ராமமூர்த்தி தவறே செய்யாதவர் என்றோ குறைபாடுகளற்றவர் என்றோ கூறவில்லை. ஆனால், பெரியார் ஈ.வெ.ரா. தவறுகளுக்கு அப்பாற்பட்டவர் என்கிற படிமம் சிலரது அரசியல் நோக்கங்களுக்காக தற்போது வலியுறுத்தப்பட்டு வருகிறது. அது பெரியார் குறித்த சரியான மதிப்பீட்டிற்கு ஏதுவானதாக அமையாது. பெரியார் பல தவறுகள் செய்திருந்த போதிலும், அவர் மிகவும் பெருந்தன்மையானவர், அற்பப் புத்தி இல்லாதவர். பிறரை இழிவுபடுத்தி அவருக்குப் புகழ் சேர்க்கும் முயற்சி அவருக்கு உடன்பாடாக இருந்திராது.

**சூரியசந்திரன், சென்னை**

## தேசியம் பன்முகத்தன்மைக்கு எதிரானது !

கொ.றொ.கொன்ஸ்றன்றைனின் 'வடிவம் கோரும் தேசியம்' அதன் வடிவங்களைக் குழப்பிக்கொண்டு புரிந்துகொண்டதாக வடிவமெடுத்திருக்கின்றது. தேசியவாதம் பன்முகத் தன்மையுடையதாக இவர் கருதுவது ஏன் என்பது தெளிவாகவில்லை. தேசியம் பன்முகத்தன்மையின் எதிரியாகவே என்றைக்கும் இருந்து வந்திருக்கின்றது. தன்னை உருவாக்கும் வரலாற்றுத் தன்மையைப் பொறுத்து ஒவ்வோர் தேசியமும் வேறுபடுகிறது. அதனால் பன்முகமானது என்பது தேசியம் என்ற பெரும் கதையாடலை புறந்தள்ளி அப்பெரும் கதையாடல் பல வடிவுகளில் இருக்கிறது என்று பேசுவதாகும்.

காலனித்துவ தேசியம் அடக்குமுறைக்கெதிராக கிளர்வதற்காகவே மரபின் புத்துயிர்ப்பைக் கோரி நின்றது. தவிர அதனை அடிப்படையில் கொண்டதல்ல. பின்பு மதம், தூய்மைவாதம் என்ற கதையாடல்களை அத்தேசியத்தைத்தொடர்ந்து பாதுகாக்கவே பயன்படுத்தியது. இவ்வாறாக பிற்போக்குத்தனங்களை மீள் உருவாக்கம் செய்தது என்பதில் ஐயமில்லை. இதையேதான் அனைத்து தேசியங்களும் செய்கின்றன. நவீன மயமாக்கலின் அல்லது முற்றிலும் புதியதான சமூக தொடர்பாடல்களின் எதிரியாகவே தேசியம் விளங்குகிறது.

முரண்களை இறுக்கிக்கட்டிவைத்து, மக்கள் குழுக்களுக்கிடையிலான உறவாடலின் எல்லைகளை தேசியம் நிர்ணயிக்கின்றது. ஒன்றுபட்ட தன்மையிலான உணர்வுந்தலால் பூகோள அடிப்படையில் விலகிநிற்கும் நாடுகள் ஒரே தேசியத்திற்குள் வருவது இந்த பின் காலனித்துவ உலகில் எவ்வளவு சாத்தியமானது? எவ்வாறு அனுமதிக்கப்படும்?

தேசியம் என்பது சிக்கலான கருத்தாக்கம் தான். ஆனால் அது ஒரு பெருங்கதையாடலாக மக்கள் குழுக்களில் ஆதிக்கம் செலுத்துகின்றது - செலுத்தியது என்பது தெளிவானது.

தேசியவாதத்திற்கு மிகைப்படுத்தல் பண்பு வருவது எதனால்? வெறும் இனவாதமாக, மொழி வெறியாக எல்லாம் தேசியத்தின் வடிவங்கள் மாறுவது எதனால்? அதன் சர்வாதிகாரப்போக்கு கேள்விக்கு உள்ளாக்கப்படும் பொழுதுகளில் - அதன் கட்டமைவுக்குள் இருக்கும் குழுக்களின் தலைநிமிர்வுகளில் பொறுக்காத தன்மையால், இந்த வலிய ஆயுதங்களை தேசியவாதம் தத்தெடுத்து உள்வாங்குகிறது. இதற்கு உலகெங்கும் நூற்றுக்கணக்கான ஆதாரங்கள் உண்டு.

'பிரிதலி'ன் இருத்தல் பல்தேசியங்களைப் பேணுவதாக அன்றி சமூக தொடர்பாடலை அபிவிருத்தி செய்வதாக அல்லது மாற்றி புனரமைப்பதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

உலகமயமாக்கப்பட்ட பொருளாதார கட்டமைப்பைக் காப்பதற்கு பல்தேசியங்களுக்கிடையிலான நல்லுறவை நிலைநாட்டி அவைகளின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காகவும் தேசியத்தை பொன்னாகப் பேணுதல் அவசியமாகிறது. தொழிநுட்ப ரீதியான சர்வதேச எல்லை உடைவுகள் பல்தேசியக் கம்பனிகளின் நலனுக்காக மட்டுமே உபயோகிப்படுகின்றது. சர்வதேசியங்களின் உடைவுக்கு சிறுதேசியங்கள் நல்வரவு கூறுதல் என்பது முற்றும் முரணானது.

கருத்துக்கும் செயலுக்குமிடையிலான உறவுகளின் விளக்கத்தை 'செயற்பாட்டுத்தளத்தில் தேசியவாதமானது பன்முகத்தன்மையானது. கருத்தாக்கத் தளத்தில் இது ஒருமைப் பாடெய்திய கருத்தாக்கமாகக் கொள்ளப்படுகின்றது' என்ற வடிவில் கொ.றொ. கொன்ஸ்றன்றைன் கோரி நிற்கிறார். தேசியம் என்ற பெரும் செயல் தேசியம் என்ற பெரும் கருத்தை கட்டிக்காப்பதற்காகவே எப்பொழுதும் இயங்குகிறது. அதனால் மதம், இனம், மொழி என்ற கதையாடல்களையும், துணைக்கழைத்துக்கொள்கிறது. 'தேசியம்' என்ற செயல் பன்முகத்தன்மையதாக மயங்கித் தோன்றுகிறது அவருக்கு.

'தேசியவாதக் கருத்துக்கள் மனித நடத்தையினைத் தீர்மானிக்கும் தன்மை வாய்ந்தன' என நம்பும் கொ.றொ.கொன்ஸன்றைன் 'தேசியவாதமானது கற்பிதமாக இருக்கலாம். அது நான் வாழும் சமூகத்தால் நான் பிறத்தியாராகக் கருதப்பட்டு என் மீது திணிக்கப்படும் பொழுது அது எனது வாழ்நிலை யதார்த்தமாகிறது' என்று தேசிய கதைக்கு காது கொடுத்து அதற்கு பன்முகத்தன்மை எனும் போலிமுகம் கொடுக்க எத்தனிப்பது அபத்தம்.

வி. கௌரிபாலனின் கதை அற்புதமாக இருந்தது. படத்தின் வரையப்பட்ட சித்திரத்தை எங்கள் மனங்களில் அதன் நிஜத்தை தெளிவாக்க முயற்சிக்கின்றது. அற்புதமான மொழி நடை தொடர்ந்தும் இப்படியான கதைகளை படிக்க மனம் அவாவுகிறது.

**சேனன், பிரான்ஸ்**

## கடைசிப்புகலிடமான கம்பன் விழா!

கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களே;

எவ்வரசு யாழ்ப்பாணத்தைச் சின்னாபின்னப்படுத்தி உங்களது கம்பன் கோட்டத்தைத் தற்கொடைப் புலிகளின் தலைமையகம் என்று கூறியதோ; எவ்வரசு நீங்கள் போற்றுகின்ற தமிழின் அழிவைச் செய்துகொண்டிருக்கின்றதோ; எவ்வரசு யாழ்ப்பாணத்தின் வீழ்ச்சியில் குதூகலம் கொண்டாடியதோ அதே அரசின் இரு அமைச்சர்கள் உங்கள் விழாவின் நாயகர்கள். அவர்களை அழைத்துத் தான் விழா ஒன்று தமிழுக்கு எடுக்கப்பட வேண்டுமாயின் அன்னை மொழிக்கு அவ்வாறான விழாக்கள் ஒன்றுமே தேவையில்லை. அது தேய்ந்து அழிந்து போனாலும் பரவாயில்லை!

ஜெயராஜ் அவர்களே; யாழ்ப்பாணத்திலாயினும் சரி, இல்லை கொழும்பாயினும் சரி, நீங்கள் தங்கியிருக்க வேண்டி நிர்பந்திக்கப்பட்டவர்கள் பிற்போக்கு வாதிகளும் விளம்பர விரும்பிகளுமே என்றால் மிகையில்லை. அவர்களினூடு உங்கள் இலக்கை அடைய சிலவற்றை இழக்கத் தான் வேண்டும்; ஏற்றுக்கொள்ளுகின்றோம். ஆனால், இழப்பு எமது இலட்சியத்தையே அடித்துச் செல்வதாய் இருக்கக் கூடாது. பேரா. கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதுபோல நாவலர் பெருமான் சமயப் பேணுகைக்காக அன்று செய்தது காலத்தின் தேவை கருதி. இன்றும் அதைத் தூக்கிப் பிடிப்பவர்கள் சமூகத்தின் சகதிகளினுள் இன்னும் அமிழ்ந்துள்ள மூடரே.

மறைக்கப்பட்டதாக ஓலமிடப்படும் நாவலரின் சிலையை சந்தியில் வைக்க வேண்டுமென்று கூறுவதில் உள்ள நோக்கம் சமூகத்தின் பின்னடைவுகருதியே என்பது எவருக்கும் விளங்கக் கூடியதே.

இது கம்பன் விழாவிற்கும் பொருந்தும், துரதிர்ஷ்டம், இலங்கையின் இடதுசாரி முற்போக்காளர்களும், வரலாற்றுக் கலாநிதிகளுக்கும் கடைசிப் புகலிடமாக இது உள்ளதுதான்!

**சித்தாந்தன், யாழ்ப்பாணம்**

## கழுதைப் பொதி தீர்க்க உதவாது!

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் சிற்றூழியர்கள் வெற்றிடம் தொடர்பாக சுமார் ஒருவருடத்துக்கு முன்னர் விண்ணப்பம் கோரப்பட்டது. விண்ணப்பதாரிகள் நேரடியாக அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டது. ஆனால், ஒருவரும் நியமிக்கப்படவில்லை. மீண்டும் அதே விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டார்கள். அப்பொழுதும் நியமிக்கப்படவில்லை. விண்ணப்பம் ஒன்றை அனுப்பும் போது அதற்கு ஏற்படும் செலவுகளை சம்பந்தப்பட்டோர் அறியாமலும் இல்லை. உண்மையில் இந்த அப்பாவி வேலையற்ற இளைஞர்கள் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை எந்தவித ஒழிவுமறைவும் இன்றிக் கூறலாம்.

ஒதுக்கீடு இல்லை, அதற்கான காடர் இல்லை என்ற சாக்குப்போக்குகள் என்றுமே ஏற்றுக்கொள்ளக்கூடியதும் இல்லை. இது மாத்திரமல்ல இம்மாகாணத்தில் சில அமைச்சுக்கள் பிரபல நாளாந்த பத்திரிகைகளில் வெற்றிடங்கள் தொடர்பாக அறிவித்தல்களை ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து பிரசுரிக்கிறார்கள். ஆனால் அந்த வெற்றிடங்கள் தொடர்பாக நேர்முகப் பரீட்சைகள் கூட நடத்தப்படுவதில்லை. இதற்கு ஓர் உதாரணம் கடந்த வருடம் ஒப்பந்த அடிப்படையில் பொறியியலாளர்கள், மொழிபெயர்ப்பாளர்களை பத்திரிகைகள் மூலம் விண்ணப்பிக்கும் படி அழைத்திருந்ததே.

தங்கள், தங்கள் பெயர்களை பத்திரிகைகளில் பிரசுரம் செய்து விளம்பரம் தேடவிரும்பும் அதிகாரிகள் தங்கள் சொந்தப்பணத்தை செலவழிப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அரசாங்கப் பணம், மக்கள் பணம் என்பதை இந்த அதிகாரிகள் எப்பொழுதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். தாங்கள் செய்யும் குளறுபடிகளை விசாரிக்கவோ, நடவடிக்கை எடுக்கவோ இங்கு யாரும் இல்லையென்ற இறுமாப்பில் இவர்கள் நடந்து கொள்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே சுமார் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்த அமைய ஊழியர்களும் இதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்களையும், சம்பந்தப்பட்ட அமைச்சு சற்று கவனத்தில் எடுக்க வேண்டும். சாகும்வரை ஒருவர் அமைய ஊழியராக இருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இப்படியான குளறுபடிகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகள் இனம்கண்டு தீர்வு காண முன்வரவேண்டும். இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு எந்தவித கழுதைப் பொதிகளினாலும் தீர்வு காணமுடியாது என்பது உண்மையாக இருந்தாலும், எங்களால் தீர்த்துக் கொள்ளக் கூடியவற்றுக்கு நாம் தீர்வுகாண் முயற்சிக்க வேண்டும்.

**துட்டகைமுனு, திருகோணமலை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்

## பதில் என்ன?

தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு, கண்டி இந்துக் கோவில்களையும், கடைகளையும் காடையர் தகர்ப்பதற்கு நியாயம் வழங்கியது.

கொம்பனித்தெரு குண்டு வெடிப்போ கொழும்பு விவேகானந்தா மேட்டு விடுதிகளை பொலிஸார் முற்றுகையிட்டு காடைத்தனம் செய்வதற்கு நியாயம் வழங்கியது.

இந்த விடுதிகளில் தங்கியிருந்த மக்களை நாய்களைப் போல விரட்டி, அவரது உடமைகளை வீதியில் வீசி விடுதியை இழுத்து மூடிச் சீல் வைத்து விட்டுச் சென்றுள்ளனர் பொலிஸார்.

கொம்பனித்தெரு குண்டு வெடிப்புக்குக் காரணமானவர் எனக் கருதப்படும் இந்திராணி விவேகாந்தா மேட்டிலுள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தார் என்பதே இதற்கான காரணமாம்.

ஏற்கெனவே அவசரகால சட்ட விதிகளைப் பயன்படுத்தி பல விடுதிகள், இவ்வாறு திடீர் திடீரென மூடப்பட்டிருந்தன. ஒரு சில இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டும் இருந்தன. இவற்றக்கெல்லாம் பொலிஸ் தரப்பில் சொல்லப்பட்ட காரணம் அங்கு புலிகள் தங்கியிருந்தார்கள், ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்பது தான்.

இது மட்டுமல்ல, இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் கீழ் பல தமிழர்க்குச் சொந்தமான வீடுகளும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் செய்யப்பட்டாலும் இவற்றுக்கான நியாயங்கள் எந்தவிதமான மனிதாபிமான, அடிப்படைஇயற்கை நீதி உரிமைகளையும் மதிக்காமல் செய்யப்பட்ட செயல்கள் என்பதில் ஐயமில்லை.

திடீர் திடீரென ஒரு விடுதியில் புகுந்து, அங்கு இருந்தவர்களை வயது, பால் வேறுபாடு இன்றி வீதிக்கு விரட்டுவதற்கு அவசரகால சட்ட விதிகளின் கீழும் எந்த உப விதிகளும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆயினும் பொலிஸாரின் இந்த மாதிரி நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இந் நடவடிக்கைகள் தொடர்பான எந்த முறைப்பாடுகளும் சரி, பத்திரிகைச் செய்திகளும் சரி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்ததாகத் தெரியவில்லை.

இவை தொடர்பாக எந்தப் பொலிஸாரும் விசாரிக்கப்பட்ட-தாகவோ கண்டிக்கப்பட்டதாகவோ தெரியவில்லை.

ஒரு வேளை அரசாங்கத்தின் கோட்பாடும் அதுவாக இருப்பதால்தான் அது பேசாமல் இருக்கிறதோ என்னவோ?

புலிகளை அழிப்பதற்காக, முழுப் பிரதேசத்தையுமே குண்டு போட்டு துவம்சம் செய்வதை தனது நீதியாக கொண்டது இந்த அரசாங்கம்.

தேவாலயங்களுக்குள்ளும் பாடசாலைகளுக்குள்ளும் புலிகள் இருக்கலாம் என்பதற்காகத் தேவாலயங்களையும் பாடசாலைக-ளையும் கூட குண்டுபோட்டுத் தகர்க்கத் தயங்காதது இந்த அரசாங்கம்.

உணவுப் பொருட்களை புலிகள் அபகரிக்கிறார்கள் என்று கூறியபடி வடக்குக்கு உணவுப் பொருட்களை அனுப்புவதையே தடை செய்தது இந்த அரசாங்கம்.

இறந்தவர்களின் பெயர்களுக்கும் ஓய்வூதியம் போகிறது என்று கிடைத்த செய்திக்காக, ஓய்வூதியப் பணத்தையே அனுப்பாமல் தடுத்தது இந்த அரசாங்கம்.

ஆகப், பொலிஸாரும், அரசின் அதே வழியில் செயற்படுகிறார்கள் என்பதனால்தான் அவர்கள் மீது எந்த விசாரணையும் செய்வதில்லைப் போலும்..

ஆனால் ஒரு கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

"ஒரே தேசம், ஒரே மக்கள்" என்று சதா பீற்றும் இந்த அரசாங்கமும், அதன் தலைவியும், சுதந்திரத்தின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இந்த வேளையிலும் தமிழர்களுக்கு இங்கு சுதந்திரம் கிடையாது என்பதை ஒப்புக்கொள்கிறதா?

ஒப்புக்கொண்டால் சரி.

விடுதிகளில் மட்டுமல்ல, இனி வீதிகளிலும் தமிழர்கள் தாக்கப்-படுவார்கள் என்பதை வெளிப்படையாக அறிவித்துவிடலாம்.

அப்போது அவர்களுக்கும் வசதியாக இருக்கும்.

துப்பாக்கிச் சூட்டுக்கும், செல்லடிக்கும் அகப்பட்டுச் சாகப் பயந்து, கொழும்புக்கு ஓடி வரமாட்டார்கள். வந்து, இப்படித் தெருவிலே நிற்க மாட்டார்கள்.

தமது வழி எதுவோ அதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

ஒப்புக்கொள்ளாவிட்டாலோ,

முதலில் இந்த அடாவடித்தனத்துக்காவது ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

வீதிக்கு மக்களை விரட்டும் "சந்திரிகா மார்க்" ஜனநாயகத்-திற்கு முடிவு கட்ட வேண்டும்.

இதைச் செய்விக்க நமது "தமிழ்த் தலைவர்கள்" என்ன விரட்டப்படும் மக்களை பஸ்வண்டிகளில் ஏற்றி இறக்குவதைத் தவிர! உருப்படியாக நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

◉

# புலிகளுக்கு சிங்களக் கொலை ஏஜன்டுகள்!

-லக்பிம

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், படைத்தளபதிகள் அதே போன்ற மேல்மட்ட உயர் அதிகாரிகளைப் படுகொலை செய்யும் பொறுப்பை விசேட தற்கொலைப் பயிற்சி பெற்ற சிங்கள இனத்தைச் சேர்ந்த மூவரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்படைத்திருப்பதாக லக்பிம என்ற சிங்கள வாரப்பத்திரிகை தலைப்புச்செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும்

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த சில தினங்களுக்கு முன்பு தலதா மாளிகைக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து செல்கையிலேயே இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது நடவடிக்கைகளுக்காக சிங்கள இனத்தவரை ஈடுபடுத்துவதாக இதற்கு முன்பும் தகவல் பரவியிருந்தது. அவர்களின் இராணுவப் பிரிவினுள் சிங்கள இனத்தவர்கள் உள்ளதாகவும், கடந்த காலத்தில் அடிக்கடி தகவல்கள் வெளிவந்தன. ஆனால், அவர்களின் தற்கொலைக் கெரில்லாக்கள் மத்தியில் சிங்களவர்கள் உள்ளதாகத் தகவல் வெளிவந்துள்ள்து இதுவே முதற் தடவையாகும்.

எவ்வாறெனினும் இச்சிங்களக் கெரில்லாக்கள் பற்றி மேலதிக விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இச்செயற்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது, அவை புதிய போக்குகள் இரண்டைக் காட்டி நிற்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்க செயற்பாடுகளின் பின்னணியில் சிங்கள இனத்தவர்களும் தொடர்புற்றிருப்பது, கொழும்பில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், லண்டன் நகரிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்க அலுவலகத்துடன் நேரடியாகவே தொடர்புகளைப் பேணுவது என்பனவே அப்புதிய இரு போக்குகளாகும் என அவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் கொழும்பு முகத்துவாரத்தில் சயனைற் உண்டு தற்கொலை செய்து கொண்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரிடம் இருந்த செலூலர் தொலைபேசியும், பாணந்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டுச் சாக்குடன் இருந்த செலூலர் தொலைபேசியும், அவ்விரு தொலைபேசிகளினூடாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூன்றாவது தொலைபேசியும் இந்தியாவிலுள்ள சில நபர்களிடமிருந்து லண்டன் நகரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அலுவலகத்துடன் பேசுவதற்கு பாவிக்கப்பட்டுள்ளன. அத்தொலைபேசிகள் மூன்றும் கார்ட் (CARD) பாவித்துப் பேசும் செலூலர் தொலைபேசி இனத்தைச் சேர்ந்தவை என்பதுடன் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் போலி முகவரிகளே பாவிக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலதிகமாக தலதா மாளிகைக் குண்டுச் சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பாவித்துள்ள செலூலர் தொலைபேசி பற்றியும் பொலிசுக்கு தகவல்கள் கிட்டியுள்ளது. அது சிங்கள இனத்தவரின் பெயரிலேயே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அது தொடர்பான விசாரணைகள் இன்னும் நடைபெற்று வருகின்றன.

○

## சுவரொட்டி!

யாழ்மாவட்டத்தில் சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டுள்ளது. இந்தச் சுவரொட்டியில் ட்ரவுசரும், ஷேர்ட்டும், தொப்பியும் அணிந்த ஒருவர் புலியொன்றை கழுத்தில் பிடித்து தூக்கி வைத்திருக்கிறார். இவரைச் சுற்றிவர மூன்று நான்கு பேர் நின்று பைலா போடுவது போன்ற காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. சுற்றிவர நின்று பைலா போடுபவர்களின் முதுகில் அமெரிக்க, பிரிட்டிஷ் கொடிகள் வரையப்பட்டுள்ளன. இன்னொரு சுவரொட்டி புலி ஒன்று பிஸ்டலால் தன்னைத்தானே சுடுவது போல் சித்திரிக்கப்பட்டுள்ளது. இவை யாவும் இராணுவத்தால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள். ○

எழுவான்

## இது சுதந்திரமா?

விஞ்ஞான, தொழிநுட்பத் துறை அமைச்சரும், லங்கா சம சமாஜக்கட்சியின் பொதுச் செயலாளருமான பெட்டி வீரக்கோன் பாராளுமன்றக் கட்டிடத்தொகுதி முன் இடம்பெற்ற சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவில்லையெனக் கூறப்படுகிறது.

அதற்குக் காரணமாக அவர் தமது கட்சி இதனை சுதந்திரமாக ஏற்றுக்கொள்ளவில்லையெனவும், தாம் இதுவரை எந்தவொரு சுதந்திரதின விழாவிலும் கலந்து கொள்ளவில்லை என்றும், எனினும் 1972ல் இடம்பெற்ற குடியரசு தின விழாவில் மட்டுமே தாம் கலந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். ○

## லக்பிமவுக்கு வெற்றி!

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் பெயருக்கு அவதூறு ஏற்படும் விதமான கட்டுரை ஒன்றை 1995 பெப். 19ம்திகதி பிரசுரித்ததாக லக்பிம பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பந்துல பத்மகுமாரவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பை, கடந்த வியாழக்கிழமையன்று வெளியிட்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்தன, பந்துல பத்மகுமாரவை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் சுற்றவாளியாக்கி விடுவித்துள்ளார். ○

## இது இயூகோஸ்லாவியாவுக்கு மட்டுமல்ல...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியீடு : ... இல. 18/02, அல்லோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : ... இல. 07. ... இரத்மலானை. 10.02.98